V211, 12y7n
N60

109077

# தமிழர் தளபதிகள்

புலவர். கா. கோவிந்தன், எம். ஏ.

வள்ளுவர் பண்ணை
137, பிராட்வே - சென்னை-1

159277

வெளியீடு 52

உரிமை பண்ணைக்கே

முதற் பதிப்பு அக்' 60

**விலை ரூபாய் 2-50**

அச்சிட்டோர்

குமுதம் அச்சகம்

சென்னை—2.

V811,12 y7:x

N60

# பதிப்புரை

பண்டைத் தமிழ் வேந்தர் வெற்றி பெற்றார்கள் எனக் கூறுவதெல்லாம், அவர்தம் படைத் தலைவர்கள் பெற்ற வெற்றிகளே ஆகும். அத்தகைய படைத் தலைவர் பலர் இலக்கியங்களில் காணப்படுகின்றனர். அவர்களுட் சிலர் இந் நூலில் இடம் பெற்றுள்ளனர்.

முதல் பன்னிருவர் சங்க இலக்கியங்களிலும், வில்லவன்கோதை சிலப்பதிகாரத்திலும், பரஞ்சோதியார் பெரிய புராணத்திலும், கருணாகரன் கலிங்கத்துப் பரணியிலும் காணப்படும் படைத் தலைவர்கள் ஆவார்கள். நரலோக வீரன் கல்வெட்டுக்களை ஆதாரமாகக் கொண்டு எழுதப்பட்ட படைத்தலைவன் ஆவான்.

இப் பதினாறு படைத் தலைவர்களின் வீரம், கொடை, செயல் ஆகியவை இந் நூற்கண் விரிவாக விளக்கப்பட்டுள்ளன. இந் நூல் மாணவர்க்கும் பெரியோர்க்கும் பயன்படத் தக்க கருவூலமாகும். இதனை வெளியிட இசைவளித்த ஆசிரியர்க்கு நன்றி!

**வள்ளுவர் பண்ணையார்.**

## பொருளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | தோற்றுவாய் | 9 |
| 2. | அதியன் | 40 |
| 3. | குதிரைமலைப் பிட்டன் | 46 |
| 4. | கோடைப் பொருநன் | 55 |
| 5. | திருக்கண்ணன் | 61 |
| 6. | திருக்கள்ளி | 73 |
| 7. | திருக்குட்டுவன் | 78 |
| 8. | நாஞ்சில் வள்ளுவன் | 85 |
| 9. | நாலை கிழவன் நாகன் | 96 |
| 10. | போரூர்ப் பழையன் | 101 |
| 11. | மத்தி | 109 |
| 12. | மோகூர்ப் பழையன் | 114 |
| 13. | வில்லவன் கோதை | 127 |
| 14. | பரஞ்சோதியார் | 134 |
| 15. | கருணாகரன் | 143 |
| 16. | நரலோக வீரன் | 152 |


# தமிழர் தளபதிகள்

## தோற்றுவாய்

உலகியல் அமைப்பு என்றும் ஒன்றாகவே இருந்ததில்லை. காலந்தோறும் அது மாறிக்கொண்டே வந்துளது. என்றாலும், உலகமக்களின் அடிப்படைப் பண்பு எக்காலத்தும் ஒருபடித்தாகவே உளது. இன்றைய மக்கள் உணவு முறையும், கற்கால மக்கள் உணவு முறையும் மலையும் மடுவும் போல் மாறுபடும் என்றாலும், உணவு உண்டால் அன்றி உயிர்வாழ்தல் இயலாது என்ற அடிப்படைப் பண்பில் இரு காலத்தவரும் ஒருமைப்பாடுடையவரே. அது கற்கால மக்கள் வாழ்ந்த மலைக்குகைக்கும், இக்கால மக்களின் வாழ் இடமாம் மாடமாளிகைக்கும் இடையில் எத்துணையோ வேறுபாடு உளது என்றாலும், இருக்க ஓர் இடம் தேவை என்பதில் அவ்விருகால நிலைக்கும் இடையில் சிறுவேறுபாடு தானும் இடம்பெறவில்லை. கற்கால மனிதன் மரவுரியும் மானின் தோலும் உடுத்தான். இக்கால மனிதன் பால்நுரை நிகர்க்கும் மெல்லிய தூய ஆடை அணிகின்றான் என்றாலும், உடலை மறைக்க ஒன்று தேவை என்ற உலகியல், அன்றும் இன்றும் ஒன்றாகவே உளது. அதைப்போலவே, அக்கால மக்களுக்கு ஆசை ஊட்டிய பொருள்களும், இக்கால மக்களுக்கு ஆசை ஊட்டும் பொருள்களும் நம்மிடையே பல்வகையானும் வேறுபடுகின்றன என்றாலும், ஆசைக்கு அடிமைப்பட்டவரே அவர்களும் இவர்களும் என்பதிலும், அவ்விரு

வர்தம் ஆசைகளும், மண், பொன், பெண், புகழ் ஆகிய இவற்றையே அடிப்படையாகக் கொண்டு எழுந்தன, எழுகின்றன என்பதிலும், இவ்வாசைகள் காரணமாகப் போர் மேற்கொள்வதில் அக்காலமக்களும் இக்காலமக்களும் ஒத்து நிற்கின்றனர் என்பதிலும் ஒருமைப்பாட்டினையே காண்கிறோம்.

உணவும் உடையும் உறையுளும் தேவை என்பதை உணர்ந்து, அவற்றை அடைதற்காகவென்றே போர்மேற்கொள்வதில் இருகாலமக்களும் ஒத்து நிற்கின்றனர். உணவும் உடையும் உறையுளும் எக்காலமக்களுக்கும் இன்றியமையாதனவாகவே, அவற்றை அடைய மேற்கொள்ளும் போரும் இருகாலமக்கட்கும் இன்றியமையாததாகிவிட்டது. அக்காலமக்கள் மேற்கொண்ட போர்முறைக்கும் இக்காலமக்கள் மேற்கொள்ளும் போர்முறைக்கும் பெரிதும் வேறுபாடுளது என்பது உண்மையேயென்றாலும், உணவும் உடையும் உறையுளும் தேவை என்பதை உணர்ந்து, அவ்வுணர்வு வரப் பெற்றமையால் மண்ஆசை, பொன்ஆசை, பெண்ஆசை, புகழ்ஆசை ஆகிய ஆசைகட்கு அடிமையாகி, அதுகாரணத்தால் போர் மேற்கொள்வது இருவர்க்கும் இன்றியமையாததாகிவிட்டது என்பதில் ஒருமைப்பாடே நிலவுகிறது.

உலகியல் நிகழ்ச்சியில், போர் ஓர் இன்றியமையாத உறுப்பு என்பது உண்மையாகவே, அப்போர்புரியும் படை, உலகியற் பொருள்களுள் தலைசிறந்த தகுதிப்பாடுடையதாகிவிட்டது. உடலுக்கு உறுதுணைபுரியும் உறுப்புகளே போல், உலகாளும் அரசர்க்கு உறுதுணைபுரியும் உறுப்புகள் ஆறனுள், படை தலைமைப்பாடுடையது என்ற இவ்வுண்மையை உணர்ந்தமையாலன்றே, "படை, குடி, கூழ், அமைச்சு, நட்பு, அரண், ஆறும் உடையான் அரசருள் ஏறு" என்ற குறளில், படைக்கு முதலிடம் தந்து போற்றி



யுள்ளார் வள்ளுவப் பெருந்தகையார். நாட்டின் நல்லாட்சிக்கு நற்றுணைபுரிவது படையே என்பதை உணர்ந்துள்ளமையால், வல்லரசும் நல்லரசும் ஆகிய இன்றைய உலக அரசுகள் அனைத்தும் அரசியற் பண்டாரத்தின் பெரும் பகுதியைப் படைப்புறக் கணிப்பிற்கென ஒதுக்கி வைக்கின்றன.

படை அமைப்பும், அப்படையேந்தும் போர்க்கருவிகளும் காலந்தோறும் வேறுபடுவது உலகத்தின் இயற்கையாம். இராமாயணகாலத்தில் வானரப்படைகளையும், கரடிப்படைகளையும் காண்கிறோம். மலைகளும், மரங்களும் போர்க்கருவிகளாகப் பயன்பெற்றன. பாரதகாலத்தில் தேர்ப்படை, யானைப்படை, குதிரைப் படைகளைக் காண்கிறோம். வாள், வேல், வில் வழங்கப்பெற்றன. இக்காலத்தில் தரைவழங்கு தாங்கிகளையும், வான்வழங்கு விமானங்களையும், நீர்வழங்கு நாவாய்களையும் காண்கிறோம். அணுகுண்டும், ஆவிக்குண்டும் அச்சுறுத்துகின்றன. ஆக, ஒரு காலத்தில் இருந்த படைஅமைப்பு பிறிதொரு காலத்தில் இல்லை. ஆனால், களத்தில் நின்று மக்கள் போரிட்ட நிகழ்ச்சியைக் கற்காலத்திலும் கண்டோம்; முச்சங்க காலத்திலும், அதற்கும் முந்திய காலத்திலும் கண்டோம்; இராமாயண, பாரதகாலத்திலும் கண்டோம்; இன்றும் காண்கிறோம். படைவரிசையுள் இடம் பெறுவன வானரம், கரடி, குதிரை, யானைபோலும் உயிருள் பொருள்களேயெனினும், தாங்கியும் தேரும் போலும் உயிரில் பொருள்களேயெனினும், அவற்றை இயக்குபவர் மக்கட்படையினரேயாதலாலும், அன்னார் இயக்காராயின் அவை இயங்கா ஆதலாலும், அப்படைகளால் வென்று கொண்ட நாட்டையும் கோட்டையையும் இறுதியில் சென்று கைப்பற்றி ஆள்வது, மக்கட்படையாம் காலாட்படையால் அல்லது பிறவற்றால் இயலாது ஆதலாலும் படைவரிசையுள், மக்கட்படை அன்றும் இடம்பெற்றது; இன்றும்

இடம் பெறுகிறது; என்றும் இடம் பெறும். ஆகவே மக்கட்படையே படைவரிசையுள் சாலச் சிறந்ததாம் என்க.

படைக்கலம் வழங்கு நெறிக்கண், வெடி மருந்தாற்றலும் அத்துணை விரைவுடையதன்று என உணர்ந்து, அணு வாற்றலும், நெய்யாவி நீராவிபோலும் ஆவி ஆற்றல்களும் முழுக்க முழுக்க மேற்கொள்ளப்படும் இக்காலப்போர் முறையைக் காட்டிலும், வாளும் வேலும் வில்லுமே படைக் கலங்களாகப் பயன்படுத்தப் பெற்ற பண்டைக்காலப் போர் முறையிலேயே மக்கள்ஆற்றல் மிகவும் தேவைப்பட்டது. ஆகவே, போர்முறை அறிந்து படைக்கலங்களை வழங்க வல்ல பெருவலியும் பருவுடலும் வாய்ந்த வீரர்களைத் தேடிப் பெற்றுப் பேணிப்புரந்து வந்தார்கள் பண்டைக்காலக் காவலர்கள். அப்பெருவீரர்களின் பேராண்மையினைப் பாராட்டிப் பாக்கள் புனைந்து பெருமைசெய்தார்கள் புலவர்களும். இவ்வாறு, அரசர்கள், பொன்னும் பொருளும், நன்செய்யும் புன்செய்யும் வழங்க, ஆன்றோர்கள் பண் இசைத்தும் பா அமைத்தும் புகழ்மாலைசூட்ட, உலகம் தம்மை மதித்துப் பெருமைசெய்கிறது என்பதை அவ்வீரர்கள் உணர்ந்து கொண்டமையால், அத்தகு பெருவீரம் வழிவழிப் பெருகி ஊழிஊழி வாழவேண்டும் என்பதில் ஆர்வம் காட்டி, வீரர்குலம், மறவர் மரபு என்ற ஒரு தனி இனமே தழைக்க வழிவகுத்து வைத்தார்கள் பண்டைப் படைக்காவலர்கள்.

படையில் பணிபுரிவார் ஒவ்வொருவரும் படைத் தொழில் வல்லவராக விளங்கவேண்டும் என்பதில் விழிப்பாயிருந்தே தேர்ந்து கொள்வதால், அவர்கள் அனைவருமே ஆற்றல் மறவராக விளங்குவர் என்றாலும், அவர் தம் ஆற்றல் அனைத்தையும் ஒருவழிப் படுத்திப் பணிகொள்ளவல்ல படைத்தலைவன் ஒருவன் இல்லானாயின், ஆயன் இல்லா ஆனிரை போல், அவ்வீரர் தம் ஆற்றல் அனைத்தும்



சிதறுண்டு சீரழிந்து போய்விடுமாதலின், அப்போர்வீரர்களைப் பணிகொள்ளவல்ல தலைவன் ஒருவன் தேவை என்பதை உணர்ந்து, அத்தகு போர்வீரர்களுள், அனைத்து வகையாலும் தகுதியுடையான் ஒருவனைத் தேர்ந்து, அவனை அப்படைக்குத் தலைவனாக்கிப் பயன்கொண்டார்கள் பண்டைத் தமிழ்ப் பேரரசர்கள். படையின் பண்பும் பயனும் கூறும் அதிகாரத்தின் ஈற்றுக் குறளாக, "நிலைமக்கள் சாலஉடைத்து எனினும், தானை தலைமக்கள் இல்வழி இல்" என்ற திருக்குறளை, வள்ளுவர் வைத்து அமைத்திருக்கும் திறத்தினை உள்ளுவோமாக.

களம் புகுந்து போரிடும் நாற்படையினும், அந்நாற் படையைக் காலமும் இடமும் அறிந்து களம்புகுத்தும் படைத் தலைவன் திறமே வெற்றி தோல்விகட்குக் காரணமாம் ஆதலின், படைத் தலைவர் தேர்வில், படைவீரர் தேர்வில் காட்டும் விழிப்புணர்ச்சியினும் பன்மடங்கு மிக்க விழிப்புணர்ச்சி மேற்கொண்டு வந்தனர். நிற்க.

நாடாள்வார் நல்லவராயிருந்துவிடுவதினாலேயே நாட்டில் நல்வாழ்வு குடிகொண்டுவிடாது. அந் நாட்டிற்குப் பகைவரால் நேரும் கேடு வராவண்ணம் அந்நாட்டின் நான் கெல்லைகளையும் காக்கவல்ல ஆற்றலும் அந்நாடாள்வார் பால் அமைதல் வேண்டும். கோலுடையார்பால் கொற்றமும் குடிகொள்ளுதல் வேண்டும். அதுவும் அமைந்தால் தான் நல்லரசின் பயனை நாட்டவர் நுகர்தல் கூடும். இந் நாட்டம் உடையவராகி நாடாள்வார் அமைக்கும் நாற்படை, நாட்டெல்லைகளைக் காத்து நாட்டில் அமைதி வாழ்வை நிலைநாட்ட நினையாது, அந்நாட்டின் அரசையே நிலைகுலையச் செய்து நாட்டின் அமைதி வாழ்வை அழித்து அலைக்கழிக்கத் தொடங்கி விடுமாயின், அதைத் தடுப்பது அரிதாகிவிடும். உலகின் அமைதிக்கும் ஆக்கத்திற்கும் பணிபுரியும் பெரு நோக்கும் பெரும் பொறுப்பும் உடைய

தாகுக என, உலக நாடுகள் அனைத்தும் ஒன்றுகூடி அமைத்திருக்கும் உலகப் பேரவை ஆட்சிபுரியும் இக்காலத்திலும், ஒரு சில நாடுகளில், மக்கள் ஆட்சியை அழித்துவிட்டு மறவர் ஆட்சி இடம்பெற்று விடுகிறது என்றால், இக்காலம் போலும் அரசியல் விழிப்புணர்ச்சி வாய்க்கப் பெறாத பண்டைக் காலத்தில், படை மறவர் விருப்பு வெறுப்புகளுக்கு ஏற்ப வேந்தர்களின் ஆட்சி வாழ்வதும் வீழ்வதும் ஆகிவிடுவது மிகமிக எளிதாக இயன்றிருக்கும்.

கோலேந்தியவன் தளர்நிலை நோக்கி, வேலேந்தியவன் வேந்தனாகி விடுதலும், அரியணையில் அமர்ந்திருப்போனின் ஆற்றல் இன்மை அறிந்து அமர்க்களத்தில் நிற்போன் ஆட்சியைக் கவர்ந்து கோடலும் கூடும் என்பதை உணர்ந்திருந்தமையால், படை அமைத்து, அப்படைக்கு ஒரு தலைவனைத் தேர்ந்தெடுக்குங்கால், அப்படைத் தலைவன்பால் உள்ள ஆண்மை, ஆற்றல்களை ஆராய்ந்து நோக்குவதன் முன்னர், அவன்பால் அமைந்துகிடக்கும் பண்புடைமையினை ஆராய்வதிலேயே அக்காலக் காவலர் தம் கருத்தினைப் போக்கி இருந்தனர்.

பழி பாவம் கண்டு நடுங்கும் நல் உள்ளமும், தம் நாட்டவர்க்கும், தம் நாடாளும் தலைவர்க்கும் நன்மையே பயக்கும் நல்லுரைகளை யல்லது வல்லுரை வழங்கா வாய்மையும், பகையரசர், பொன்னையும் பொருளையும் கோடி கோடியாகக் கொட்டிக் கொடுப்பினும் தம் நாட்டு வேந்தனுக்குக் கேடு புரியாமையும், வேந்தன், தமக்குத் தரவேண்டிய தண்ணடை முதலாம் பொருட் செல்வத்தையும், ஏனாதிப் பட்டம் போலும் புகழ்ச் செல்வத்தையும் தரத்தவறியபோதும் தம் கடமையில் தவறாமையும் போலும் நல்லொழுக்கமும் படைத் தலைவர்பால் பொருந்தி யிருக்கவேண்டும் என விரும்பினார்கள் அன்று பாராண்ட பேரரசர்கள்.



மேலே கூறிய பண்புகள், எல்லாமக்களுக்கும் இயல்பாக அமைந்துவிடுவதில்லை. இவை யெல்லாம் கருவிலே வாய்த்த திரு என்பார்கள். இப் பண்புகளில், தலைமுறை தலைமுறையாக வழிவழியாக ஊறிவந்த குடியில் பிறந்தவர்களே நிலைபேறின்றி நிற்பர். "இற் பிறந்தார்கள் அல்லது இல்லை, இயல்பாகச் செப்பமும் நாணும் ஒருங்கு." "ஒழுக்கமும் வாய்மையும் நாணும் இம் மூன்றும் இழுக்கார் குடிப் பிறந்தார்." "அடுக்கிய கோடி பெறினும் குடிப்பிறந்தார் குன்றுவ செய்தல் இலர்." "வழங்குவது உள் வீழ்ந்தக் கண்ணும், பழங்குடி பண்பின் தலைப்பிரிதல் இன்று." வள்ளுவர் வழங்கிய வாய்மைகள் இவை.

பழம் பெரும் குடிவந்த பெருமை இலாதவர்பால், தந்நலம் நோக்காது பிறர்நலமே நோக்கும் உலகப் பற்றும் இராது. தந்நலமே தலைதூக்கி நிற்பதால், அந்நலம் நிறைவெய்த, எத்தகைய இழிசெயலையும் துணிந்து செய்தும் விடுவர். ஆகவே, பழம் பெரும் குடிப்பிறப்பாம் பெருமை அற்றவரைப் படைத் தலைவராகத் தேர்ந்துகொள்ளாதே, "அற்றாரைத் தேறுதல் ஓம்புக; மற்று அவர் பற்று இலர், நாணார் பழி" எனக் குறள் உணர்த்தும் அரசியல் உண்மையை உணர்ந்திருந்தமையால், பழந் தமிழ்ப் பேரரசர்கள், படைத் தலைவர்களாகத் தேர்ந்தெடுக்கப் படுவர். பிறந்த குடி, பண்பில் பிறழாப் பழங்குடிதானா என்பதை ஆராய்ந்து நோக்கி அக்குடி வந்தாரையே படைத்தலைவர்களாகப் பெற்றுப் பெருவாழ்வு வாழ்ந்தார்கள்.

"வேந்தே! தம் படை நடுவே அகப்பட்டுக்கொண்ட நின் தந்தையை ஈன்ற தந்தையைப், பகைவர் நாற்புறமும் வளைத்துக்கொண்டு படைக் கலங்களை ஏவத் தொடங்கும் நிலையில், அப்படையிடையே பாய்ந்து, அப்பகைவர் ஏவிய படைக்கலங்கள் அனைத்தையும் தன் உடலில் ஏற்றுக் கொண்டு ஆரக்கால் கோத்த குடம்போல் நின்று காட்சி

அளித்துக் களத்தில் தான் வீழ்ந்து, நுந்தை தந்தையைக் காத்தவன், இதோ நிற்கும் இவ் வீரனைப் பெற்றவனைப் பெற்ற பெரியோனுவன். அம் மறவன் மரபில் வந்தவன் ஆதலின், இவனும் மேகம் சொரியும் மழைத் தாரைகளை யெல்லாம் இடையில் கிடந்து தான் தாங்கிக்கொண்டு நம்மைக் காக்கும் ஓலைக் குடைபோல், உன்னைக் குறித்து எய்யும் ஒவ்வொரு வேலையும் தன் உடலில் ஏற்றுக்கொண்டு நின்னைத் தாங்குவன். ஆகவே, இவனை நின் படை மறவனுக மேற்கொள்வாயாக'' என அருந்தமிழ் மூதாட்டியாம் ஔவையார், அரசன் ஒருவனுக்கு உரைக்கும் அறவுரையிலும்,

**“ இவற்கு ஈத்து உண்மதி கள்ளே ; சினப்போர்**
**இனக்களிற்று யானை இயல்தேர்க் குருசில் !**
**நுந்தை தந்தைக்கு இவன் தந்தை தந்தை**
**எடுத்துஎறி ஞாட்பின் இமையான், தச்சன்**
**அடுத்துஎறி குறட்டின் நின்று மாய்ந்தனனே.**
**மறப்புகழ் நிறைந்த மைந்தினேன் இவனும்.**
**உறைப்புழிஓலை போல,**
**ம்றைக்குவன் பெரும ! நிற் குறித்துவரு வேலே.’’**

தன் நாட்டு ஆக்களையும் ஆனேறுகளையும் கவர்ந்து சென்ற பகைவர்களை வென்று அழித்து, அவ்வானிரைகளை மீட்டுவர நாட்டு எல்லைக்கண் சின்னுட்களாக நிகழும் போரில், இரு நாட்களுக்கு முந்திப் பங்குகொண்ட தந்தை, பகைவர்களின் யானைப்படைகளை அறவே அழித்து, இறுதியில் அக்களத்திலேயே மாண்டு போனுனைகவும், நேற்று தன் கணவன் களம் புகுந்து போராடி உயிரிழந்துபோனுனைகவும், அன்றும் போர்ப்பறை கேட்டாளாகத், தன் குலம் விளங்க உள்ளவன் ஒருவன் தானே என எண்ணுமல், எண்ணெய் பூசித் தலை முடியவும், ஆடை தேடி அணியவும் அறியா இளையோனுகிய தன் ஒரே மகனுக்குப் போர்க்கோலம் செய்து



பெரிய வேலை அவன் சிறிய கையில் கொடுத்து, புறப்படு மகனே போர்க்களம் நோக்கி என விடை தந்து வழிவிட்ட வீரத்தாயின் திருவுருவை அழகொழுகத் தீட்டிக் காட்டும் ஒக்கூர் மாசாத்தியாரின் உயிரோவியத்திலும்,

**“ மேனுள் உற்ற செருவிற்கு இவள் தன்னை**
**யானை எறிந்து களத்து ஒழிந்தனனே ;**
**நெருநல் உற்ற செருவிற்கு இவள் கொழுநன்**
**பெருநிரை விலங்கி ஆண்டுப் பட்டனனே ;**
**இன்றும், செருப்பறை கேட்டு விருப்புற்று மயங்கி**
**வேல் கைக்கொடுத்து, வெளிது விரித்து உடீஇப்,**
**பாறு மயிர்க்குடுமி எண்ணெய் நீவி**
**ஒருமகன் அல்லது இல்லோள்**
**செருமுகம் நோக்கிச் செல்க என விடுமே.’’**

“ யான் ஒரு மறக்குல மங்கை நல்லாள். என் வயிற்றில் பிறந்து, யான் தந்த பால் உண்டு வளர்ந்த என் மகன், மண்டமர்க்கு உடையான். ஆனுல், ‘அந்தோ ! மகளே ! மண்டமர்க்கு உடைந்துவிட்டான் உன் மகன்’ என்ற வார்த்தை வீதிகளில் வழங்குவதைக் கேட்கின்றனவே என் காதுகள் ! யாது செய்வேன் ? அவ்வுரை உண்மையாயின், அவ் விழிந்தோனைப் பயந்து பாலூட்டி வளர்த்த யானும் இழந்தவள் அல்லவோ ? மறமாசு பட்ட என் மேனி, இனி இம்மண்மேல் உலவாது மடிந்து மறைவதாக ! அவன் பால் உண்ட மார்பை வாள்கொண்டு பிளப்பேனுகுக !’’ என மறங் குன்றிய மகனைப் பெற்றது உண்மையாயின், மாசு தன்னுடையதே என உன்னும் மறக்குலத்து வந்த மாசிலா மணியின் மாண்பு பாராட்டும் காக்கை பாடினியார் நச்செள்ளையாரின் பாலைத்திலும்,

**“ மண்டமர்க்கு உடைந்தனனுயின், உண்டஎன்**
**முலை அறுத்திடுவென் யான், எனச் சினைஇ.’’**

"அந்தோ! என் மகனாக, உன்னைப் பெற்ற யான், உளம் நொந்து உறுதுயர் கொள்வதல்லது வேறு யாது செய்யவல்லேன். ஊன்றி நோக்கினால் உன்னை நொந்து பயனில்லை. பகைமன்னர் கூடி உடற்றும் மண்டமரில் எதிர்த்தார் அனைவரையும் அழித்துவிட்டு, வாட்புண் பெற்று, அக்களத்திலேயே வீழ்ந்து, விழுமிய பெருநிலை பெறுவதை விடுத்து, களிற்றின்மீது எறிந்த தன் கைவேல், அக்களிற்றின் உயிரைப் போக்காதாக, அக்களிறு, தன் முகத்தில் தைத்த அவ்வேலோடே, அக்களமெங்கும் வீர உலா வர, வெறுங்கையோடு வீடு வந்து சேர்ந்து, எம் குடி இதுகாறும் செய்தறியாப் பெரும்பழியைத் தேடித் தந்த உன்னைப் பெற்றெடுத்ததே என் வயிறு, அதையே நோகவேண்டும். மறக்குலத்தார் மாண்பும் மரபும் இன்ன என்பதைக் கல்லாத காளையை ஈன்ற வயிறே, நீ வாழ்விழந்து போவாயாக!" என்று வயிற்றில் அறைந்துகொள்ளும் வீரத் தாயைக் காட்டும் தகடூர் யாத்திரையிலும்,

**"வாதுவல், வயிறே! வாதுவல், வயிறே!**
**நோவேன் அத்தை; நின்னீன் றனனே;**
**பொருந்தா மன்னர் அருஞ்சமம் முருக்கி**
**அக்களத்து ஒழிதல் செல்லாய்; மிக்க**
**புகர்முகக் குஞ்சரம் எறிந்த எஃகம்**
**அதன்முகத்து ஒழிய நீ போந்தனையே;**
**அதனால், எம்இல் செய்யாப் பெரும்பழி செய்த**
**கல்லாக் காளையை ஈன்ற வயிறே!"**

'ஊழிவெள்ளம் ஒருவாறு மறைய, அதையடுத்து, மலைமட்டுமே தோன்ற, மண் தோன்றாதாகிய அத்துணைப் பழங்காலந் தொட்டே, வாட்போரில் வல்லவராகிய வீரர்களைப் பெற்றளிக்கும் பழைமையும் பெருமையும் வாய்ந்த குடியில் வந்த இவன், நாள்தோறும் வெற்றிப் புகழால் வீறெய்துவதில் வியப்பென்ன உளது?' என ஐயன்ஆரி



தனார் அவர்கள் எழுப்பும் ஐயம் அகற்றும் வினாநிலையிலும், போர் மறவர்களின் பழங்குடிப் பெருமை மிளிர்வது காண்க.

**"பொய் அகல நாளும் புகழ்விளைத்தல் என் வியப்பாம்?**
**வையகம் போர்த்த வயங்குஒலிநீர்—கைஅகலக்**
**கல்தோன்றி மண்தோன்றாக் காலத்தே, வாளோடு**
**முன் தோன்றி மூத்த குடி."**

மறவர் குடிவந்த மாண்புமிகு அப்படைத்தலைவர்கள், களம் புகுந்து போருடற்றும் நிலையில், வெற்றி ஒன்றே குறிக்கோளாய் வெஞ்சமர் புரிவர் என்றாலும், அவ் வெற்றியை எவ்வாறேனும் அடைந்துவிடுதல் வேண்டும் 'என்று எண்ணி, அறப்போர் முறையை அறவே கைவிடுவாரல்லர். வெற்றியே குறிக்கோளாம் என்றாலும், அவ்வெற்றி விழுமிய முறையால் வரும் வெற்றியாதல் வேண்டும் என்பதிலும் விழிப்புணர்ச்சி உடையராவர். சிறந்த வீரன், தன்னினும் ஆற்றல் மிக்கவனும், தனக்கு நிகரானவனுமான பிறிதொரு வீரனோடு, ஒத்தநிலையில் நின்று போராடி வெல்ல விரும்புவனேயல்லது, மறங்குன்றிய மாற்றானோடும் போரிடான்; மறமாசுபட்டானோடும் போரிடான். அதுமட்டுமன்று; பகைவன், படைக்கலம் இழந்தோ, பாய்ந்தோடும் ஊர்தி இழந்தோ போரிடற்கியலாத் தளர்நிலை யுற்றமை நோக்கிப் படை தொடுப்பதும் செய்யான்.

மதம் படுமளவு பெருவலிமிக்க வேழமே யென்றாலும், 'வேழம் ஒரு விலங்கு; தன்னினும் அறிவுக் குறைபாடுடையது. அதை வெல்வது ஒரு வீரனுக்கு அழகாமோ?' எனக் கூறிப் பழிப்பர் ஆதலின், தன்மீது பாய்ந்துவந்த பரிமா மீதும் வேல் எறியாதவனும், போர்க்களம் பல புகுந்து போராடி வீரப்புண் பலபெற்ற வீறுடையார் வந்து எதிர்த்தக்கால், 'அவரெல்லாம் பலரோடு போராடிப் போராடிப்

பலம் குன்றியவர்கள்; பிறர் படைக்கலம் தீண்டித் தீர்த்த எச்சிலாம்' என்று எண்ணி அவர்மீதும் வேல் எறியாதவனும், படைக்கலப் பயிற்சிகளையெல்லாம் பழுதறக் கற்றுத் தேர்ந்து, படைக்கலப் பயிற்சிச் சாலையிலிருந்து வெளியேறிய புத்தம் புதிய பெருவீரர்கள் புதிய உரத்தோடு வந்து எதிர்த்தால், 'அவரெல்லாம் களம்காணாக் கட்டிளம் காளையர்; பால்மணம் மாறாப் பச்சிளம் பருவத்தர். அவரோடு போரிடின் அறமுறை கெடும்; ஆகவே, அவர்மீதும் அம்பு தொடேன்' என மறுப்பவனும், 'தன்னினும் ஆண்டால் மூத்தவர்; ஆற்றல் மிக்கவர்; களம்பல கண்டவர்; ஆனால், பிறரைப் புண்படச் செய்தவரேயல்லது, பிறர் படைக்கலம் பட்டு உண்டாய புண்பெறாதவர். அத்தகையார் வந்து எதிர்த்தக்கால் எல்லாவகையாலும் என்னோடு போரிடற்காம் தகுதியுடையார் என்றாலும், என்னினும் முதுமையுடையவர்; அம்முதுமை ஓர் அளவு அவர் ஆண்மையைக் குறைத்தே யிருக்கும். அதுமட்டுமன்று; மூத்தோர் என்றால் வழிபடத் தக்கவரேயல்லது, வாள்கொண்டு வீழ்த்தத் தக்கவரல்லர். ஆகவே, இவரோடு போரிடுவது முறையாகாது' என முதுமையைக் காரணம் காட்டி முனைபுகாதவனும் ஆகிய மாண்புமிகு மறவன் ஒருவனைப் படைத்துள்ளார் சிந்தாமணியாம் செந்தமிழ்க் காப்பியப் பேராசிரியர், திருத்தக்க தேவர் அவர்கள்.

**"வீறின்மையின் விலங்காம்என மதவேழமும் எறியான்;**
**ஏறுண்டவர் நிகராயினும் பிறர்மிச்சில் என்று எறியான்;**
**மாறன்மையின் மறம்வாடும் என்றுஇளையாரையும் எறியான்;**
**ஆறன்மையின் முதியாரையும் எறியான்அயில் உழவன்."**

எதிர்த்து நிற்கும் பகைவர் தம் ஆற்றல் இழந்து, தம்மைக் காத்துக் கொள்ளும் கருத்தோடு புறங்காட்டி யோடும் நிலையிலும் அவரை விடாது பின்பற்றிச் சென்று, வேலெறிந்தும் வெங்கணை விடுத்தும் அழிக்க எண்ணுவது



ஆண்மைக்கு இழுக்காம் என்ற உயர்ந்த குறிக்கோளை உடைமையாகப் பெற்றிருந்தார்கள் அக்காலப் படைத்தலைவர்கள். அம் மறவர் மாண்பினைப், புலவர் பெருமக்கள், "அழியுநர் புறக் கொடை அயில்வேல் ஓச்சாக் கழிதறு கண்மை" எனப் பாராட்டிப் பாடிச் சென்றுள்ளனர். தன் போர் வெறியால், அம்மரபை மறந்து, யாரேனும் ஒரு வீரன், தோற்றோடிய மாற்றான்மீது அம்பெறிய. அதனால் அம்மாற்றான் முதுகில் புண்பெற்று விடுவானாயின், புறப்புண் பெறுவது பெருவீரர்க்கு இழுக்காம் என்பதை உணர்ந்திருந்தும், அப் புறப்புண் பெற்றானைக் காட்டிலும், அவன் புறத்தே புண் உண்டாக, படை தொட்ட வீரனையே பெரிதும் பழிப்பர்.

காவிரிக்குக் கரையும் அணையும் அமைத்தும், காவிரிப் பூம்பட்டினமாம் கடற்றுறை நகரைக் கண்டும் திருமாவளவன் எனும் புகழ்மிகு பெயர் பெற்றோனாகிய கரிகாற் பெருவளத்தான், சேரமான் பெருஞ்சேரலாதனோடு நிகழ்த்திய போரில், கரிகாலன் கணைபட்டு, சேரலாதன் முதுகில் புண் உண்டாகிவிட்டது. புறப் புண் பெற்ற பெருஞ்சேரலாதன் அப்பழிக்கு நாணி, வடக்கிருந்து உயிர் துறக்கத் துணிந்து விட்டான். புறப்புண் பெற்றவனாகவும், அவன் அது பெற்றமைக்கு நாணி இயிர் இழக்கத் துணிந்து விட்டமையால், அவன் சாலவும் சிறந்தவனாகி விட்டமை கண்டு அவனைப் பாராட்டிய பெரும் புலவர் பலரோடு தாமும் ஒருவராய்ப் பங்குகொண்ட வெண்ணிக்குயத்தியார் என்ற பெண்பாற் புலவர், கரிகாலனை அணுகி, "வளவ! களம் புகுந்து, வாளேந்தி, வெஞ்சமர் புரிந்து, நின் பேராண்மைக்குத் தக்க பெரிய வெற்றி பெற்ற உன்னைக் காட்டிலும், நீ வெற்றி பெற்ற அவ்வெண்ணிப் பறந்தலைப் போரில், உன்பால் தோற்று, உன்னால் பெற்ற புறப்புண் நாணி வடக்

இருக்கும் அப் பெருஞ்சேரலாதனே நனி நல்லனுவன்'' என அவனைப் பழித்துள்ளமை உணர்க.

" களியியல் யானைக் கரிகால் வளவ!
சென்றமர்க் கடந்த நின்ஆற்றல் தோன்ற
வென்றோய் நின்னினும் நல்லன் அன்றே?
கலிகொள் யாணர் வெண்ணிப் பறந்தலை
மிகப்புகழ் உலகம் எய்திப்
புறப்புண் நாணி வடக்கிருந் தோனே.''

"உள்ளுவது எல்லாம் உயர்வு உள்ளல்; மற்றுஅது தள்ளினும் தள்ளாமை நீர்த்து'' என்ற உயர் நோக்குடையவர் பழந்தமிழ்த் தளபதிகள். முயலை வேட்டையாடுவதும், வேழத்தை வேட்டை ஆடுவதும் வேட்டை யாடுதல் என்ற ஒருமைப்பாட்டில் ஒன்ருகவே மதிக்கப்பெறும் என்ருலும், முயல் வேட்டம் புரிவோன் செயலினும் யானை வேட்டம் புரிவோன் செயலே நனி பாராட்டற்குரித்தாம். ஒருவன் முயல் வேட்டை மேற்செல்ல, மற்ருெருவன் வேழ வேட்டத்தில் விருப்புடையனுய்ச் செல்ல, முன்னவன் வெற்றி கண்டு வீழ்த்திய முயலோடு வீடுதிரும்ப, பின்னவன் வேழத்தின் மீது வீசிய வேல் குறிபிறழ்ந்து விட்டதாக, வேழம் பிழைத்துப் போய்விட, அவ்வெறும் வேலோடு வீடு திரும்பக் கண்டால், மக்கள், முன்னவனை மதியாது பின்னவனையே பாராட்டுதல் வேண்டும் என விழுமிய வீரத்திற்கு இலக்கணம் வகுத்துள்ளார் வள்ளுவப் பெருந்தகையார்.

" கானமுயல் எய்த அம்பினில் யானை
பிழைத்தவேல் ஏந்தல் இனிது.''

போர் என்றதும் பூரிக்கும் தோளினராகவே விளங்கினர்கள் அக்கால வீரர்கள் என்ருலும், அவர்கள் பயன் குறியாது போரிடுவாரல்லர். தான் பிறந்த குடிப்புகழைப் பெருக்குவது, தான் வாழும் நாட்டைக் காப்பது, தன்னைப்



பாடிநிற்கும் புலவர் முதலாம் இரவலர்க்கு இல்லை என்னுது எடுத்துக் கொடுக்கலாம் பொருளை ஈட்டுவது போலும் பயன்மிகு கடமைகள் குறித்தல்லது அவர்கள் போர்மேற் செல்லார்.

மணிமேகலைமீது கொண்ட மாருக்காதலால், அவள் பின் திரிந்த மன்னன் மகன் உதயகுமரனைக் காஞ்சனன் என்ற விஞ்சையன் வாளால் வெட்டியெறிந்தானுக, மகன் மறைவு கேட்ட அரசமாதேவி மாளாத்துயரில் மாழ்கியிருக்குங்கால், அவளுக்கு ஆறுதல் மொழி கூற வந்த வாசந்தவை எனும் மூதாட்டியார், "தேவி! மன்னர் மரபில் வந்த ஒரு மகனுக்குத் தன் மண்ணைக்காப்பதும், மாற்ருர் மண்ணைக் கைக்கொண்டு தன் நாட்டு எல்லையை விரிவாக்குவதும் நீங்காக் கடமையாம். அக் கடமையை நிறைவேற்றுவான் வேண்டி மேற்கொள்ளும் போரில் உயிர் இழப்பதொன்றே, மன்னர் மரபு அறிந்த உயிரிழப்பு முறையாம். ஆனல், மறைந்த உன் மகன், மாற்ருர் மண்ணைக் கைக்கொள்ளும் போரிலும் உயிர் விட்டானல்லன்; தன் மண்ணைக் காக்கும் போரிலும் உயிர் விட்டானல்லன். ஆகக் கடமை நெறி செல்லாது கயமை நெறி சென்று வீழ்ந்த அவனை என்னென்பது? அத்தகையான் குறித்து அழுதுபுலம்புவது அரசமாதேவியாம் உமக்கு அழகாகாது. ஆக அம்மையே! அலறிப் புலம்புவது கைவிடுக!'' என்று கூறித் தேற்றிய மொழியில், அக்காலப் போரின் தூய்மை நோக்கும் அறத்துணை தெளிவாகத் தெரிகிறது காண்மின்.

" தன்மண் காத்தன்று; பிறர்மண் கொண்டன்று;
என்னெனப் படுமோ நின்மகன் மடிந்தது?
மன்பதை காக்கும் மன்னவன் தன்முன்
துன்பம் கொள்ளேல்.''

கோனட்டு எறிச்சலூர் மாடலன் மதுரைக் குமரனர் என்ற புலவர், ஈர்ந்தூர் கிழான் தோயன் மாறன் என்

பாணைப் பாராட்டும்போது, "உண்பொருள் பெறாது உறுபசி வருத்தும் பெரிய சுற்றம் புடைசூழ, பொருள் தரும் வள்ளலைத் தேடிவரும் முதியோனே! பாணர் பசி போக்கிப் 'பாண்பசிப் பகைஞன்' எனும் பெயர் பெற்றோனொருவன் ஈர்ந்தை யெனும் ஊரின்கண் உள்ளான். உம் வறுமைதீர வேண்டின் எம்மோடு வருக. யாம் இப்போது அவன்பாலே செல்கின்றோம். வருவார்தம் பசி போக்கும் வள்ளற் பெருந்தகையாகிய அவன்பால், சென்றவுடனே வழங்கவல்ல பொருள் வளம் இல்லை. நாம் சென்று அவனை இரந்து நின்றால், அவன் நம்மையெல்லாம் கூட்டிச் சென்று, தன்னூர்க் கொல்லன் முன் நிறுத்தி, வறுமையால் வாடிக் கிடக்கும் நம் வயிற்றைக் காட்டி, இவர் வறுமை தீர்க்கும் வளத்தினைப் பெற வேண்டும். அது பெற யான் போர் மேற் செல்லுதல் வேண்டும். ஆகவே, போருக்காம் படைக்கலங்களை விரைந்து ஆக்கி அளிக்குமாறு உன்னை யான் இரக்கின்றேன் என்று வேண்டிக்கொள்வன்'' என்று கூறி, அக்காலப் படைமறவர்கள் இது போலும் பயன்மிகு செயல் குறித்தே படைதொடும் பண்புடையவராவர் என்ற உண்மையை உணர்த்தியுள்ளார்.

"ஈர்ந்தையோனே பாண்பசிப் பகைஞன்;
இன்மைதீர வேண்டின், எம்மொடு
நீயும் வம்மோ முதுவாய் இரவல!
யாம்தன் இரக்கும் காலைத் தான்எம்
உண்ணா மருங்குதல் காட்டித் தான்ஊர்க்
கருங்கைக் கொல்லனை இரக்கும்
திருந்திலை நெடுவேல் வடித்திசின் எனவே.''

இவ்வாறு பற்பல நற்பயன் குறித்து ஓயாது போர் மேற்கொள்ளவேண்டிய இன்றியமையாமை பண்டு நிலவியதால், அக்காலப் படை மறவர்கள், தம் குலத்து வந்த இளம் மகார்கள், படைக்கலப் பயிற்சி பெறும் கல்வியைப் பெரிதும் போற்றிப் பேணி வந்துள்ளனர்.



தமிழகத்தை அடிமைகொள்ளும் தருக்குமிகு குறிக்கோளுடையாராய் நெடிய பெரிய தேர்ப்படையோடு தமிழகம் புகுந்து வட இந்திய மௌரியப் பெரும் படையை மோகூர் முனையகத்தே முறியடித்து ஓட்டியவரும், பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்றான் படையில் பணிபுரிந்தவருமாகிய கோசர் என்ற குலத்தவரின் இளைஞர்கள், முருக்க மரத்தான் இயன்ற இலக்கை அமைத்துக் கொண்டு, வேல் எறிந்தும், வில்வளைத்து அம்பெய்தும் படைக்கலப் பயிற்சி பெறும் பண்பாட்டினைப் புலவர் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனாரும்,

"இளம்பல் கோசர் விளங்குபடை கன்மார்
இகலினர் எறிந்த அகல்இலை முருக்கின்
பெருமரக் கம்பம்.''

தமிழகத்து ஊர்தோறும் உள்ள பொதுவிடங்களில், இலந்தைபோலும் இனியகனிதரு மரங்களின் நிழலில் விளையாடும் இளம் மகார், வேறு பயனிலா விளையாடலை விரும்பாது, வில்லும் கணையும் கொண்டு விளையாடும் வீரவிளையாடலையே விரும்புவதை, உறையூர் முதுகண்ணன் சாத்தனாரும்,

"மன்றத்து
அலந்தலை இரத்தி அலங்குபடு நீழல்
கயந்தலைச் சிறார் கணைவிளை யாடும்
அருமிளை இருக்கை.''

வில்லும் அம்பும் கொண்டு வேட்டம் புரிவதையே தொழிலாகக் கொண்ட வேட்டுவர் தம் சிறுவர்கள், மனைப் புறம் விட்டகலா நனி இளம் பருவத்தினராய் இருக்கும்

போதே, உடைவேல மரத்தின் முள்ளை, ஊகம்புல்லின் நுண்ணிய முனையிற் செருகிச் செய்து கொண்ட அம்பினை, வளரரை வளைத்துப் பண்ணிய வலிய வில்லில் வைத்துத் தம் மனைப்புறங்களில் விளைந்து கிடக்கும் பருத்திச் செடிகளின் வேரிடத்தை வாழ்விடமாகக் கொண்டு வாழும் காட்டெலிகளைக் குறிபார்த்துத் திரியும் காட்சியை ஆலத்தூர்கிழாரும் அழகுறத் தீட்டிக் காட்டுவது காண்க.

**" வெள்வாய் வேட்டுவர் வீழ்துணை மகாஅர்,**
**சிறியிலை உடையின் சுரையுடை வான்முள்**
**ஊக நுண்கோல் செறித்த அம்பின்**
**வலாஅர் வல்வில் குலாவரக் கோலிப்**
**பருத்தி வேலிக் கருப்பை பார்க்கும்**
**புன்புலம் தழீஇய அங்குடிச் சீறூர்."**

இவ்வாறு வண்டல் இழைத்து விளையாடும் இளம் பருவம் தொட்டே படைக்கலப் பயிற்சி யுடையவராய் வளர்ந்த அப் பண்டைப் படைமறவர்கள், மாற்றார் மீது போர் தொடுத்துச் செல்லும் முன் சில வஞ்சினம் உரைத்துச் செல்வதும், அவ் வஞ்சினம் வழுவாவகையில் போராடி வெல்வதும் வழக்கமாம்.

பகையரசனுக்குரிய பெரிய கோட்டை யொன்றை முற்றி வளைத்திருந்தார்கள் சில மறவர்கள். பொழுது புலர்ந்தது. நாட்காலையில், அரசன் திருக்கோயிலில் எழும் காலை முரசின் ஒலி அரணகத்தே எழுந்தது. அது கேட்டான் முற்றியிருக்கும் படையின் தலைவன். 'நாம் ஈண்டு முற்றியிருப்பதை அறிந்தும் ஆண்டு முரசு முழங்குகிறதே. என்னே நம் ஆண்மை' என்ற குறிப்புத் தோன்ற ஆங்கு நின்ற வேற்படையாளரை நோக்கினன். அவ்வளவே, 'காலை உணவு உண்டாயிற்று. இனி, மாலை உணவுக்குள் மாற்றான் அரண் அமைதல் வேண்டும். அதை வென்று கைக் கொள்ளா முன்



உணவு உண்டல் கூடாது. மாலை உணவு அரணுக்கு அகத்தே யல்லாது புறத்தே இல்லை. இது உறுதி. ஆகவே, சோறு சமைக்க உதவும் அகப்பையும் துடுப்பும் நாம் உட்புகுவதன் முன் உட்புகுமாக' எனக் கூறியவாறே படை வீரர்கள் அவை இரண்டையும் அகத்தே எறிந்த காட்சியை இனிதாக எடுத்துக் காட்டியுள்ளார் ஐயன் ஆரிதனார்.

**" காலை முரசம் மதில்இயம்பக் கண்கனன்று**
**வேலை விறல்வெய்யோன் நோக்குதலும்—'மாலை**
**அடுகம் அடிசில்'என்று அம்மதிலுள் இட்டார்**
**தொடுகழலார் மூழை துடுப்பு."**

"சிறியன் எனும் சிறுசொல் கூறிச் செருவொடு வந்திருக்கும் வேந்தர்களை வெஞ்சமர்புரிந்து வென்று ஓட்டி, அவர்தம் வெற்றிமுரசு முதலாம் விருதுகளையும், கரி பரி தேர் காலாள் என்ற நாற்படைகளையும் ஒருசேரக் கைக்கொண்டு மீளேனாயின், என் குடிமக்கள் கொடியன் எம் இறைவன் எனக் கூறிப்பழிக்கும் கொடியவன் ஆவேனாகுக! மாங்குடி மருதன் முதலாம் புலவர் பெருமக்கள் என்னையும் என் நாட்டையும் பாடாது விடுக!" என்று, பாண்டியன் நெடுஞ்செழியன் தலையாலங்கானத்துப் போர்க்களத்தே நின்று மொழிந்த வஞ்சின உரைகளைக் காண்க.

**"சிறுசொல் சொல்லிய சினங்கெழு வேந்தரை**
**அருஞ்சமம் சிதையத் தாக்கி, முரசமொடு**
**ஒருங்குஅகப் படேஎ னாயின் பொருந்திய**
**என்நிழல் வாழ்நர் சென்னிழல் காணாது**
**கொடியன்எம் இறைஎனக் கண்ணீர் பரப்பிக்**
**குடிபழி தூற்றும் கோலேன் ஆகுக !**
**ஓங்கிய சிறப்பின் உயர்ந்த கேள்வி**
**மாங்குடி மருதன் தலைவ னாக**
**உலகமொடு நிலைஇய பலர்புகழ் சிறப்பின்**
**புலவர் பாடாது வரைகஎன் நிலவரை!"**

பழந்தமிழகத்துப் போர்த்தளபதிகள், பிறப்பு முதலாம் பல்வகை நிலையிலும் சாலச்சிறந்தவர் என்பதை நிலைநாட்ட, கூறிய இச்செய்திகளே போதும். ஆனால், அத்தளபதிகளின் பண்பும் பெருமையும் அந்த அளவோடு அமைதியுறுவன அல்ல. சிறந்தகுடியில் எல்லோருந்தான் பிறக்கிறார்கள். பயிற்சி பெறப் பெறப் படைக்கலவன்மையில் சிறந்து விளங்குவது எல்லோருக்கும்தான் இயலும். ஆனால், ஒப்பாரும் மிக்காரும் இல்லா உரவோர் தமிழ்ப்படைமுதலிகள் என்பதற்கு இப்பண்புகள் மட்டும் போதுவன அல்ல. பிறர்பால் காணலாகாப் புதுமையும் பெருமையும் அவர்பால் பொருந்தியிருத்தல் வேண்டும் என எண்ணினார்கள். அவர்கள் எண்ணம் பிழையாவாறு, பிறர்க்கெல்லாம் இல்லாத தனிச்சிறப்பு அவர்பால் பொருந்தியிருந்தது என்பதற்குச் சான்று பகர்ந்து நிற்கின்றார்கள் சில சான்றோர்கள். அத்தகைய சான்றோர்களுள் ஒருவராகிய மதுரை இளங்கண்ணிக் கோசிகனார் கூறுவது கேண்மின்.

செயற்கரிய செய்வார் பெரியார் என்றார் வள்ளுவப் பெருந்தகையார். 'களம் புகுந்து, கையில் ஏந்திய படைக்கலம் பாழ்படுமளவு கடும்போர் புரிந்து பகைவரை அழித்து வெற்றிகொள்வது போர்க்களம் புகும் வீரர் அனைவர்க்கும் இயலும் காரியமாம். இவ்வாறு எல்லோர்க்கும் இயலும் ஒன்றையே தானும் பெற்றிருக்கும் இழிவுடையானல்லன் எங்கள் படைத்தலைவன். அவன் ஓர் ஒப்பற்ற வீரனவன்; அத்தகையான்பால், பிறர்பால் இல்லாப் பேராண்மை பொருந்தியிருத்தல் வேண்டும். உண்மையில் அவனொரு பெருவீரனாயின் அவன் போர்க்களம் புகுவதோடு, பிறர்போல் படைக்கலம் ஏந்திப் போரிடுவதோ கூடாது. பாசறைக்கண் அவன் உள்ளான் என்ற செய்தி அறிந்ததே பகைவர்கள் பணிந்துவிடுதல் வேண்டும். பாம்பைப் பார்த்ததும், அது வாழும் புற்றைக்கண்டே மக்கள் அஞ்சி, அகன்று



போவதைப் போலவும், கொல்லேற்றினைக் காணாது, அது திரியும் மன்றத்தைக் கண்டே நடுங்கி, அம்மன்றை நணுகவும் நிலைகுலைவது போலவும், பகைவர், அவனைப் பாராமலே அஞ்சி நடுங்கவேண்டும்; அவன் வாழும் பாசறையைக் கண்டே அஞ்சி நடுங்கவேண்டும். அதுவே ஒப்பற்றவீரன் ஒருவனுக்கு அழகாம். அத்தகைய ஒருபெரும் புகழ் எம் படைத்தலைவன்பால் பொருந்தியுளது. அப்புகழ் பெற்றிருப்பவன் எம் படைத்தலைவன் ஒருவனே' என ஒரு படைமறவன் தன் படைத்தலைவனைப் பாராட்டும் அப்பாராட்டுரையில் மிளிரும் பெருமிதவுணர்வைக் காண்மின்!

**"இரும்பு முகம் சிதைய நூறி, ஒன்னார்**
**இருஞ்சமம் கடத்தல் ஏனோர்க்கும் அளிதே.**
**நல்அரா உறையும் புற்றம் போலவும்**
**கொல் ஏறு திரிதரும் மன்றம் போலவும்**
**மாற்றரும் துப்பின் மாற்றோர் பாசறை**
**உளன்என வெரூஉம் ஓர்ஒளி**
**வலன்உயர் நெடுவேல் என்னைகண் ணதுவே."**

'நீண்டு அடர்ந்த பிடரி தொங்கும் பருத்த கழுத்தும் நீண்ட கூரிய நகங்களும் உடைய சிங்க ஏறு உலாவரும் மலைச்சாரலை அணுக, காட்டு விலங்குக் கூட்டம் அனைத்துமே அஞ்சி நடுங்கி அகலாது அகன்று போவது போல், போர் முரசு முழங்கும் பெரிய அரணகத்து வாழ்க்கை உடையராய் இருந்தும், அக்காலத்து அரசர்கள் எல்லாம் அச்சம் மிகுந்து, அதனால் உறக்கம் ஒழிந்து உறுதுயர் கொள்ளற்காம் பேராற்றல் வாய்ந்தவன் இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன்' எனக் கூறும் குமட்டூர்க் கண்ணனார் கூற்றில், உண்மை வீரன் இயல்பு உள்ளவாறு உணர்த்தப் பெற்றுளது காண்க.

"கடம்புமுதல் தடிந்த கடுஞ்சின வேந்தே!
தார்அணி எருத்தின், வாரல் வள்உகிர்,
அரிமான் வழங்கும் சாரல், பிறமான்
தோடுகொள் இனநிரை நெஞ்சு அதிர்ந்தாங்கு
முரசுமுழங்கு நெடுநகர் அரசு துயில் ஈயாது
மாதிரம் பனிக்கும் மறம்விங்கு பல்புகழ்
கேட்டற்கு இனிது."

இவ்வாறு பிறப்பு முதலாகப் பேராண்மை ஈறாகச் சொல்லப்பட்ட அனைத்து வகையாலும் சிறந்தவர்களைப் "பிறப்பும் பெருமையும் சிறப்பும் செய்கையும் அரசறி பெயரும் உரைசெயல் ஆண்மையும் உடையோராகிய படைகோள் மாக்கள்" எனும் பெரும் பெயர் சூட்டிப் பாராட்டி, அத்தகையோர்களையே தேடிப் பெற்றுப் படைத் தலைமை அளித்தார்கள் பண்டைத் தமிழ் அரசர்கள்.

பெய்யாத மழை பெய்துவிட்டதாயினும், அம்மழை ஈரம் புலர்வதற்குமுன்பே தன் நிலம் அனைத்தையும் உழுது விட வேண்டுமாயினும், தன்பால் உள்ள உழுவெருதுகள் அனைத்தையும் பயன்கொள்ள நினையாது, அவ்வெருதுகளுள், தன் உள்ளத்தின் விரைவறிந்து, உழுது முடிக்க வல்ல நல்லெருதுகள் யாவை என்பதை ஆராய்ந்து நோக்கிப் பயன்கொள்ளும் தொழில் அறிந்த உழவன்போல், தன் படையைச் சேர்ந்த வீரர் பலராயினும், அவர் அனைவருமே சிறந்த ஆண்மையாளர் எனினும், மேலேகூறிய மாண்புகளில் அனைத்தையும் குறைவறப் பெற்றிருப்பான் யாவன் எனத் தேர்ந்து, அவனுக்கே படைத்தலைமை அளித்துவந்த பண்டைத் தமிழ் வேந்தர்கள் பேரறிவு நலத்தைப் புலவர் கழாத்தலையார் கவினுறப் பாராட்டியுள்ளார்.

"ஈரச் செவ்வி உதவின ஆயினும்
பல்எருத் துள்ளும் நல்எருது நோக்கி



வீறுவீறு ஆயும் உழவன் போலப்
பீடுபெறு தொல்குடிப் பாடுபல தாங்கிய
மூதிலாளர் உள்ளும், காதலின்
தனக்குமுகந்து ஏந்திய பசும்பொன் மண்டை
இவற்கு ஈக என்னும்."

வேந்தராவார், நல்ல படைமுதலிகளைத் தேர்ந்து கொண்டால் மட்டும் போதாது. தன் வாழ்வும், தன் நாட்டின் வாழ்வும், அத்தளபதிகளின் தளரா நற்றொண்டிலேயே உளவாம் ஆதலின், வேந்தன் வாழ்வே தன் வாழ்வு, அவன் பொருட்டு உலையாது உழைப்பதே தன் கடன் என்ற உணர்வு அவர் உள்ளத்தில் ஊற்றெடுத்துப் பாய்ந்து கொண்டே யிருக்கும் வகையில், அவர் உள்ளம் உவக்குமாறு உறுபொருள் அளித்தல் போலும் உதவிகளை அளித்தல் இன்றியமையாததாகும்.

சோழன் நலங்கிள்ளியின் அரசவைக்கண் அமர்ந்து, அவனுக்கு அரியபல அறிவுரைகளை, அரசியல் முறைகளை அளித்துவந்த ஆன்றோராகிய உறையூர் முதுகண்ணன் சாத்தனார், "நலங்கிள்ளி! நின் வெற்றிமிகு வாழ்விற்கு வழிகோலியவர் நின் நாற்படைத் தலைவராவர். ஆகவே, அவர்களின் நல்வாழ்வில் நீ என்றும் நாட்டம் உடையையாதல் வேண்டும். இவ்வறிவு நின்பால் இயல்பாகவே அமைந்து கிடக்கிறது. என்றாலும், அதன் இன்றியமையாமை உணர்ந்து யானும் வற்புறுத்துகின்றேன். நெல் விளைந்து கிடக்கும் கழனிகளில் வந்து படியும் பறவைகளை ஓட்டிக் காவல் புரிந்திருப்பார், தமக்குப் பசி நேர்ந்ததும் காவலைக் கைவிட்டு வீடு செல்லாதே, ஆங்கே அணித்தாக ஓடும் உப்பங்கழிகளில் உள்ள மீனைப் பிடித்து, பனங்கருக்குத் தீயில் தீய்த்து உண்டும், புதிய மதுவை உண்டும் பசி தீராராயின், தெங்கிளங்காய்களை வேண்டுமட்டும் உதிர்த்து வெட்டிப் பருகிப் பசியாறி மகிழ்தற்கு இடமான

வளமான நாடுகளை நீ அவர்கள் உடைமையாக்க, ஆங்கு அமைதி நிறை பெருவாழ்வு வாழும் அவர்கள், உன் அரசியல் விழிப்புணர்ச்சியில் இடம் பெறும் மறதி காரணத்தால், கால்கள் நான்கே நாட்டப்பெற்றுத் தழை இட்டு வேயப் பெற்ற சின்னஞ் சிறு குடிசைகளில் வாழவேண்டியவராகி விட்ட உன் பகைவர்போலும் வாழ்வினராகி வருந்த நேர்ந்துவிடாமல், பொருள் வேண்டி உன்னைத் தேடி வருவார்க்குத் தாமே தம் பொருள் அளித்து அவர்தம் வறுமை போக்கி வாழ்விக்கும் வளமார் வாழ்விலேயே என்றும் இருக்குமாறு நின் அரசியல் முறைகளை வகுத்துக் கொள்வாயாக" என்று கூறிய அறவுரையில், படைத் தலைவர்களைப் பேண வேண்டிய தன் சிறப்பை அக்காலப் பாவலரும் காவலரும் பெரிதும் உணர்ந்திருந்தனர் என்ற உண்மை தெளிவுறப் புலனாதல் உணர்க.

**"நெல்விளை கழனிப் படுபுள் ஓப்புநர்
ஒழிமடல் விறகின் கழிமீன் சுட்டு
வெங்கள் தொலைச்சியும் அமையார், தெங்கின்
இளநீர் உதிர்க்கும் வளமிகு நன்னாடு
பெற்றனர் உவக்கும் நின்படைகொள் மாக்கள்
பற்றா மாக்களிற் பரிவு முந்துறுத்துக்,
கூவை துற்ற நாற்கால் பந்தர்ச்
சிறுமனை வாழ்க்கையின் ஒரீஇ வருநர்க்கு
உதவி யாற்றும் நண்பின் பண்புடை
ஊழிற்றாக நின் செய்கை!"**

ஆன்றோர்கள் கூறிய இவ்வறமுறையினை அக்கால அரசர்கள் அறிந்து மேற்கொண்டு வந்தார்கள். தன் பொருட்டுத் தன் இன்னுயிர் துறக்கவும் துணிந்திருக்கும் படை மறவர்க்குத் தன் தலைமாலையாம் பல்வேறுவடம் பொருந்திய மணிமாலையை அவனுக்கு அணிவித்து, அவன் கழுத்திற்கிடக்கும் ஒரு வடமாலையைத் தான் அணிந்து



கொள்ளாத் தார்வேந்தர்களைத் தமிழகம் பண்டு பெற்றிருந்த காட்சியைப் புலவர்கள் பார்த்துப் பார்த்துப் பேரின்பம் கொண்டார்கள்.

**"கொன்னும் சாதல் வெய்யோற்குத், தன்தலை
மணிமருள் மாலை சூட்டி, அவன்தலை
ஒருகாழ் மாலை தான்மலைந் தனனே."**

என்ற நெடுங்களத்துப் பரணர் பாட்டினைக் காண்க.

தென்னவராகிய பாண்டியர் குடியில் வந்த பேரரசன் ஒருவன் தன் படையில் பணிபுரிந்த நாஞ்சில் பொருநன் என்பான் விரும்பும் பொருள்களையெல்லாம் தடையின்றித் தந்த சிறப்பையும், அதனால் அவன்பொருட்டுத் தன் உயிரையும் இழக்கத் துணிந்து நின்ற அப்பொருநன் பெருமையையும் புலவர் மருதன் இளநாகனார் ஒரு சேர வைத்துப் பாராட்டியுள்ளார்:

**"ஈதல்ஆனான் வேந்தே; வேந்தற்குச்
சாதல் அஞ்சாய் நீயே."**

கார் காலத்து மழைத் தாரைகள்போல் மளமளவென வந்து அம்புகள் தைப்பினும், வயலில் பிறழும் கெண்டை மீன்கள்போல் வேல்கள் வெள்ளொளி வீச வந்து பாயினும், பெரிய களிறுகளின் பரிய கோடுகள் வந்து மார்பில் ஊன்றினும் உயிர் ஓம்பற்பொருட்டு ஓடி ஒளியாது நின்று போர் உடற்றி வென்று மீண்ட வீறுடையார், நீர்நிலைகளில் விளையாடும் இயல்புடைய வாளை மீன்கள், மனைகளின் முன்புறத்தே வரிசை வரிசையாக நிற்கும் நெற்கரிசைகளின் நிழலில் கிடந்து புரள்தற்கு இடமான வளம்மிக்க மருத நிலத்து ஊர்களைப் பரிசிலாகப் பெற்ற பேரின்பக் காட்சிகளையும் புலவர்கள் போற்றிப் பாராட்டியுள்ளார்கள்.

**"கால மாரியின் அம்பு தைப்பினும்,
வயற்கெண்டையின் வேல் பிறழினும்,**

பொலம்புனை ஓடை அண்ணல் யானை
இலங்கு வான்மருப்பின் நுதிமடுத்து ஊன்றினும்
ஓடல் செல்லாப் பீடுடையாளர்,
நெடுநீர்ப் பொய்கைப் பிறழிய வாளை
நெல்லுடை நெடுநார்க் கூட்டுமுதல் புரளும்
தண்ணடை பெறுதல் யாவது?"

'பொருள் அளித்தோம் நாம். அது பெற்ற அவர்கள் தம் உயிர் கொடுத்தார்கள். ஆகவே, அவர் கேடு குறித்துக் கவலை கொள்வது வேண்டுவதின்று' என்று எண்ணும் இழி மனம் நம் தமிழ் மன்னர்க்கு என்றும் இருந்ததில்லை. போர் முடிந்து ஓய்ந்ததும், அற்றைநாட் போரில் வெற்றிதர வெஞ்சமர் புரிந்து வீழ்ந்த வீரர் எத்துணையர், விழுப்புண் பெற்று வீழ்ந்து கிடப்பார் எத்துணையர், வீரர்களைப் போலவே போரில் புண்பெற்றுத் துடிக்கும் கரிகள் எத்தனை, பரிகள் எத்தனை என அறிந்து, அத்துணை அழிவிற்கும் காரணமாம் தன்னை நொந்து கொண்டு உறக்கம் ஒழிவதும், அவற்றை நேரில் கண்டு ஆறுதல் மொழி அளித்தும், வேண்டும் வசதி அளித்து வாழ்விக்கவும் வேண்டி, அவ்விரவிலேயே அவையுறையும் பாசறைக்கண் புகுந்து வலம்வந்து தனித்தனியே உலாவி மீள்வதும், பொழுது புலர்ந்த நிலையில் நாளோலக்கப் பேரவையில் அமர்ந்து, படையில் பணி புரிந்தனர். அவர் புரிந்த பணிகளின் தகுதிக்கேற்ப அவர்களை ஒருவர் பின் ஒருவராக அழைத்து ஏற்ற பரிசளித்து அனுப்புவதும் அக்கால அரசர்கள் மேற்கொண்ட அறப்போர் முறைகளாம்.

போர் அழிவு கண்டு கலக்கமுற்றமையால் கண்கள் உறங்காவாக, பகைவர் விரைந்து ஏவ வந்து பாய்ந்த வேல் ஏறுண்டு, தாம் விரும்பும் தம் பிடியானைகள் தம்மைக் காணாது நெடிது வருந்தி நிற்க உயிரிழந்து போன களிறுகளை நினைந்தும், பகைவர் படையைச் சேர்ந்த யானைகளின் பெரிய கைகள், மலைப் பாம்புகள் கிடந்து புரள்வனபோல் வெட்டுண்டு வீழ்ந்து துடிக்குமாறு வெஞ்சமர் புரிந்து தம் செஞ்சோற்றுக் கடன் தீர்ந்து இறந்துபோன எண்ணிலா வீரர்களை நினைந்தும், தம் மேனியில் இட்ட மெய்யுறைகளையும் ஊடறுத்துக் கொண்டு உடலிற் சென்று பாய்ந்த அம்புகள் ஆக்கிய புண்கள் தருநோயால், உடல்குன்றி, உணவு உண்ணவும் மறுத்துத் தலை தாழ்த்திக் கிடக்கும் குதிரைகளை நினைந்தும் கவலை மிகுந்து, ஒரு கை பள்ளியை ஊன்றிக் கிடக்க, ஒரு கை முடிகிடக்கும் தலையைத் தாங்கி நிற்கச் செயலற்றுச் சிறிது பொழுது இருந்து, பின்னர் ஏதோ நினைவான்போல், கைவிரல்கள் முடியில் கிடக்கும் மலர்க் கண்ணியை வருட வீற்றிருக்கும் வேந்தன் ஒருவன் பாசறை வாழ்க்கையைப் படம் பிடித்துக் காட்டுகிறது முல்லைப் பாட்டு.



"கண்படை பெறாஅது
எடுத்தெறி எஃகம் பாய்தலின் புண்கூர்ந்து
பிடிக்கணம் மறந்த வேழம், வேழத்துப்
பாம்பு பதைப்பன்ன பரூஉக்கை துமியத்
தேம்பாய் கண்ணி நல்வலம் திருத்திச்,
சோறுவாய்த்து ஒழிந்தோர் உள்ளியும், தோல்துமிபு
வைந்துனை பகழி மூழ்கலின் செவிசாய்த்து
உண்ணாது உயங்குமா சிந்தித்தும்,
ஒருகை பள்ளி ஒற்றி, ஒருகை
முடியொடு கடகம் சேர்த்தி நெடிது நினைந்து
பகைவர்ச் சுட்டிய படைகொள் நோன்விரல்
நகைதாழ் கண்ணி நல்வலம் திருத்தி
அரசுஇருந்து பனிக்கும் முரசுமுழங்கு பாசறை."

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைப் பாராட்டித் தாம் பாடிய நெடுநல்வாடையில் ஆசிரியர் நக்கீரர், பகைவரின் யானைப் படை

களை, அவற்றின் வலிய பெரிய கைகளை வெட்டி வீழ்த்தி வெற்றி கொண்ட போரில் தன் படைவீரர் பலர் விழுப்புண் பெற்று விட்டனர் என்பதை அறிந்தான் வேந்தன். அறிந்த நேரமோ, இரவின் இடையாமம். கொடிய வாடை வீசும் குளிர்காலம். மழைத் துளிகள் மாறாது வீழ்ந்துகொண்டு இருக்கும் மாரிக்காலம். என்றாலும், அரசன் காலத்தின் கொடுமையினை நினைந்தானல்லன்; புண்பட்டாரைக் கண்டு ஆறுதல் உரைத்து அன்புரை வழங்கி வரவேண்டும் என்பதில் உள்ள ஆர்வம், காலத்தின் கொடுமையை மறக்கச் செய்தது. உடனே, வாடை வீசுவதால் தெற்கே சாய்ந்து எரியும் சுழல்களைக் கொண்ட பெரிய பாண்டில் விளக்குகளை ஏந்திப் பலர் முன்னே சென்றனர். வேப்பந்தார்க் கண்ணியும், வேற்படையும் உடைய படைத் தலைவன் வேந்தன் முன்னே சென்றான். மழை நீர் மன்னன் மீது விழாமை குறித்து, ஒருவன் வெண்குற்றக் குடையேந்தி வேந்தனைத் தொடர்ந்தான். காற்றால் அலைப்புண்டு கீழே புரண்டு புரண்டு சரியும் மேலாடையினை இடக் கையால் பற்றிக்கொண்டு, தோளிலிருந்து தொங்கும் வாள்மீது வலக்கை கிடக்க, வழியில் வரிசை வரிசையாக நிற்கும் குதிரைகள் தம் மேனியைச் சிலிர்க்க, அவற்றின் மீது வீழ்ந்திடும் மழைத்துளிகள் சிதறித் தன்மேல் விழ, காவலன் மழையால் சேறுபட்ட தெருவழியே நடந்து சென்று, புண் பெற்ற வீரர்கள் குறித்தும், அவர் பெற்றிருக்கும் விழுப் புண்கள் நிலைகுறித்தும் படைத் தலைவன் விளக்கம் கூறியவாறே முன்னே செல்ல', அவ்வீரர்கள் தம் உறுநோய் மறந்து உளம் மகிழவல்ல அன்புரைகளை வழங்கிக் கொண்டே சென்ற வேந்தன் விழுச் செயலை வாயாரப் பாராட்டியுள்ளார்.

**"ஓடையொடு பொலிந்த வினைநவில் யானை**
**நீள்திரள் தடக்கை நிலமிசைப் புரள**



**களிறு களப் படுத்த பெருஞ்செய் ஆடவர்**
**ஒளிறுவாள் விழுப்புண் காணிய புறம்போந்து**
**வடந்தைத் தண்வளி எறிதொறும் நுடங்கித்**
**தெற்கேர்பு இறைஞ்சிய தலைய, நற்பல்**
**பாண்டில் விளக்கின் பரூஉச்சுடர் அழல,**
**வேம்புதலை யாத்த நோன்காழ் எஃகமொடு**
**முன்னோன் முறைமுறை காட்டப், பின்னர்**
**மணிபுறத் திட்ட மாத்தாள் பிடியொடு**
**பருமம் களையாப் பாய்பரிக் கலிமா**
**இருஞ்சேற்றுத் தெருவின் எறிதுளி விதிர்ப்பப்**
**புடைவீழ் அந்துகில் இடவயின் தழீஇ**
**வாள்தோள் கோத்த வன்கட் காளை**
**சுவல்மிசை அமைத்த கையன், முகன் அமர்ந்து**
**தூல்கால் யாத்த மாலைவெண் குடை**
**தவ்வென்று அசைஇத் தாதுளி மறைப்ப**
**நள்ளென் யாமத்தும் பள்ளி கொள்ளான்**
**சிலரொடு திரிதரும் வேந்தன்**
**பலரொடு முரணிய பாசறைத் தொழிலே."**

இன்முகம் காட்டியும் அன்புரை வழங்கியும் படையாளர் தம் பிணிபோக்கும் நெடுஞ்செழியன் போர் முடிந்ததும், போரில் அவரவர் புரிந்த பணிக்கேற்பப் பொருள் வழங்கிப் புரப்பதிலும் வல்லனவன். பாண்டியன்பால் காணலாம் இப் பண்பு நலத்தை, அவன் அவைக்களப் புலவராம் மாங்குடி மருதனார், மதுரைக் காட்சியில் மாண்புறக் கூறிப் பாராட்டியுள்ளார்.

அமைச்சர் ஆன்றோர் சூழ அரசவைக்கண் வந்து அமர்ந்ததும், நெடுஞ்செழியன் தன் படைத்தலைவனை அழைத்து, 'கரைகளை அழித்துக்கொண்டு பெருகிவரும் வெள்ளத்தை இடைநின்று தடுக்கும் கல்லணைபோல் நம் படைகளை அழித்துவிட்டு ஆற்றல் கொண்டு மேல் வந்த

மாற்றார் படையைத் தன் ஆற்றலால் அழித்து ஓட்டிய ஆற்றல் மிகு மறவன் வருக! முற்றவும் வளைந்த வில்லி லிருந்து புறப்பட்டு விரைந்து பாயும் அம்புகளைத் தாங்க வல்ல அகன்ற மார்பும், குதிரைகளைக் காற்றெனக் கடிது செலுத்தவும், பாயும் அப்பரிகளை வேண்டும்போது வேண்டும் இடத்தில் இழுத்து நிறுத்தவல்ல பருத்த உரம் மிக்க தோளும் உடைய வீரர் வருக! கல்லை இடித்து ஆக்கிய பகைவரின் கற்கோட்டை மதிலகத்தே இவர்ந்து ஆரமர் புரிந்த ஆண்மையாளர் வருக! செந்தீயெனச் சினம் மிக்கு வந்த பகைவர் படைநடுவன் முரசு முழங்கப் பாய்ந்து, அப் படையினைச் சேர்ந்த களிறுகள் கணக்கிலாதனவற்றை வெட்டிச் சாய்த்து விழிப்புண் பெற்ற வீரர்கள் வருக! நாற்புறமும் பகைவர் வளைத்துக் கொள்ள நடுவே அகப் பட்டு ஆற்றல் இழந்து கிடப்பார்க்குத் துணைபுரிவான் வேண்டி பகைவர் நாற்படையைப் பிளந்து கொண்டு பாய்ந்து, அந்நிலையில் அவர்கள் கூடி எய்த அம்பெலாம் ஏற்று ஆரக்கால் தைக்கப்பெற்ற குடம்போலும் காட்சி உடையவனாகி கவின்மிகு மார்புடைய, மாவீரன் வருக! மாலையும், மணம்மிகு சந்தனமும் உடையராய்க் களம் புகுந்து களிற்றுப்படை வென்ற கட்டிளங்காளையர் வருக! மற்றும் உள்ள மாவீரர் அனைவரும் வருக! வருக!!' என அழைத்து அவர்க்கும், அவர் வழி வந்தார்க்கும் வேண்டும் விழுநிதிகள் வழங்கிச் சிறப்பிக்கும் சிறப்பினை மதுரைக் காஞ்சியின் மாண்புமிகு வரிகள் விளக்கி நிற்றல் காண்க!

**“ வருபுனல் கற்சிறை கடுப்ப இடையறுத்து**
**ஒன்னார் ஓட்டிய செருப்புகல் மறவர்**
**வாள்வலம் புணர்ந்த நின்தாள்வலம் வாழ்த்த**
**வில்லைக் கவைஇக் கணைதாங்கு மார்பின் .**
**மாதாங்கு எறுழ்த்தோள் மறவர்த் தம்மின் !**
**கல்இடித்து இயற்றிய இட்டுவாய்க் கிடங்கின்**



**நல்எயில் உழந்த செல்வர்த் தம்மின் !**
**கொல்லேற்றுப் பைந்தோல் சீவாது போர்த்த**
**மாக்கள் முரசம் ஓவில கறங்க**
**எரிநிமிர்ந் தன்ன தானை நாப்பண்**
**பெருநல் யானை போர்க்களத்து ஒழிய**
**விழுமிய வீழ்ந்த குரிசிலர்த் தம்மின் !**
**புரையோர்க்குத் தொடுத்த பொலம்பூந் தும்பை**
**நீர்யார் என்னுது முறைகருதுபு சூட்டிக்**
**காழ்மண்டு எஃகமொடு கணையலைக் கலங்கிப்**
**பிரிபிணை அரிந்த நிறம்சிதை கவயத்து**
**வானத் தன்ன வளநகர் பொற்ப**
**நோன்குறட் டன்ன ஊன்சாய் மார்பின்**
**உயர்ந்த உதவி ஊக்கலர்த் தம்மின் !**
**நிவந்த யானைக் கணநிரை கவர்ந்த**
**புலர்ந்த சாந்தின் விரவுப்பூந் தெரியல்**
**பெருஞ்செய் ஆடவர்த் தம்மின் ! பிறரும்**
**யாவரும் வருக ! ஏனோரும் தம்மென**
**வரையா வாயில் செறுஅது இருந்து**
**பாணர் வருக ! பாட்டியர் வருக !**
**யாணர்ப் புலவரொடு வயிரியர் வருக ! என**
**இருங்கிளை புரக்கும் இரவலர்க் கெல்லாம்**
**கொடுஞ்சி நெடுந்தேர் களிற்றொடும் வீசி.”**

இவ்வாறு பண்புமிகு தொல்குடிப் பிறப்புடையராய்த் தோன்றிப் படைக்கலத் தலைமையேற்றுப் பணிபுரிந்து, அப்பணி மகிழ்ந்து வேந்தர்கள் வழங்கிய வளம் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்த வீரர் சிலரின் வரலாற்றினைத் தனித் தனியே கண்டு செல்வோமாக!

# 2. அதியன்

**சேலம்** மாவட்டம் தர்மபுரிக்குச் சங்கத் தமிழ்மக்கள் இட்டு வழங்கிய பெயர் தகடூர். தகடூரைத் தலைநகராகக் கொண்ட ஒரு சிறு நிலப்பகுதியை அதியர் என்ற இனத்தவர் ஆண்டுவந்தனர். அதியர் இனம் யாதோ ஒருவகையில் சேர இனத்தோடு தொடர்புடையதாகும். தலைசிறந்த வள்ளலும் வீரனுமாய் விளங்கிய அதியமான் நெடுமான் அஞ்சியையும், அவன் மகன் பொகுட்டெழினியையும் பெற்றளித்த பெருமையுடையது அவ்வதியர்குடி. ஆற்றலும் அருளும் மிக்க அரசர் பெருமக்களை ஈன்ற அக்குடி, அறிவுக் கருவூலமாய புலவர் ஒருவரையும் பெற்றுளது. பண்டைத் தமிழ்ப் புலவர் வரிசையுள் அதியன் விண்ணத்தனார் என்ற பெருந்தகையாரும் இடம் பெற்றிருப்பது காண்க. பாணரையும், பொருநரையும், கூத்தரையும் பேணுவதைக் குடிப் பெருமையாகக் கொண்டு விளங்கிய காரணத்தால், அதியர் குடி, அவ்விரவலர்களின் வாழ்க்கை முறைகளை விளங்க அறிந்திருந்ததற்கு ஏற்ப, அக்குடியில் பிறந்தவராகிய அதியன் விண்ணத்தனாரும், அவ்வாழ்க்கை முறைகளைத் தம் பாட்டிலும் வைத்துப் பாராட்டியுள்ளார்.

அறிவு ஆற்றல் அருள் என்ற இம்மூன்றையும் முற்றப் பெற்ற அம் முதுபெரும் குடியில் பிறந்து, குடிப்பெருமை குன்றாதபடி வாழ்ந்தமையால் இயற்பெயர் மறைந்து போகக், குடிப்பெயரால் அதியன் எனப் பெயர் பெற்ற பெரியோன் ஒருவன் வாழ்ந்திருந்தான். கொற்றத்திலும் கொடையிலும் சிறந்திருந்த அக்குறுநில மன்னன், வேங்



கைப் புலிகள் வாழுமளவு அடர்ந்த காடுகள் சூழ்ந்ததும், பலாக்கனிகள் போலும் பழவகைகள் தந்து பயன் அளிப்பதுமான ஒரு மலையை அரசிருக்கையாகக் கொண்டு, ஆட்சி புரிந்திருந்தான். சிறந்த விற்படையும், வேழப்படையும் அவனுக்குச் சிறப்பளித்திருந்தன.

அதியன் ஆட்சி புரிந்துகொண்டிருந்த காலத்தில், பாண்டி நாட்டு ஆட்சி உரிமையை, நனிமிக இளையனாகிய நெடுஞ்செழியன் ஏற்றான். பசும்பூண் பாண்டியன் எனவும் அழைக்கப்பெறும் அவன், தன் ஆட்சிப் பரப்பையும், அதை ஆளும் பொறுப்பேற்று நிற்கும் தன் இளமையையும், தன்னை அழித்து ஆட்சியைக் கைப்பற்றக் கருதும் பகைவர்களின் பெருமையையும் எண்ணிப் பார்த்து, தன் ஆட்சிக்கு அரண் அளிக்கவல்ல நல்ல படைத்தலைவர் சிலர் வேண்டும் எனத் துணிந்தான். அவ்வாறு எண்ணி, அவனால் தேர்ந்து மேற்கொண்ட படைத்தலைவர்களுள் அதியனும் ஒருவன். பாண்டியர் படையில் பணிபுரிவதால், தன் ஆட்சிக்கும் கேடில்லை. ஒரு பெரிய அரசுக்குப் பகைவரால் வரஇருக்கும் அழிவைப் போக்கும் பெருமையும் உண்டாகும் என உணர்ந்து, அதியனும், அப்பெரும்பணியை உவந்து ஏற்றுக் கொண்டான்.

பாண்டியர் படைத்தலைவனாய்ப் பணிபுரிந்துகொண்டு இருந்தான் அதியன். அந்நிலையில், நெடுஞ்செழியன் எண்ணியது நடைபெற்றுவிட்டது. நெடுஞ்செழியன் நாடாளத் தகுதியில்லா நனி இளையன் என எண்ணிவிட்ட அறியாமையால், அவன் எண்ணிச் செய்திருக்கும் ஏற்பாடுகளை அறியாமல், அரசர் சிலர் அவன்மீது படை தொடுத்துவிட்டார்கள். யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்ற சேரனும், கிள்ளிவளவன் என்ற சோழனும், திதியன், எழினி, எருமையூரன், இருங்கோ வேண்மான், பொருநன்

என்ற குறுநில மன்னர்களுமாகிய ஏழரசர்கள் ஒன்று கூடிவந்து பசும்பூண் பாண்டியனை வளைத்துக்கொண்டார்கள்.

"நாமோ பேரரசர்; மேலும், பெரும் படையும் உடையேம். பாண்டியனோ பச்சிளங்குமரன்; அவனை வென்றால் அடையலாகும் பொருளோ அளப்பரியன" என்று எண்ணி வந்த பகைவர்களின் பெரும்படை பாண்டிநாட்டுத் தலைநகரை வளைத்துக் கொண்டது. அஃதறிந்தான் நெடுஞ்செழியன்; அளவிறந்த சினம் கொண்டான். "என்னை எதிர்த்து வந்திருக்கும் ஏழரசர்களையும் நான் ஒருவனாகவே நின்று வெல்வேன். அவர்தம் கொடி முரசுகளைக் கைக்கொண்டு துரத்துவேன். இதில் தவறுவேனாயின், 'கொடியன் எம் இறை' எனக் குடிகள் பழிதூற்றும் கொடுங்கோல் ஆட்சி புரிவானையும், பாடிப் பாராட்டும் புலவர்களும் நண்பர்களும் பழித்து நீங்க இழிகுணம் பெறுவானையும் வந்தடையும் அழிவும், இழிவும், பழியும் வந்து என்னையும் பற்றுமாக" என வஞ்சினம் உரைத்தான். வாளையும் குடையையும் போர்க்களம் நோக்கிப் போக்கிவிட்டுத் தானும் களம் புகுந்து போரிட்டான்.

நெடுஞ்செழியனோடு களம் புகுந்தான் அதியனும். வந்துள்ள பகையரசர்களுள், யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை கொண்டுவந்திருக்கும் கொங்குப் படைகளே கொற்றம் மிக்கவை; கொடுமை புரிவதிலும் பெரியவை என்பதை அதியன் அறிவான். மேலும், கொங்கு நாட்டை அடுத்திருந்த நாட்டான் ஆதலின், அதியன், அப்படையின் ஆண்மை, ஆற்றல், அமைப்பு முறைகளை அறிந்திருந்தான். அதனால், கொங்குப் படையை வெற்றிகொள்வது அவனுக்கே எளிதாம் என அறிந்த பாண்டியனும், அவனை அப் படைமீதே ஏவினான்.



அதியன், தன் விற்படையோடும் வேழப்படையோடும் சென்று யானைக்கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையையும், அவன் கொங்குப் படையையும் எதிர்த்தான். அதியன் தன் ஆற்றல் அனைத்தையும் காட்டிப் போரிட்டமையால், போர் தொடங்கிய சிறிது பொழுதிற்கெல்லாம் பெரிய வெற்றியைப் பெற்றுவிட்டான். பாண்டியன், பகையரசர்களின் குடை, கொடி, முரசுகளையே கைப்பற்றிவரப் பணித்தான். ஆனால் அதியனோ, அப்பகையரசர்களுள் பெரியவனும், அப்படையெடுப்பிற்கே காரணமானவனுமாகிய சேரனையே கட்டிப் பிடித்துக்கொண்டு வந்து காவலன்முன் நிறுத்தினான்.

தங்கள் அரசன், பாண்டியன் கைப்பட்டான் என்பதை அறிந்ததும் கொங்குப் படை புறங்காட்டி ஓடத்தலைப்பட்டது. சேரனைச் சிறைப்பிடித்த அதியன், அப்படையோட்டத்தைக் கண்ணுற்றான். உடனே, தன் படைகொண்டு அதைத் துரத்தினான். புகுந்த பாண்டிநாட்டு எல்லையையும் கடந்து, சேரநாட்டைச் சேர்ந்துவிட்ட பிறகும், அதியன், அப்படையைத் துரத்துவதை விட்டானல்லன். சேரநாட்டின் பெரும் பகுதி, தன் படையின் ஆணைக்கீழ் வரும்வரை அவரைத் துரத்திச்சென்று வென்று மீண்டான்.

தலையாலங்கானப் போரில், பாண்டியன் நெடுஞ்செழியன் பெற்ற வெற்றி பெரியதொரு வெற்றியே என்றாலும், அப்போரில் சேரனைச் சிறைசெய்து, அவன் கொங்குப் படையை வென்று ஓட்டி, அந்நாட்டில், பாண்டி நாட்டின் ஆட்சியை நிலைநாட்டி அதியன் பெற்ற வெற்றியே, பலராலும் பாராட்டத்தக்க பெருவெற்றியாகும்.

தலையாலங்கானப் போரில் தலையாய வெற்றியை அளித்த அதியனுக்குப் பாண்டியன் பெருஞ் சிறப்பளித்தான். அவன் வென்று அளித்த சேரநாட்டுப் பகுதியை

அவன் ஆட்சிக்கீழ் ஒப்படைத்தான். அதியனும், அதை ஏற்றுக்கொண்டு, தன் மலைநாடு அடைந்து வாழ்ந்திருந்தான். மேலும், அம்மலை நாட்டைப் பகைவர் அணுகலாகா அரண் உடையதாக்கி, அதில் பாண்டி நாட்டின் கொடிபறக்க ஆண்டிருந்தான்,

அதியன், பாண்டிநாட்டின் மேற்கெல்லைக் காவலனாய்த் தன் மலைநாட்டில் வாழ்ந்திருந்தபோது, அள்ளன் என்ற பெயருடைய குறும்பன் ஒருவன், பாண்டியர்க் குரியதும், நெல்வளம் மிக்கதுமாகிய அள்ளூரைக் கைப்பற்றிக்கொண்டான்; அஃதறிந்த பாண்டியன், அதியனை அழைத்துப் பெரிய பெரிய வேழப்படைகளையும் வென்று பாழாக்கவல்ல பெரிய வாள்வீரர் படையை அவன்பால் ஒப்படைத்து, அள்ளனை வென்றுவர ஆணையிட்டான். வீரர் பலரை வென்று, அவ்வெற்றிப் புகழால் செருக்கித் திரிபவன் அவ் அள்ளன். அவன் அத்தகைய போர் வெறி பிடித்து அலைபவன் என்பதை அறிந்தும், அஞ்சாது சென்று அவனை வளைத்துப் போரிட்டான் அதியன். வீரர் பலரை வெற்றி கொண்ட வீறுடையனாகிய அள்ளன், அதியனுக்குத் தோற்றான். அவனுக்கு அடிமைப்பட்டு, அவன் ஏவும் ஏவல்களைச் செய்து சீரழிந்தான். அள்ளூர், மீண்டும் பாண்டியர் உடைமையாயிற்று.

பெரிய வீரனாய்ப், பாண்டிநாட்டின் பெரும் படைத் தலைவனாய் வாழ்ந்திருந்த அதியன், வாகை என்னும் ஊரில் வாழ்ந்திருந்த எயினன் என்பானோடு பகைகொண்டிருந்தான். அப்பகை முற்றவே, அதியன், வாகைக்கே சென்று எயினனை எதிர்த்தான். தனக்குத் துணையாகக் களிற்றுப் படையையும் கொண்டு சென்றிருந்தான். ஆனால், அந்தோ! முடிவு வேறாகிவிட்டது. ஆண்டு முதிர்ந்துவிட்டமையாலோ, வாகையைக் கைப்பற்றவேண்டும் என்ற வேட்கை மிகுதியால் போர் முயற்சிகளை விரைந்து மேற்கொண்டு போர்



முறைகளில் பிழைபுரிந்து விட்டமையாலோ, அதியன் களிற்றுப் படையும் அழிந்தது. அவனும் களத்தில் மாண்டான். அதியன் இறந்தான் என்ற செய்தியைக் கொங்கு நாட்டார் கேட்டனர். தங்களை வென்று ஓட்டித், தங்கள் நாட்டைத் தன் உரிமையாக்கிக் கொண்ட அதியன் மறைவு கொங்கர்க்கு மட்டில்லா மகிழ்ச்சி தந்தது. அவன் மறைவு குறித்து அவர்கள் வெற்றி விழாக் கொண்டாடிக் களித்தனர்.

ஆற்றல்மிக்க பெருவீரனாய் விளங்கிய அதியன், அருள் நிரம்பிய உள்ளத்தனும் ஆவன். பெரிய கொடைவள்ளலாய் வாழ்ந்தான் அதியன். பாக்கள் பல பாடிப் பரிசில் அளிக்கும் பெரியார்களின் புகழைப் பாரெலாம் அறியப் பண்ணும் புலவர்களும் பாணர்களும் பொருநர்களும் கூத்தர்களும் தன்பால் எது வேண்டி வருவார்களோ, அதைத் தட்டாது அளித்து, அவரை மகிழ்வித்துத் தானும் மகிழும் மனநலம் உடையான் அதியன். அதனால் கொங்கர்க்கு மகிழ்ச்சி அளித்த அவன் மறைவு, அவ்விரவலர்க்குப் பெருந் துன்பமாய் முடிந்தது. அவன் மறைவால் உண்டான மனத் துயர் மிகுதியால், அவர்கள், பாடும் தொழிலையே மறந்துவிட்டார்கள். ஊர்தோறும் சென்று கொடுக்கும் கொடை வள்ளல்களைப் பாட ஓயாது ஒலித்த அவர்களின் கிணைப் பறையின் ஒலி அவிந்துவிட்டது. அவர் அழுகுரலே எங்கும் ஒலித்தது. என்னே அதியன் கொடைவளம்!

**"கூகைக் கோழி வாகைப் பறந்தலைப்**
**பசும்பூண் பாண்டியன் வினைவல் அதியன்**
**களிறொடு பட்ட ஞான்றை**
**ஒளிறுவாள் கொங்கர் ஆர்ப்பினும் பெரிதே."**

**"ஆடுநடைப் பொலிந்த புகற்சியின், நாடுகோன்**
**அள்ளனைப் பணிந்த அதியன் பின்றை**
**வள்ளுயிர் மாக்கிணை கண் அவிந்தாங்கு."**

# 3. குதிரைமலைப் பிட்டன்

சேரநாட்டில் குதிரைமலை என்ற பெயர்பூண்ட ஒரு மலை உளது. புலவர்களால் "ஊராக்குதிரை" எனப் பாராட்டப்பெறும் அம்மலை, மழை மேகங்கள் வந்து தவழுமளவு மிகமிக உயர்ந்த முடிகளையும், அகன்ற பாறைகளுக்கிடையே ஆழ்ந்த பெரிய சுனைகளையும், அச்சுனைகளில் மலரும் கரு நீல மலர்களின் நறுமணத்தையும் நிறையக் கொண்டது. அக்குதிரை மலையிலிருந்து, ஓவெனும் பேரொலி எக்காலமும் எழுமாறு எண்ணிலா அருவிகள் விழுந்து உருண்டோடிக் கொண்டேயிருக்கும். அருவிகளின் இரு கரைகளிலும் அடர்ந்த மூங்கிற் புதர்கள் அழகுற வளர்ந்திருக்கும். மலர்ச்சாரல் மரங்களில் ஏறிப் படர்ந்திருக்கும் மிளகுக் கொடிகள் அளிக்கும் பயன் வாய்விட்டுக் கூறும் அளவுடையதன்று. மலைச்சாரலை அடுத்திருக்கும் விளைநிலங்களில் காந்தட் செடிகள், கன்னி மகளிரின் கைவனப்பைக் காட்டி மலர்ந்திருக்கும். காட்டுப் பன்றிகள், இராக் காலங்களில், தம் இனத்தோடு கூட்டங் கூட்டமாய் வந்து காந்தட் கிழங்குகளை உண்ண மண்ணைக் கீழ்மேலாகக் கிளறிவிட்டுச் செல்லும். நிலம், அதனாலேயே உழுத புழுதி போல் ஆகிவிடுவதால், அம்மலைச்சாரல் வாழ் குறவர் மக்கள், அந்நிலங்களை மறுவலும் ஏர்கொண்டு உழுவதில்லை. விதைப்பதற்கேற்ற நன்னாள் வரும்வரை காத்திருந்து தினை விதைத்துவிடுவர். தினைவளர்ந்து வளமான கதிர்களை ஈன்றதும், அவற்றைக் கொய்துவந்து, குற்றி



அரிசியாக்கி, காட்டுப்பசு கறந்தளித்த, நுரை தெளியாப் பாலை, அதுகாறும் மான் இறைச்சியே உண்டுவந்தமையால் அவ்விறைச்சி வேகவைத்த பானையில் வார்த்து, தினையரிசியையும் இட்டுச், அச் சோறுண்ணுவதில் சென்ற வேட்கை மிகுதியால், அப்பானையின் புறத்தைக் கழுவ மறந்து அடுப்பில் ஏற்றி, சந்தன விறகிட்டு எரித்து ஆக்கி இறக்கிவைத்த உணவை, கூதாளிச் செடிகள் வளர்ந்து வனப்புற்றிருக்கும் மனையின் முற்றத்தில் நிற்கும் வாழை மரங்களிலிருந்து அறுத்துக் கொணர்ந்த அகன்ற இலைகளில் இட்டும், ஊரும் சுற்றமும் ஒன்றுகூடி யிருந்து உண்டு மகிழ்வர். கானவர்களின் இத்தகைய கவலையற்ற குடியிருப்புக்களைக் கொண்டது குதிரைமலைச்சாரல்.

குதிரைமலை மற்றொரு வகையாலும் மாண்புற்றிருந்தது. அம்மலை, விலைமதிக்க வொண்ணாத மாணிக்க மணிகளை நிறையப் பெற்றிருந்தது. ஐவனம் என்ற மலை நெல்லை விதைத்திருக்கும் கானவர், அது கதிர் ஈன்று முற்றும் காலத்தில், அதற்குக் காட்டு விலங்குகளால் அழிவுவரக் கூடாதே என்ற கவலையால் காவல் மேற்கொண்டிருப்பர். அக்காவல் மேற்கொள்ளும் அக்கானவர், இரவில் காட்டு விலங்குகளின் வருகையைக் கண்டுகொள்வதற்குப் பெரிய பெரிய தீப் பந்தங்களைக் கொளுத்தி வைப்பர். காற்றாலோ கனமழையாலோ அவை ஓரோவழி அவிந்துபோயினும் கானவர் கவலை கொள்ளார். அம்மலைச்சாரல் மண்ணில் மண்டிக் கிடக்கும் மாணிக்கங்கள், தம் பேரொளியால், இரவின் கார் இருளை அகற்றி, அம்மலைச் சாரலைப் பகல்போல் ஒளிவிடச் செய்யும். அவ்வளவு பெரிய மாணிக்க மணிகள், அவ்வளவு பெருமளவில் ஆங்கே மண்டிக்கிடக்கும்.

மாணிக்க மணிகளாகிய மாநிதியால் மாண்புற்றிருந்த அம் மலைநாட்டைப் பிட்டங் கொற்றன் என்பான் ஆண்

டிருந்தான். பிட்டங் கொற்றனுக்குச் சிறிது முற்பட்ட காலத்திலோ பிற்பட்ட காலத்திலோ, அக்குதிரை மலையை ஆண்டிருந்த அதியமான் நெடுமானஞ்சி, யாதோ ஒரு வகையில் சேர இனத்தவரோடு உறவுடையனாய்க் காணப்பட்டான். அதனால், அவன் உரிமை பாராட்டும் குதிரைமலையை ஆண்டிருந்த பிட்டனையும் அச்சேர இனத்தோடு உறவுடையனாய்க் கொள்வது பொருந்தும். இவன் அச்சேரர் படைத் தலைவனாய்ப் பணிபுரிந்தது அதை உறுதி செய்வதாகவும் உளது.

பிட்டங் கொற்றன் உரம்மிக்க உடலமைப்புடையவனாவன். கொல்லன் உலைக்களத்தில், இரும்பைச் சிவக்கக் காய்ச்சி வைத்துச் சம்மட்டி கொண்டு எவ்வளவு விசையாக அடிப்பினும், எவ்வளவு முறை அடிப்பினும் அவ்வடிகளை யெல்லாம் ஏற்றும் சற்றும் நிலைகலங்காது கிடக்கும் உலைக் கல் போன்றது அவன் உடல். பகைவர் எவ்வளவுபேர், எத்தனை வகையான படைக்கலங்களைக் கொண்டு எத்தனை முறை தாக்கினாலும் அவன் உடல் நிலைகுலையாது. அவர் ஏவும் படைக்கலங்கள் அவன் உடல்மீது பட்டதும் தாம் பாழுறுமே யல்லாது அவன் உடலைச் சிறிதும் ஊறு செய்யாது. கோசர் என்ற கொற்றம் மிக்க குடியில் வந்தவர் வேல் எறிவதில் சிறந்தவர் என்ப. அவர்கள் தம் போர்ப் பயிற்சியை மறவாமல் இருத்தற் பொருட்டு, போர் ஒழிந்த காலங்களிலும், அப்பயிற்சியை இடைவிடாது மேற்கொண்டிருப்பர். அதற்காக ஊர்ப்புறத்தில், முருக்கமரத்தால் இலக்கு ஒன்று ஆக்கி நாட்டிவிட்டு, எட்டிநின்று, வேல்களை அதன்மீது எறிந்து எறிந்து பயிற்சி பெறுவர். வேற்படைகளை அவர்கள் எவ்வளவு விரைவாக எறியினும், எத்தனைபேர் எறியினும், எத்தனை முறை எறியினும் இலக்கு அழிந்துபோகாது. அத்துணை உறுதிவாய்ந்தது அது. பிட்டங் கொற்றன் உடலும் அத்துணை உரமும் உறுதியும் வாய்ந்



தது. பகைவர் பலர் ஒன்று திரண்டுவந்து ஏவும் படைக்கலங்கள் எண்ணிலாத வந்து பாயினும், பாழுறாது அவன் உடல். அத்துணைத் திண்மை வாய்ந்தது பிட்டன் பருவுடல்.

உரம் மிக்க உடல் வாய்க்கப் பெற்ற பிட்டங்கொற்றன் படைக்கலப் பயிற்சியிலும் சிறந்து விளங்கினான். வாள், வில், வேல் ஆகிய முப்படைப் போரிலும் அவன் முழுப் பயிற்சி பெற்றிருந்தான். அவன் வாள், குறிதவறாது பகைவரை வெட்டி வீழ்த்தும். வில்லை வேண்டுமளவு வளைக்க வல்ல வன்மையுடையது அவன் கை. அவன் ஏந்தும் வேல் களம் பல கண்டது; கூர்மை வாய்ந்தது; எவ்வளவு பெரிய போரையும் எவ்வளவு கொடிய பகைவரையும் கொன்று வெல்லவல்லது. பகை பெரிது; அதை அழிப்பது அரிது என்ற நிலை ஏற்படும் காலத்தில் அவன் எடுப்பது வேற்படையே. பிட்டன் கையில் வேல் ஏறினால், பகைவர்க்கு ஆறாத் துயர் உண்டாவது உறுதி. அதனால், பகைவருள் எப்படையாளரையும் எதிர்த்து நிற்க அவன் அஞ்சுவதில்லை.

பிட்டங்கொற்றன் இவ்வளவு பேராற்றல் பெற்றிருந்தும், போர்க்களத்தில், போர்முறைக்கு முரண்பட நடந்து கொள்ளான். பகைவர்களை எவ்வாறேனும் வெற்றி கொள்ள வேண்டும் என்பதற்காகப் பழிமிகு வழிகளில் போரிடத் துணியான். பகைவர் படைக்கலம் இழந்து நிற்கும் நிலை நோக்கி அவர்மீது பாய்வதோ, தோற்றுப் புறங்காட்டி ஓடுவார் மீது படைக்கலம் ஏவுவதோ அவன் செய்யான். அவன் செய்யும் போர் கொடிய விளைவுகளைத் தரும் என்பது உண்மை. ஆனால், அவன் மேற்கொள்ளும் போர் முறையில் பிழை இருக்காது. அதை விரும்பாது, ஆண்மை விரும்பும் அவன் உள்ளம்.

சிறந்த போர் வீரனுக்கு இருக்கவேண்டிய உயர்ந்த பண்புகளில் ஒன்றும் குறையாமல் பிட்டங்கொற்றன்பால்

அமைந்திருந்தமையால், அவன், பகையரசன் நாட்டின் மீது படையெடுத்துச் செல்லும்போதோ, பகையரசன் படை, தன் நாட்டின்மீது பாய்ந்து வரும்போதோ, "நம் படைவீரர் முன்னே சென்று போரிடுக! நாம் பின்னே செல்லலாம்" என்று எண்ணாது, இரு நிலையிலும் அவனே முதற்கண் போர்க்களம் புகுவன். பகைவர் நாடு நோக்கிப் பாய்ந்து செல்லும்போது, தன் படைச் செலவைத் தடுத்து நிறுத்தி அழிக்க அப்பகைவர் வீசும் படைக்கலங்கள் அவ்வளவையும், தன் படை வரிசையின் முன்னே நின்று தனியொருவனாகவே தாங்கி அழித்துத், தன் படைக்கு அழிவு நேராவண்ணம் காப்பான். பகைவர் படை பெரிய வெள்ளம்போல் பாய்ந்துவரும் காலத்தில், அப்பகைவர் படையால், தன் படையணி அழிந்து பாழுற்றுப் போகாதிருத்தற் பொருட்டு, பகைவர் படைவரிசையின் முன் சென்று, பாய்ந்துவரும் ஆற்று வெள்ளத்தை, இடைநின்று தடுத்து நிறுத்தும் கல்லணையேபோல், அவரைத் தடுத்து, அவர் ஆற்றலை அழித்துத் தன் படையினைக் காப்பாற்றுவன். இவ்வாறு சென்று தாக்கும் போர், நின்று தாங்கும் போர் ஆகிய இருவகைப் போரிலும், இவனே முன் நின்று விடுவதால் இவனை வீட்டில் காண்பது அரிதாம். என்னே அவன் போர் வேட்கை!

**"நும்படை செல்லும் காலை அவர்படை**
**எடுத்து எறிதானை முன்னரை எனாஅ,**
**அவர்படை வரூஉம் காலை நும்படைக்**
**கூழை தாங்கிய, அகல்யாற்றுக்**
**குன்றுவிலங்கு சிறையின் நின்றனை எனாஅ**
**அரிதால் பெரும! நின் செவ்வி!"**

பிட்டங்கொற்றன், இவ்வாறு, பேராண்மையும் பெரிய படையும் கொண்டு வாழ்வதைப் பார்த்தான், அக்காலை,



சேரநாட்டு அரியணையில் அமர்ந்திருந்தோன். அத்தகையான் தன் படைத் தலைவனாயின் தன் அரசுக்குப் பெரிய துணையாம் என்று கருதினான். மேலும், தன் நாட்டைச் சேர்ந்த ஒரு மலையரணில், அதுவும் தன் நாட்டு எல்லைக்கு அண்மையில் உள்ள ஒரு மலையில் ஆட்சி மேற்கொண்டிருப்பவன் துணை தனக்கு நனிமிக இன்றியமையாதது என்பதையும் உணர்ந்தான். அதனால் அவனை அழைத்துத் தன் படைத் தலைவனாக்கிப் பெருமை செய்தான். பிட்டங்கொற்றனும், ஒரு பேரரசன் படையில் பணிபுரிவது,தன் பேராண்மையைப் பலநாட்டு வீரர்க்கும் காட்டிப் புகழ்பெறுவதற்கு வாய்ப்பளிக்கும் என எண்ணி, அப்பணியை விருப்போடு ஏற்றுக் கொண்டான்.

சேரவேந்தன் படைத் தலைவனாய்ச் சிறந்த பணிபுரிந்து வெற்றிப் புகழ் விளங்க வாழ்ந்திருந்த பிட்டங்கொற்றன் பால், கொடைக்குணமும் குறைவறக் குடிகொண்டிருந்தது. பாடிப் பிழைக்கும் பாணர்க்கும், பொருநர்க்கும், பிற கூத்தர்க்கும் பிட்டங்கொற்றன் வாரி வாரி வழங்கினான். அவன்பால் பொருள்பெற விரும்புவோர், ஒரு நாள் சென்றாலும் தருவான். ஓரிரு நாட்கள் கழித்துக் கழித்துப் பலமுறை சென்றாலும் தருவான். அவ்வாறில்லாமல் நாள்தோறும் சென்றாலும் தருவான். "உனக்கு முன்னரே கொடுத்து விட்டேன். இனித் தாரேன்" என்று மறுத்துக் கூறிக் கொடாது போக்கான். எத்தனை முறை சென்றாலும், இல்லை என்னாது கொடுப்பான். அதுமட்டுமன்று, அவனுடைய மாட்டுத் தொழுவில், வகைவகையான மாடுகள் இருக்கும். செல்பவர், உன் மாடுகளைத் தொழுவோடே தருக என்று கேட்பராயின், அவனும் அப்படியே அளித்து அனுப்புவன். அவன் நாட்டு நெற்போர்க்களங்களில், காணும் இடம் எங்கும், நெல் மலைபோல் குவிந்து கிடக்கும். வருவோர், "கொற்ற! நெற்குவியல்களுள் ஒன்றும் குறை

யாமல் கொடுக்கவேண்டும்'' என்று வேண்டினால், அவ்வாறே வழங்கி வழிகொடுப்பன். பாடிய புலவன், "பிட்டங்கொற்ற! உன் பட்டத்து யானைக்குப் பொன் அணியெல்லாம் பூட்டிப் பரிசாகத் தருக'' என்று கேட்டால், உடனே கட்டுத்தறியில் நிற்கும் களிற்றை அவர் விரும்பியவாறே அவர்பின் போக்குவன். ஒருவர்க்கு மட்டுமே இவ்வாறு வழங்குவன் என்பது இல்லை. வருவார் அனைவர்க்குமே அவ்வாறு வழங்குவன். பிட்டங்கொற்றனுக்குப் பாணன் பாட்டிலும், அவனுடன் வரும் விறலியர் ஆட்டத்திலும் விருப்பம் மிகுதி. ஆடி மகிழ்ச்சியூட்டும் விறலியர்க்கு, ஆண் யானைகளுள் ஆண்டு முதிர்ந்த யானையின் கோட்டில் பிறக்கும் ஒளிசிறந்த முத்துக்களால் ஆன மாலைசூட்டி மகிழ்விப்பான். பாடி மகிழ்ச்சியூட்டும் பாணனுக்கு அவன் விரும்பும் மதுவை, அவன் மனம் வெறுக்குமளவு வார்த்து மகிழ்விப்பான். பாணனுக்கும் பாடினிக்கும் அத்துணை எளியனாகும் பிட்டன் கொடைப் பெருமைதான் என்னே!

பிட்டங்கொற்றன் இவ்வளவு பெரிய வள்ளலாய் வாழ்ந்தமையால், அவன் காலத்தில் வாழ்ந்திருந்த, பாடிப் பிழைக்கும் இரவலர்கள் எவ்விதக் கவலையும் இல்லாமல் இருந்தார்கள். உயிர்வாழ உடல்வருந்த உழைக்கவேண்டும். நாளைக்கு வேண்டும் ஆதலின், இன்று கிடைத்ததில் சிறிது சேர்த்து வைக்கவேண்டும் என்பனபோலும் எண்ணங்கள் அவர்கள் உள்ளத்தில் எழவில்லை. பிட்டன்பால் பரிசில் பெற்ற ஒருவன், தன் மனைவிபால், "இனிமையாகப் பாடவல்ல என்னருமைக் காதலி! இனி உனக்குக் கவலை வேண்டாம். அடுப்பில் உலையை ஏற்று. அறுசுவை உணவை ஆக்கிமுடி. மதுவை மனம் விரும்பும் அளவு குடித்து மகிழ். அதில் குறைவைக்காதே. உயர்ந்த அணிகள் வேண்டுமா? அணிந்து கொள். மலர்மாலை சூடி மகிழ வேண்டுமா? அவ்வாறே சூடிக்கொள். சிறிதும் கவலைப்படாதே. இப்



பெருவாழ்வுக்கு வழியேது என்ற விழிப்பு உனக்கு வேண்டாம். நாம் எதுவும் செய்ய வேண்டியதில்லை. "வாரிக் கொடுக்கிறானே வள்ளல் பிட்டன், அவன் வெற்றிக்கு வழி வகுக்கும் அவன் வேல் வாழ்க! வெல்க! அவ்வேல் தரும் வெற்றி கண்டு, அவன் விரும்பும் விழுநிதிக்கு அவனை உரியனாக்குகிறானே அச்சேர வேந்தன், அவன் வாழ்க! பிட்டன் வேலுக்கு வாய்ப்பளிக்க அவ்வப்போது அவனைப் பகைத்து எழுகிறார்களே அவன் பகைவர்கள், அவர்கள் வாழ்க!' என்று, 'வாழ்க! வாழ்க!' என வாழ்த்துக் கூறுவது ஒன்றை மட்டும் ஒழுங்காகச் செய்தால், அது ஒன்றே போதும். எல்லாம் வந்து வாய்க்கும். எவ்விதக் கவலையும் தீர்ந்து விடும்'' என்று கூறிக் களிப்பதாகப் பாடிய வடமவண்ணக்கன் தாமோதரனார் பாட்டு, பிட்டன் பெருவளப் பெருமையைப் பார் அறியப் பறைசாற்றுவது அறிக.

**"ஏற்றுக உலையே! ஆக்குக சோறே!**
**கள்ளும் குறைபடல் ஓம்புக! ஒள்இழைப்**
**பாடுவல் விறலியர் கோதையும் புனைக!**
**அன்னவை பிறவும் செய்க! என்னதூஉம்**
**பரியல் வேண்டா......**
**வன்புல நாடன் வயமான் பிட்டன்**
**ஆர்அமர் கடக்கும் வேலும், அவன்இறை**
**மாவள் ஈகைக் கோதையும்**
**மாறுகொள் மன்னரும் வாழியர் நெடிதே."**

பிட்டங்கொற்றன் இவ்வாறு பெருவள்ளலாய் வாழ்வதையும், அவனால் இரவலர்கள் வறுமைகாணாப் பெருவாழ்வு வாழ்வதையும் கண்டார், காவிரிப்பூம் பட்டினத்துக் காரிக் கண்ணனார் என்ற புலவர். பிட்டன் வாரி வழங்கும் பொருள் எல்லாம், அவன் வேந்தன், அவனுக்கு விரும்பி அளிப்பதால் வந்தது என்பதை அறிந்தார். அதனால், அவ்வேந்தன் மனம் உவந்து மேலும் மேலும் வழங்கு

வதற்கு வாய்ப்பளிக்கும் வகையில், அப்பிட்டன், அவ் வேந்தன் பொருட்டுப் பெறுதற்கரிய வெற்றிகள் பல பெறுவானாக என வாழ்த்தினர். உடனே போர்க்கொடுமை அவர் கண்ணில் புலப்பட்டது போலும். 'வெற்றி எளிதில் வாய்க்காதே. புண்பல பெறவேண்டி நேருமே. அப்புண்ணில் ஒன்று பெரிதாகிவிடின், தம் இரவலர் வாழ்விற்கே இறுதி நேர்ந்து விடுமே. வறியோர்க்கு வழங்கும் வள்ளல்கள் வற்றிவிட்ட இவ்வுலகில், அதுபோல் ஒன்று நேர்ந்துவிட்டால் இரவலர் வாழ முடியாதே' என்ற அச்சம் அவர் உள்ளத்தில் எழுந்தது. உடனே, பிட்டன் உடலில் சிறு புண்ணும் உண்டாதல் கூடாது. அவன் உள்ளங்காலில் முள் தைப்பதும் கூடாது என்று கருதினர். அந்நிலை வாய்க்கும் வண்ணம் வாய்திறந்து வாழ்த்தினர். பிட்டன் உயிர் வாழ்வில் அக்காலப் புலவர் பெருமக்கள் காட்டிய பேரார்வம் என்னே!

**"இன்று செலினும் தருமே; சிறுவரை
நின்று செலினும் தருமே; பின்னும்
முன்னே தந்தனன் என்னாது, துன்னி
வைகலும் செலினும் பொய்யல னாகி
யாம் வேண்டியாங்கு எம்வறுங்கலம் நிறைப்போன்
தாம் வேண்டியாங்குத் தன்இறை உவப்ப
அருந்தொழில் முடியரோ, திருந்துவேல் கொற்றன்!
இனம்மலி கதச்சேக் களனொடு வேண்டினும்,
களம்மலி நெல்லின் குப்பை வேண்டினும்
அருங்கலம் களிற்றொடு வேண்டினும்
பிறர்க்கும் அன்ன அறத்தகை யன்னே,
அன்னன் ஆகலின், எந்தை உள்ளடி
முள்ளும் நோவ உறற்க தில்ல!
ஈவோர் அரிய இவ்வுலகத்து
வாழ்வோர் வாழ, அவன்தாள் வாழியவே!"**

# 4. கோடைப் பொருநன்

பாண்டி மண்டலத்தில், பழனிமலைத் தொடரைச் சேர்ந்த ஒரு மலைத் தொகுதிக்குக் கோடைக்கானல் என்பது பெயர். கோடைப் பருவத்தின் கொடிய வெம்மையைத் தாங்க மாட்டாத தமிழ்நாட்டுச் செல்வர்கள், தண்மையை நாடிச் சென்று தங்கும் இடங்களுள் இக் கோடைக்கானல் மலையும் ஒன்று. கோடைக்கானல் என இன்று அழைக்கப் பெறும் அம்மலை, பண்டு, கோடைமலை எனும் பெயர் பூண்டிருந்தது. கோடைப் பொருப்பு எனவும் வழங்கப் பெற்றுள்ளது.

கோடை மலையின் அடிவாரத்தில் கடியம் என்ற பெயருடைய நகரம் ஒன்று இருந்தது. தொல்காப்பிய உரையாசிரியருள் ஒருவராகிய பேராசிரியராலும், யாப்பருங்கல விருத்தி உரையாசிரியராலும் தத்தம் உரைகளில் மேற்கோளாக எடுத்துக் காட்டத்தக்க செய்யுள் இலக்கண நூல் ஒன்றை ஆக்கியளித்த, கடிய நன்னியார் என்ற புலவரின் பிறப்பிடமாய்ப் பிற்காலத்தே விளங்கிய அப்பேரூரில், வில்வீரன் ஒருவன் வாழ்ந்திருந்தான். அவன் இயற்பெயர் பண்ணி. பண்ணி கோடைமலையின் காவலனாய் வாழ்ந்தமையால், அவன், கோடைப் பொருநன் எனவும் பெயர் பெற்றிருந்தான். பண்ணி வேட்டை ஆடுவதில் வல்லவன். அவன் இடக் கையில் உரம் மிக்க வில்லும், வலக் கையில் கூரிய அம்புகளும் எந்நாழிகையும் காட்சிதரும். தம்மைப் பிடிக்க, காட்டில் ஆங்காங்கே அமைத்திருக்கும் சிறியவும் பெரியவு

மாகிய புழைகளையும் கெடுத்துவிட்டு விரைந்தோடி மறையும் மான்களையும் துரத்திப் பிடிக்கும் துணிவுடைய வேட்டை நாய்கள் பல, பண்ணியை விடாது தொடர்ந்து வரும். அவற்றின் துணையால் அவன் வேட்டையில் வல்லனாதல் அறிந்த அந்நாட்டு மக்கள், அவனைக் கடிய நெடுவேட்டுவன் என்றும் பெயரிட்டுப் பாராட்டினார்கள்.

கடிய நெடுவேட்டுவன், மான் வேட்டையில் மட்டுமே வல்லவன் என்று எண்ணன்மின். காட்டு யானைகளைக் கைப்பற்றுவதிலும் அவன் வல்லன். யானைகளை அகப்படுத்துவதிலும், அகப்பட்ட யானைகளைத், தன் ஆணைவழி அடங்கி ஒழுகப் பழக்குவதிலும் அவன் வல்லனாய் விளங்கினான். அதனால் போர்ப் பயிற்சி பெற்ற பல யானைகளுக்கு அவன் உரியனாய் வாழ்ந்திருந்தான்.

பண்ணி, பெரிய வில்வீரனாய், பயிற்சி பெற்ற பெரிய யானைப் படை உடையவனாய் வாழ்வதைக் கண்டான், அக்காலை நாடாண்டிருந்த பாண்டியன். பாண்டிநாட்டுக் கடல் அளிக்கும் பெரிய செல்வமாகிய முத்து மாலையையும், பாண்டிநாட்டு மலைகள் அளிக்கும் மணம் நிறைந்த சந்தனத்தையும் உடைமையாகக் கொண்டிருப்பதில் பெருமை காணும் அப் பாண்டியன், பெறற்கரும் அப்பெருஞ் செல்வங்களைப் பகைவர் கைப்பற்றிச் செல்லாதவாறு வைத்துக் காக்க வேண்டுமேல், அதற்குப் பண்ணி போலும் பெரிய வீரன் ஒருவன், பாண்டியர் படைத் தலைவனாய்ப் பணிபுரிய வேண்டும் என அறிந்தான். உடனே கோடைமலை அடைந்து, கடிய நகர்க்குச் சென்று, பண்ணியைக் கண்டு பேசித், தன் படைத் தலைவனாக ஆக்கிக் கொண்டான்.

பாண்டிப் படைக்குத் தலைமை தாங்கும் பெரும் பொறுப்பினை ஏற்றுக் கொண்ட பண்ணி, தன் கடமைகளைக் கருத்தோடு செய்து வந்தான். பாண்டியன்



பொருட்டு அவன் வென்ற போர்கள் பல. கரிய யானைப் படை நீருண்ட கார்மேகமாக, ஒளிவீசும் வாட்படை மின்னலாக, போர்முரசின் ஒலி இடியின் முழக்கமாக, பகையரசர்களாகிய பாம்புகள் நடுங்கும் காலத்தில் விரைந்து பாயும் குதிரைப் படை வீசும் காற்றாக, விற்படை வீரர் ஏவும் அம்புகள் பெருமழைத் தாரையாக, குருதிச் சேறு பட்ட களத்தில், தேர்களை ஏர்களாகக் கொண்டு உழுது, வேல் முதலாம் பல்வகைப் படைக் கலங்களாகிய விதைகளை விதைத்து, பகைவரின் தலைகளை வெட்டிச் சாய்த்து, அவர் கொழுப்பும் மூளையும் குழம்ப ஆக்கிய கூழ் உணவைப் பேய்களுக்குப் பலி ஊட்டி, பருந்துகளுக்கு இரை ஊட்டி அவன் ஆற்றிய களவேள்விகளுக்குக் கணக்கில.

பண்ணி, இவ்வாறு பேராற்றல் கொண்டு விளங்கினமையாலும், விரைந்து போரிட்டு வெல்லவல்ல பெரிய குதிரைப்படை உடைமையாலும், பாண்டி நாட்டின் மீது போர் தொடுத்த அரசர் அனைவரும் பண்ணியின் வாளுக்குப் பலியாகி அழிந்தார்கள். பகைத்துப் போரிட வந்தவருள் சிலர், பண்ணியின் பேராற்றலுக்கு அஞ்சித் தாம் கொண்ட கோபத்தை மறந்து, அவன் அடிபணிந்து அடங்கினர். பகைவர் படைகொண்டு வந்தக்கால், வந்தவர் உள்ளுணர்வும் அழியும்படி உரங்கொண்டு தாக்கிய பண்ணி அவர் பணிந்து ஏவல் கேட்டவழி, அவர்பால் அன்பு கொண்டு அடைக்கலம் தந்து, அவர்க்கு வாழ்வளித்து வான் புகழ் பெற்றான்.

வெற்றிப் புகழ்மிக்க வீரனாய், வில்தொழில் வல்ல வேட்டுவனாய்க் கோடைப் பொருப்பில் வாழ்ந்திருந்த பண்ணியின்பால் கொடுக்கும் பண்பும் குறைவற நிறைந்திருந்தது. வேட்டம் புரிதல், வேழங்களைப் பழக்குதல் வேந்தனுக்குத் துணைபோதல் ஆகிய இவை ஒழிந்த நாளின்

பெரும்பகுதி அனைத்தும், தன்னையும் முல்லைக்கொடி மலர்ந்து மணக்கும் தன் கோடை மலையையும் பாடிவரும் பாணர், பொருநர், புலவர் போலும் வறியோர்க்கு அவர் விரும்பும் பொருள்களை வாரி வாரிக் கொடுப்பதிலேயே கழிந்தது. இதனால் அவன் புகழ் பைந்தமிழ்நாடு முழுதும் பரவியிருந்தது.

பண்ணியின் புகழைக் கேட்டார், பெருந்தலைச் சாத்தனார் என்ற புலவர் பெருந்தகையார். பழநி மலைக்கு வடக்கில் உள்ள முதிரமலைக் கோமகனாகிய குமணன் அவைக்களப் புலவராய், அவன் புகழ் பாடிக் கொண்டிருந்தவர் அப் புலவர். அவர் கோடைப் பொருப்பிற்கு வந்து பண்ணியைக் கண்டு பாராட்டினார். ஆனால், புலவர் வந்திருந்தபோது பண்ணி யானைகளைப் பழக்கும் பணிமேற் கொண்டிருந் தான் போலும். அதனால் வந்த புலவர்க்கு, அவர் வருகை புரிந்தபோதே வாரி வழங்கத் தவறி விட்டான். அவ் வளவே, புலவர்க்கு வந்துவிட்டது கோபம். "பண்ணி! கொடுப்பவர் மூவேந்தர்களே என்றாலும், அவர் கொடுக்கும் பொருள் எண்ணியவெல்லாம் அடையத் துணைபுரியும் மலை போன்ற மாநிதியே என்றாலும், அளிக்கும் அவர் உள்ளத் தில், எம்பால் அன்பு தோன்ற, அதன் பயனாய்க் கொடுக்க முன்வராது, 'பாடிப் பரிசில் வேண்டுகிறார்கள் புலவர்கள். கொடுக்காது போனால், பழித்துக்கொண்டே போவார்கள்' என்று எண்ணித் தருவார்களேயானால், அவர் அளிக்கும் மலையனைய அம்மாநிதியை மதிக்க மாட்டோம். வறுமை எவ்வளவுதான் வருத்தினும் அதைப் பெற்றுக் கொள்ள விரும்போம். எங்கள்பால் அன்புகொண்டு அளிப்பார் அளிப்பனவற்றையே, அது அளவால் சிறிதே எனினும் அவற்றையே பெற்று மகிழ்வோம். புலவர்கள்பால் பேரன்புடையான் பண்ணி எனப் பலரும் கூறினார்கள். அதனால் உன்னை வந்து பாராட்டினேன். ஆனால் நீயோ



என்னை வரவேற்பதோ, நான் விரும்பி வந்ததை வழங்கு வதோ செய்யாமல், உன் கடமையிலேயே கருத்தாய் உள் ளாய். முழக்கியும் மின்னியும் சென்று, கால் இறங்கிக் கடலில் படிந்த கார்மேகம், அக்கடல் நீரை முகந்து கொள் ளாது மீளாதுபோல், ஆடியும் பாடியும் வள்ளல்களை அடையும் இரவலர்களும், அவ்வள்ளல்கள்பால் பெரும் பொருள் பெறாது வறிதே மீண்டது இவ்வையகத்தில் கண்டதில்லை. ஆனால், அதை நான் இன்று கண்டேன். உன்னைப் பாடிய நான் வறிதே மீள்கின்றேன். அது குறித்து நான் வருந்தேன். ஆனால், அதனால் பாடிப் பாராட்டிய புலவனைப் பசிநோயோடு போக்கிய பழிமிகு செயலால் உனக்கு யாதேனும் கேடுவந்துறுமோ என்றே கலங்கு கிறேன். அவ்வாறு நோய் ஏதும் பெறாமல் நீ நீடுவாழுமாறு நின்னை வாழ்த்தி விடைபெற்றுக் கொள்கிறேன்" எனப் புலம்பிவிட்டார். புலவர் பழிக்குமளவு கொடைத்தொழிலை மறக்கப் பண்ணிய பண்ணியின் கடமை யுணர்ச்சிதான் என்னே!

புலவரின் புலம்பல் பண்ணியின் உள்ளத்தைப் புண் படுத்தி விட்டது. போர் யானைக்கு மொழியுணர்த்தும் பயிற்சியைக் கைவிட்டு, புலவரை வரவேற்று அவர் விரும் பும் பெரும் பொருள் அளித்துப் பெருமை செய்தான். பொருள் பெற்ற புலவரும் அவன் கொடைப் புகழை அகத் திலும், படைப் பெருமையைப் புறத்திலும் வைத்துப் பாராட்டிப் புகழ்ந்தார்.

**" திருவீழ் மார்பின் தென்னவன் மறவன்**
**குழியில் கொண்ட மராஅ யானை**
**மொழியின் உணர்த்தும் சிறுவரை அல்லது**
**வரைநிலை இன்றி இரவலர்க்கு ஈயும்**
**வள்வாய் அம்பின் கோடைப் பொருநன்**
**பண்ணி தைஇய பயங்கெழு வேள்வி."**

“முற்றிய திருவின் மூவராயினும்
பெட்பின்றீதல் யாம் வேண்டலமே
விறல்சினம் தணிந்த விரைபரிப் புரவி
உறுவர் செல்சார்வு ஆகிச், செறுவர்
தாள்உளம் தபுத்த வாள்மிகு தானை
வெள்வீ வேலிக் கோடைப் பொருந!
சிறியவும் பெரியவும் புகைகொட விலங்கிய
மான்கணம் தொலைச்சிய கடுவிசைக் கதநாய்
நோன்சிலை வேட்டுவ! நோயிலை ஆகுக!”
ஆர்கலி யாணர்த் தரீஇய கால்வீழ்த்துக்
கட்ல்வயின் குழீஇய அண்ணலம் கோண்மூ
நீரின்று பெராய வாங்குத் தேரோடு
ஒளிறுமருப் பேந்திய செம்மல்
களிறு இன்று பெயரல பரிசிலர் கடும்பே.

# 5. திருக்கண்ணன்

மூவேந்தர் ஆட்சிக்குட்பட்ட நாட்டில், அவர் ஆட்சிக்கு அடங்கியும் அடங்காதும் சிற்சில சிற்றரசர்கள் ஆங்காங்கிருந்து ஆட்சிபுரிந்து வந்தனர். அதியர், ஓவியர், மலையர், வேளிர் என்பன போலும் குடியில் வந்த அவர்கள் ஆங்காங்குள்ள மலைகளைத் தம் அரண்களாகக் கொண்டு, பேரரசர்களுக்குச் சிலகாலங்களில் பகைவர்களாகவும், சில காலங்களில் நண்பர்களாகவும் இருந்து அரசோச்சி வந்தனர். அவர்களுள் மலையர் எனவும் மலையமான்கள் எனவும் அழைக்கப்பெறும் அரச இனத்தவர், சோழநாட்டில், தென் பெண்ணையாற்றங் கரையில் உள்ள திருக்கோவலூரைத் தலைநகராகக்கொண்டு ஆண்டுவந்தனர். மணம்மிக்க மலர் மரங்கள் நிறைந்த முள்ளூர் மலைமீது அணுகவோ, அழிக்கவோ இயலா அரண்மிக்க கோட்டை ஒன்றையும் கட்டி வைத்திருந்தனர். அந்நாடு காடுகளுக்கும் மலைகளுக்கும் இடையே இருந்தமையாலும், கடலுக்கு நெடுந் தொலைவில் இடம் பெற்றமையாலும், அது கடல் நீராலோ, பகைவர்களின் கடல் நிகர் படையாலோ பாழுறுவதில்லை. முள்ளூர் மலையைக் கைப்பற்ற வேண்டும் என்ற கருத்தோடு அணுகிய ஆரியர் படையெடுப்பும் முறியடிக்கப்பட்டதேயல்லது, அவ்வாரியர் முன்னிவந்தது முற்றுப் பெறவில்லை. அத்துணை அரண்மிக்கது அந்நாடு.

மலாடு அல்லது மலையமான் நாடு என அழைக்கப் பெறும் அம் மலைநாட்டை ஆண்டவருள் காரி என்பவன்

சிறந்தவன். மலையமான் திருமுடிக்காரி என்றும் அழைக்கப்பெறும் அவன், சிறந்த ஆண்மையாளன். பெரிய கொடையாளன். அவனுக்கு மக்கள் இருவர். அவர்கள் குழவிப் பருவத்தினராய்த் தவழ்ந்து கொண்டிருக்கும் காலத்தில், காரியொடு பகைகொண்டிருந்த கிள்ளிவளவன் என்ற சோணாட்டரசன் அக்குழவிகள் இரண்டையும் கைப்பற்றிச் சென்று தன் பட்டத்து யானையின் காலின்கீழ் இட்டுக் கொல்லத் துணிந்தான். மலையமான் மக்கள், உறையூர் மன்றத்தின் இடையே தனித்து விடப்பட்டனர். பட்டத்து யானையைக் கட்டவிழ்த்து விட்டுவிட்டார்கள். அதுவும் அப்பச்சிளம் குழவிகளை நோக்கி விரைந்துகொண்டிருந்தது. அக்கொடுமையைச் சுற்றி நின்று கண்டுகளித்திருந்தார்கள் சோணாட்டு மக்கள்.

அச்செய்தி கேட்டார் கோவூர்கிழார் என்ற புலவர் பெருந்தகையார். வள்ளியோன் ஒருவன் மக்கள் கொலையுண்டுபோவதை அவர் உள்ளம் விரும்பவில்லை, விரைந்து அவண் வந்து சேர்ந்தார். அந்நிலையில் அவ்விளங்குழவிகள் இரண்டும் முகமறியாமக்கள்முன் விடப்பட்டமையால் அழுவதும், தம்மை நோக்கிவரும் யானையின் பருவுருவம் கண்டு, அது தம்மைக் கொல்லவரும் கொடுவிலங்கு என்பதை அறியாமையால் மகிழ்ந்து நகைப்பதும், மறுவலும் மன்றில் சூழ்ந்து நிற்பாரிடையே தம் தாயோ தந்தையோ இல்லாமை கண்டு இரங்கி அழுவதுமாக மாறி மாறிக் காட்சி அளித்தன. கொடுமை அறியாக் குழவிகளின் இன்முகம் புலவர் உள்ளத்தை மேலும் கவர்ந்துவிட்டது. அரசனை அணுகினார். "வேந்தே! வாரிவழங்கும் வள்ளல்கள் குடியில் வந்தவன் நீ. புறா ஒன்றின் பொருட்டுத் துலைபுகுந்த பெரியோன் பிறந்த பெருமையுடையது உன் குடி. உன்னால் கொல்லப்பட இருக்கும் இம்மக்களோ, பாடிப் பிழைக்கும் புலவர்களின் வறுமைகண்டஞ்சி தன்பால் உள்ளவற்றை



வாரி வாரி வழங்கிய வள்ளியோன் மக்கள். இவ்வியல்பால் இம்மக்கள் இருவரும் நினக்கு உறவுடையரே யல்லது பகையுடையாரல்லர். மேலும், உன்னைப் பகைத்துப் போரிடும் பருவம் உடையவரும் அல்லர். பெற்றோர் முகம் அல்லது பிறர் முகம் பார்த்தறியாப் பச்சிளங் குழவிகள். கொலைக்களத்தில் கொண்டுவிடப் பட்டுள்ளோம் என்பதை அறிந்துகொள்ளமாட்டா அத்துணை இளையர். இவர்களைக் கொல்வதால் உனக்கும் உன் குடிக்கும் பழியன்றி, புகழ் உண்டாகாது. ஆகவே, இவரைக் கொல்வது அறமோ, அறிவுடைமையோ ஆகாது" என்று அறிவுரை கூறி அவர்களைக் காப்பாற்றி, அவர் ஊருக்கு அனுப்பிவைத்தார்.

"நீயே, புறவின் அல்லல் அன்றியும் பிறவும்
இடுக்கண் பலவும் விடுத்தோன் மருகனை;
இவரே, புலன் உழுது உண்மார் புன்கண் அஞ்சி
தமது பகுத்து உண்ணும் தண்நிழல் வாழ்நர்.
களிறு கண்டு அழூஉம், அழாஅல் மறந்த
புன்தலைச் சிறாஅர். மன்று மருண்டு நோக்கி
விருந்திற் புன்கணோ உடையர்.
கேட்டனையாயின் நீ வேட்டது செய்ம்மே."

கோவூர் கிழாரால் உயிர் பிழைத்த அக்குழவிகள் இரண்டும் முள்ளூர் மலையரண் அடைந்து வளரலாயினர். அரசர்க்குரிய அறநூல்கள், அரசியல் நூல்கள் ஆகிய அனைத்தையும் ஐயம் அறக் கற்றுத் தேர்ந்தனர். அக்காலப் படைக்கலங்களாகிய வாள், வில் ஆகியவற்றில் அரிய பயிற்சி பெற்றனர். சுருங்கச் சொன்னால், அன்று நாடாண்டிருந்த அரசிளங்குமரர்கள் அவ்வளவுபேரும் கண்டு பொறாமை கொள்ளத்தக்க கட்டிளங்காளையராய்த் திகழ்ந்தனர். நிற்க.

பறம்பு என்ற மலையரணைப் பாரி என்பான் ஆண்டு வந்தான். அவன் கொடைப்புகழ் தமிழ் நாடெங்கும்

சென்று பரவியிருந்தது. "கொடுக்கிலாதானைப் பாரியே என்று கூறினும் கொடுப்பாரில்லை" எனக் கொடைப் புகழிற்கு அவனையே எடுத்துக் காட்டினார்கள் புலவர்கள் எல்லோரும். அவ்வாறு அவன் புகழ் பெருகுவதுகண்டு மனம் பொறாத முடிவேந்தர் மூவரும், அவனை வஞ்சனையால் கொன்றுவிட்டார்கள். அவனுக்கு மகளிர் இருவர் இருந்தனர். அறிவில் சிறந்த அரிவையர் அன்னார். அவர்களைத் தக்கார்க்கு மணம் செய்துவைக்க விரும்பினார் பாரியின் உயிர் நண்பராகிய கபிலர். ஆனால், அம்மகளிரை மணந்தால், அவர் தந்தையின் பகைவர்களாகிய மூவேந்தர்கள், தம் உயிரையும் முடித்து விடுவரோ என்ற அச்சத்தால் அவரை மணக்க, மன்னர் எவரும் முன்வந்திலர். இறுதியில் அருந்தமிழ் மூதாட்டி ஔவையும், பெரும்புலவர் கபிலரும் ஒன்றுகலந்து, பாரி மகளிரை மணக்கத்தக்க மாண்பும், அதற்கேற்ற மன வுறுதியும் உடையவர் மலையமான் திருமுடிக்காரியின் மக்களே எனத் துணிந்தனர். உடனே, இருவரும் முள்ளூர் அரண் அடைந்து மலையமான் மக்களுக்குத் தங்கள் விருப்பத்தை வெளியிட்டனர். தங்கள் தந்தையின் காலந் தொட்டே, அப்பெரும் புலவர்களின் பெருமையினை அறிந்திருந்த அவ்வரசிளங்குமரர்கள், அவர்கள் வேண்டியவாறே, பாரிமகளிரை மணந்து மனையறம் மேற்கொண்டு மகிழ்ந்திருந்தனர். மலையமான் மக்களாகிய அவ்விருவரில் ஒருவனே திருக்கண்ணன்.

வள்ளல் பாரியை வஞ்சனையால் கொன்ற வேந்தர் வழியில் வந்தவனும், தன் தந்தையைக் கொன்று தன்னையும் தன் உடன்பிறந்தானையும் யானைக் காலின்கீழ் இட்டுக் கொல்லத் துணிந்தோனும் ஆகிய கிள்ளிவளவன் வழிவந்தோர்பால் மாறாச்சினம் கொண்டிருந்தான் திருக்கண்ணன். தன் வஞ்சத்தைத் தீர்த்துக் கொள்ளும் வாய்ப்பும், அவனுக்கு அண்மையிலேயே கிடைத்தது. பேரரசன் கரிகால



னுக்குப் பிறகு சோழநாடு இரண்டாகப் பிரிந்துவிட்டது. உறையூரையும் அதைச் சூழ உள்ள உள்நாடுகளையும் கைப்பற்றிக்கொண்டு ஒரு கிளையினரும், புகாரையும் அதை அடுத்திருந்த கடற்கரை நாடுகளையும் கைப்பற்றிக்கொண்டு மற்றொரு கிளையினரும் ஆட்சிபுரியத் தொடங்கினர். அவ்விருதிறத்தார்க்கிடையே தோன்றிய பங்காளிப்போர் கிள்ளிவளவன் காலத்திலேயே தொடங்கிவிட்டது. கிள்ளிவளவனும் அவன் தம்பி நலங்கிள்ளியும் ஒரு பக்கமும், நெடுங்கிள்ளி என்பான் மற்றொரு பக்கமும் நின்று போரிட்டுச் சோணாட்டு அரசியல் அமைதியைக் குலைத்தனர். இறுதியில் நெடுங்கிள்ளி உயிரிழந்து போனான். பிற்காலத்தில் இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி எனும் பெயர்பூண்டு பேரரசனாய் வாழ்ந்த நெடுங்கிள்ளியின் ஒரே மகனையும் பகைவர்கள் அழித்துவிடத் துணிந்திருந்தனர்.

சோணாட்டில் இவ்வரசியற் குழப்பநிலையைத், தன் வஞ்சம் தீரப் பயன்கொண்டான் திருக்கண்ணன். மேலும், இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் நாட்டின் நலி வினைக் காணத் திருக்கண்ணனால் இயலவில்லை. தன் தந்தையாம் மலையமான் திருமுடிக்காரியின் படைத்துணையால் பெருமையுற்றது அச்சோணாடு. தன் தந்தையின் காவல் வன்மையால் பெருமையுற்ற நாடு, தான் காணப் பாழுற்றுப் போவதை அவனால் தாங்க முடியவில்லை. அதனால் சோணாட்டு அரசியலில் துணிந்து அடியிட்டான். அரசிளங்குமரனை அவன் பகைவர் பற்றிக்கொள்ளா முன்பே, அரும்பாடுபட்டுக் கொண்டுவந்து தன் முள்ளூர்க் கோட்டைக்குள் சேர்த்துவிட்டான். அணுகுதற்கரிய அரண்மிக்கது அம்முள்ளூர்க்கோட்டை. அதனால், பகைவர்கள் மலையமான் நாடுபுக மருண்டனர். மேலும் திருக்கண்ணன் பேராற்றல் வாய்ந்தவன். பங்காளிப் போரால் படைவலி இழந்திருக்கும் தம்மால் அவனை வெல்லுதல்

இயலாது என்பதையும் அறிந்திருந்தனராதலின், அவர்கள் ஆற்றல் இழந்து அடங்கி விட்டனர்.

முற்றி வளைத்த பகைவர் பலரும் தோற்றுப் பின்னிடும்படி வெற்றிகண்ட விழுப்புகழ் வாய்ந்த முள்ளூர் மலையரணில், சோணாட்டு அரசிளங்குமரன் இனிதே வாழ்ந்திருந்தான். பகைவர்களும் வன்மை இழக்கட்டும். அவர்களை வெற்றிக்கொள்ளும் வகையில் தன் படையும் பயிற்சி பெறட்டும். அரியணையில் அமர்ந்து ஆட்சிபுரியத்தக்க அறிவும் ஆற்றலும் இளவரசனுக்கும் பெருகட்டும் என்ற கருத்தோடு சிலகாலம் காத்திருந்தான் திருக்கண்ணன். ஆனால், அரசிழந்து அல்லலுறும் சோணாட்டின் அவலநிலை, அவனை நெடுங்காலம் காத்திருக்க விடவில்லை. வெற்றி முரசும், விழாமுரசும் ஓயாது ஒலிக்கும் சோணாட்டில் எங்கும் அழுகுரலே கேட்டது. காவிரியாற்றுப் பாய்ச்சலால் வளங்கொழிக்க வேண்டியநாடு வளமிழந்து வனப்பழிந்து காட்சி அளித்தது. அதனால் அந்நாட்டு அரசியல் வாழ்வில் துன்பம் நீக்கி இன்பம் பொங்கும் நிலையை விரைந்து நிலைநாட்ட விரும்பினான். உடனே பெரும்படையோடு புறப்பட்டுச் சோணாடு புகுந்தான். பாழ்புரிந்துகொண்டிருந்த பங்காளிகள் அனைவரையும் அழித்தான். நாட்டில் அமைதியை நிலைநாட்டினான். அரசிளங்குமரனை அரியணையில் அமர்த்தி அரசனாக்கினான். தாழ்ந்த அவன் குடையை எடுத்து நிறுத்தினான். சோணாட்டு வாழ்வில் புதிய உணர்ச்சியும் இன்பமும் உருப்பெற்றன. சோணாட்டு மக்கள், திருக்கண்ணனைத் தங்கள் சிந்தை மகிழ்ந்து வாழ்த்தினார்கள்.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியின் முடிசூட்டு விழாவிற்கு வந்திருந்த புலவர்களுள் ஒருவராய மாறோக்கத்து நப்பசலையார் என்ற பெண்பாற் புலவர், "திருக்கண்ண! கோடைக்காலமே மிக மிகக் கொடுமையுடைய



காலமாம். அக்கோடைக்காலம், குறுகி முடிவுற்றுவிடாது, நனிமிக நீண்டு செல்கிறது. கோடை வெய்யிலின் கொடுமையால், வெம்பும் மலைகள், அவ்வெப்பம் மேலும் மேலும் மிகுவதால் வெடித்துப் பொடிபடுகின்றன. காட்டு மரங்கள் தீப்பற்றி எரிந்து கரியாகின்றன. பெரிய பெரிய நீர்நிலைகளெல்லாம் பைதறக் காய்ந்து தூள்பறக்கின்றன. கோடையின் கொடுமை பொறாது, மாவும் மாக்களும் கூட்டங்கூட்டமாய் மாள்கின்றன. மக்கள் மனம் கலங்கி நிற்கின்றனர். இந்நிலையில் ஒருநாள், வானம் திடுமென இருண்டு இடித்து மின்னி, உலகத்தையே அடித்துச் செல்வது போலும் பெருமழை பெய்யக் கண்டால், மக்கள் உள்ளம் மகிழ்ச்சியால் எவ்வளவு துள்ளும் என்பதை உன் உள்ளம் அறியும். அவ்வளவு மகிழ்ச்சி கொள்ளுகிறார்கள், இன்று சோணாட்டு மக்கள். நின் தந்தை உயிரோடிருந்திருந்தால், சோணாட்டிற்கு இவ்வவலநிலை வந்திராது. அவன் இறந்து பிறவாப் பெருநிலை பெற்றுவிட்டான். சோணாடு அல்லல் உற்றுப் போயிற்று. அதை நீ மாற்றி மகிழ்ச்சியை அளித்தாய். வாழ்க உன் கொற்றம்! வளர்க உன் குடிப் புகழ்!" என வாழ்த்துரை வழங்கி வானளாவப் புகழ்ந்து பாடினார்.

“ அரசு இழந்திருந்த அல்லற்காலை,
முரசு எழுந்துஇரங்கும் முற்றமொடு, கரைபொருது
இரங்குபுனல் நெரிதரும் மிகுபெரும் காவிரி
மல்லல் நன்னாட்டு அல்லல்தீரப்,
பொய்யா நாவின் கபிலன் பாடிய
மைஅணி நெடுவரை யாங்கண், ஒய்யெனச்
செருப்புகல் மறவர் செல்புறம் கண்ட
எள்ளறு சிறப்பின் முள்ளூர் மீமிசை
அருவழி இருந்த பெருவிறல் வளவன்
மதியருள் வெண்குடை காட்டி, அக்குடை
புதுமையின் நிறுத்த புகழ் மேம்படுந!

விடர்ப்புலி பொறித்த கோட்டைச் சுடர்ப்பூண்
சுரும்பார் கண்ணிப் பெரும்பெயர் நும்முன்,
ஈண்டுச்செய் நல்வினை யாண்டுச்சென்று உணீஇயர்
உயர்ந்தோர் உலகத்துப் பெயர்ந்தனன் ஆதலின்,
ஆறுசெல் மருங்கின் மாதிரம் துழவும்
கவலை நெஞ்சத்து அவலம் தீர
நீ தோன்றினையே நிரைத்தார் அண்ணல்!
கல் கண்பொடியக், கானம் வெம்ப,
மல்குநீர் வரைப்பன் கயம்பல உணங்கக்,
கோடை நீடிய பைது அறுகாலை
இருநிலம் நெளிய ஈண்டி
உரும் உரறுகருவிய மழை பொழிந்தாங்கே.''

அரியணை ஏறிய இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளி யும், தன்னையும் காத்துத், தனக்கு அரசுரிமையும் அளித்த திருக்கண்ணனுக்குச் சோழிய ஏனாதி என்ற பட்டத்தையும், ஏனாதி மோதிரத்தையும் அளித்துச் சோணாட்டுப் படைத் தலைவனாக்கிப் பெருமை செய்தான்.

இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளியைச் சோணாட்டு அரியணையில் அமர்த்திய பின்னரும், சோழிய ஏனாதி திருக் கண்ணன் உள்ளம் அமைதியுற்றிலது. உள்நாட்டுக் குழப்பம் ஒருவாறு அடங்கிவிட்டது என்றாலும், சோழன் இளமைப் பருவத்தைப் பயன்கொண்டு, அவன் அரசைக் கைப்பற்றச் சோழர்குலப் பகைவர்களாகிய சேரனும் பாண் டியனும் முன்வருதலும் கூடும் என்ற நினைப்பால், அவனுக் குத் துணையாகச், சோணாட்டுத் தலைநகரில் மேலும் சிலநாள் தங்கியிருந்து, அந்நாட்டையும் நகரையும் அரண்மிக்கதாக்கி விட்டுத், தன் முள்ளூர் மலைக்கு வந்து சேர்ந்தான் திருக் கண்ணன்.

ஆனால், அவன் ஊர் திரும்பிய சின்னாட்களுக்கெல்லாம் அவன் எதிர்பார்த்தது நிகழ்ந்துவிட்டது. சேரநாட்டில்



யானைக்கண் சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறை என்பவன் அரசாண்டு கொண்டிருந்தான். பேரரசர்களையும் எதிர்த்துப் போரிட்டழிக்கவல்ல பேராண்மையும், பெரும்படையும் உடையான் அவன். மேலும், ஆட்சி நலத்தால் நாட்டு மக்களின் நன்மதிப்பையும் பெற்றிருந்தான், அவன், இராச சூயம்வேட்டபெருநற்கிள்ளியை வென்று சோணாட்டு ஆட்சியைக் கைப்பற்றக் கருதினான், கருதிய ஒன்றைக் காலம் தாழ்க்காது செய்து முடிக்கவல்ல அவன் படை சோணாட்டுள் புகுந்து போரிடலாயிற்று.

சேரன் படைபுகுந்த செய்தி கேட்டுக் கலங்கினான் கிள்ளி. ஆயினும், திருக்கண்ணன் தொடர்பால் அவனும், அவன் படையும் போர்ப் பயிற்சியில் தேர்ச்சியுற்றிருந்தமை யால் அஞ்சி அடங்கிவிடாமல், அப்படையெடுப்புச் செய் தியை முள்ளூர்மலை மன்னனுக்கு அறிவிக்கும் ஒற்றனைப் போக்கிவிட்டுப் பாய்ந்துவரும் பகைவர் படையைத் தடுத்து நிறுத்திப் போரிட்டுக் கொண்டிருந்தான். ஆயினும், களம் பல கண்டவனும், ஆண்டு முதிர்ச்சியால் போர் முறைகளைப் பெருக அறிந்தவனும் ஆகிய இரும்பொறையை வென்று ஓட்டுவது இராசசூயம் வேட்டோனால் இயலவில்லை. சோணாட்டு மண்ணைச், சேரநாட்டுப் படைகள் சிறுகச் சிறுகப் பற்றிக்கொள்ளச், சோழன் பின்வாங்க வேண்டிய தாயிற்று. ஆயினும், திருக்கண்ணன் விரைந்து வந்து வெற்றி வாங்கித் தருவன் என்ற தளரா நம்பிக்கையால், தற்காப்புப் போரினை ஒருவாறு மேற்கொண்டிருந்தான்.

சேரர் படை சோணாட்டுத் தலைநகரை அணுகி விட்டது. ஓரிருநாட்களில், சேரன் வெற்றிவிழாக் கொண் டாடி விடுவன் என்று எண்ணும் நிலை வந்துவிட்டது. அந் நிலையில், தன் படையோடு விரைந்து வந்து சேர்ந்தான் திருக்கண்ணன். போரின் முடிவே மாறிவிட்டது. புறங்

காட்டிய சோழர்படை புகுந்து தாக்கத் தொடங்கிவிட்டது.
வென்று கைப்பற்றிய சோணாட்டு மண்ணைக் கைவிட்டுப்
புறமுதுகு காட்டி விரைந்தோடத் தொடங்கிவிட்டது
சேரர் படை. சேர நாட்டுப் படையின் இறுதிவரிசை,
சோணாட்டு மண்ணைவிட்டு ஓடும்வரை, அப்படையைத்
துரத்திச் செல்வதைத் திருக்கண்ணன் விட்டானல்லன்.
சேரர் படை அறவே அழிந்துவிட்டது. அப்படையைச்
சேர்ந்த மலைபோலும் உருவினவாகிய யானைகள், களத்தில்
மாண்டு மடிந்தன. பேரரசு பெறலாம் 'என்ற பேராசை
யால் படையொடு வந்த மாந்தரஞ்சேரல், தன் படை
இழந்து தோற்றுத் தன் நாடு போய்ச் சேர்ந்தான்.

சோணாட்டுத் தலைநகரில் வெற்றிவிழாக் கொண்டாடி
னார்கள் மக்கள். விழாவில் கலந்துகொண்ட பெரியார்
களுள் சிலர், பேரரசன் ஒருவனை இளமைப் பருவத்திலேயே
வெற்றிகொண்ட இராசசூயம் வேட்டோன் செயலைப்
பாராட்டினார்கள். ஆனால் அவனோ, விழாவிற்கு வந்திருந்
தோர் முன்னிலையில் திருக்கண்ணனைக் கொண்டு நிறுத்தி,
"நாட்டு மக்களே! இப்போரில் வெற்றி கண்டவன் நான்
அல்லேன். இதோ நிற்கும் என் ஆருயிர் நண்பன் திருக்
கண்ணனே. ஆகவே, இவ்விழாவில் எனக்குச் செய்யும்
ஒவ்வொரு சிறப்பிற்கும் இவனே உரியனாவன்" என்று
கூறிப் பாராட்டினான்.

சோணாட்டுத் தலைநகரில், வெற்றிபெற்ற வேந்தன்
அளித்த பாராட்டைக் காட்டிலும் சிறந்த பாராட்டைச்,
சேர நாட்டில், தோற்ற வேந்தன் வாயால் பெறும் பேறு
பெற்றான் திருக்கண்ணன். தோற்றுவந்த யானைக்கண் சேய்
மாந்தரஞ்சேரல் இரும்பொறை, தனிமையில் கிடந்து தன்
தோல்வி குறித்து வருந்திக்கொண்டிருந்தான். "நான்
இன்று தோற்றது, உண்மையில், படைவலி இன்மை



யாலோ, போர்முறை அறியாமையாலோ அன்று. ஆகூழ்
இன்மையாலேயே தோற்றேன். அதுமட்டும் இருந்திருந்
தால், பெரும்புலவர் கபிலர் உயிரோடிருந்திருப்பர். அவர்
உயிரோடிருந்திருந்தால் இப்போரின் முடிவே வேறாகி
யிருக்கும். அவர் இத்திருக்கண்ணனின் தந்தையார் காரி
யின் நண்பராவர். இத்திருக்கண்ணனுக்குத் திருமணம்
செய்து வைத்தவருமாவர். காரி, என் முன்னோனாகிய
தகடூர் எறிந்த பெருஞ்சேரல் இரும்பொறை, தகடூர்ப்
போரில் அதியமான் நெடுமான் அஞ்சியை வெல்லத் துணை
புரிந்து, சேர நாட்டிற்கு வெற்றி தேடித் தந்த செம்ம
லாவன். காரிக்கும் என் குடி முதல்வர்க்கும் இருந்த அந்
நட்புறவை எடுத்துக் காட்டித், திருக்கண்ணனை எனக்கும்
படைத்துணை அளிக்கும்படிக் கபிலர் கூறியிருந்தால், திருக்
கண்ணன் மறுத்திருக்க மாட்டான். அவன் படைத்துணை
எனக்கே கிடைத்திருக்கும். வெற்றி எனக்கே வாய்த்திருக்
கும். ஆனால், அந்தோ! கபிலர் தாம் மறைந்துவிட்டாரே.
அவர் இருந்திருந்தால் எத்தனை நன்றாம்!" என்றெல்லாம்
எண்ணி எண்ணி வருந்திக்கொண்டிருந்தான்.

மாந்தரஞ்சேரல் இரும்பொறை அவ்வாறு மனம்
நொந்து கொண்டிருக்குங்கால், அவன் நண்பர் சிலர் அவனை
அணுகி, அவன் மனநிலையை அறியாது, "மன்ன! மலை
நிகர் யானைகளைக் கொண்ட பெரும்படை பாழ்பட்டுப்
போக, பேராற்றல் வாய்ந்த நீ, இறுதியில் இளையோனாகிய
இராசசூயம் வேட்ட பெருநற்கிள்ளிக்குப் புறங்காட்ட
நேர்ந்ததே! என்னே இக்கொடுமை!" என்று கூறி
வருந்தினார்கள். அவர்க்கு, "நண்பர்காள்! வெற்றி நமக்கே
வாய்த்திருக்கும். அதுவும் எளிதில் வாய்த்திருக்கும். ஆனால்,
அது நம்மை அணுகிக் கொண்டிருக்கும் அந்நிலையில் வந்து
விட்டான் திருக்கண்ணன். காலில் வீரக்கழல் ஒலிக்க,
காற்றென விரைந்து கடல்போல் பரந்த தன் படையோடு

அக்காரித் திருமகன் வந்து களம்புகவே, சோர்ந்துபோன சோழர் படைக்கும் ஊக்கமும் உரமும் மிகுந்துவிட்டன. முன்னேறிச் சென்றுகொண்டிருந்த நம் படையை, அவன் மட்டும் தடுத்து நிறுத்தி முறியடிக்காதிருந்தால் நமதே அல்லவோ வெற்றி? உண்மையில் நம்மை வெற்றி கொண்டவன், நீங்கள் நினைப்பதுபோல் அவ்விளையோனாகிய சோழன் அல்லன். முதுபெரும் வீரனும், முள்ளூர் மலைக் காவலனுமாகிய அக்கண்ணனே ஆவன். நம் வெற்றியை, அவன் அல்லவோ இடைபுகுந்து கெடுத்து விட்டான்!'' என்று விடையளிக்கும் முகத்தான் திருக் கண்ணன் பேராண்மையை வாயாரப் புகழ்ந்தான் இரும் பொறை. பகைவரும் போற்றும் திருக்கண்ணனின் பேராண்மைப் பெருமைதான் என்னே!

**“குன்றத் தன்ன களிறு பெயரக்**
**கடந்துஅட்டு வென்றோனும் நிற்கூறும்மே!**
**‘வெலீஇயோன் இவன்’ என!**
**‘கழல்அணிப் பொலிந்த சேவடி நிலம் கவர்பு**
**விரைந்து வந்து சமம் தாங்கிய**
**வல்வேல் மலையன் அல்லனாயின்,**
**நல்லமர் கடத்தல் எளிதுமன் நமக்கு’ எனத்**
**தோற்றோன் தானும் நிற்கூறும்மே,**
**‘தொலைஇயோன் இவன்’ என!**
**ஒருநீ ஆயினைபெரும! பெருமழைக்கு**
**இருக்கை சான்ற உயர்மலைத்**
**திருத்தகு சேஎய் நிற் பெற்றிசினோர்க்கே.’**

# 6. திருக்கிள்ளி

**சோ**ழர் குலத்தில் வந்தவர்கள், கிள்ளி, வளவன் செம்பியன், சென்னி எனப் பல பெயரிட்டு அழைக்கப் பெறுவர். அப்பெயர்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு காரணம் குறித்து வந்தனவே. அவை, சோழர் குலத்து முதல்வர்கள் ஆற்றிய அரும்பெரும் நிகழ்ச்சிகளைக் குறித்து நிற்கும். “சோழவளநாடு சோறுடைத்து'' எனப் பாராட் டப் பெறும் பெருமையுடையது சோணாடு. தென்னாட்டின் நெற்களஞ்சியம் தஞ்சை என்ற சிறப்பினை அந்நாடு இன்றும் இழக்காமல் பெற்றிருப்பதற்கு அந்நாடாண்ட சோழ அரசர்கள் அன்று ஆற்றிய அருந்தொண்டுகளே காரண மாம். அவர்கள், காடுகளை அழித்து நாடு கண்டதோடு, அந்நாட்டை வளமாக்குவதிலும் கருத்தைச் செலுத்தினர் கள். காவிரிக்கு அணையும் கரையும் அமைத்துக் காவிரி நீரைப் பயன் கொண்டார்கள். ஆற்று நீர் கிடைக்காத இடங்களில் பெரிய பெரிய நீர்நிலைகளைத் தோண்டி, நீரைத் தேக்கி வளங்கண்டார்கள். அப்பெருமையைக் “குளம் கொட்டு வளம் பெருக்கி'' எனப் பாவிடை வைத்துப் பாராட்டியதோடு, அவ்வரசர்களின் பெயரிடை வைத்துப் பாராட்டவும் விரும்பினார்கள், பழந்தமிழ் மக்கள். அவர் விருப்பத்தின் விளைவுகளில் ஒன்றாகவே, அவ்வரசர்கள் கிள்ளி என அழைக்கப் பெற்றார்கள். கிள்ளி என்ற சொல், தோண்டுதல் எனப் பொருள்படும் கிள் என்ற மூலத்தி லிருந்து பிறந்ததாகும். ஆகவே, கிள்ளி என அழைக்கப்

பெறுவார், நீர்நிலை பல தோண்டிய பெருமைமிக்க குடியில் வந்தவராவர் என்பது புலனுதல் அறிக.

கிள்ளி என்ற அச்சிறப்புப் பெயரை விரும்பி மேற் கொண்ட பலருள் திருக்கிள்ளியும் ஒருவன். ஆளும் உரிமை பெற்ற அரசர் குடியில் பிறந்தானேனும் திருக்கிள்ளிக்கு அவ்வாய்ப்புக் கிடைத்திலது. ஒரு குடியில் பிறந்த அனை வர்க்கும் நாடாளும் உரிமை உண்டாகி விடுவதில்லை. மூத் தோன் அரியணையில் அமர்ந்து ஆட்சி புரிய, அவனுக்கு இளையராய்ப் பிறந்தவர்கள், அமைச்சர்களாகவும் படைத் தலைவர்களாகவும் பணிபுரிந்து, ஆட்சிக்கு அரண்செய்வது அக்கால வழக்கமாகும். அம்முறையில் சோழர் பெரும் படைக்குத் தலைமை தாங்கும் சிறந்த பணிபுரிந்தவன் நம் திருக்கிள்ளி.

திருக்கிள்ளி, போர்ப் பயிற்சிகளை முறையாகத் தேர்ந்து அம்முறைகளை அறம்பிறழா நெறியில் செயலாற்றும் திறம் உடையனுவன். 'போரில் பெறும் புண், புண் அன்று; புகழின் கண்; அப்புண் பெருது கழியும் நாள், வீரர்க்கு வீணுள்' என்ற விழுமிய கருத்துடையான். அதனுல் பகைவர் தொடுத்துவிட்டனர் என்ற செய்தியைக் கேட்டதும் பூரிக் கும் அவன் தோள்கள். தன்கீழ்ப் பணிபுரியும் வீரர் பலர் இருக்கவும், அவர்களுள் எவரையும் அனுப்பாது, பகை வர் படைவரிசை முன்னே, அவன் ஒருவனே முதற் கண் புகுந்து அருஞ்சமர் புரிவன். பகைவர் படை யைச் சேர்ந்த வாள்வீரர் பலரோடு தான் ஒருவனுகவே நின்று போரிட்டு வெல்வான். அதனுல், பகைவீரரின் வாள்கள் அவன் உடலெங்கும் பாய்ந்து பாய்ந்து எண்ணிலாப் புண்களைப் பண்ணியிருக்கும். ஒரு போரில் பெற்ற புண்கள் ஆறி மறைவதற்கு முன்பே மற்றெரு போரில் கலந்துகொண்டு புண்பெற்று விடுவான். அதனுல் அவன் உடலெங்கும் வாள்பட்டு உண்டான வடுக்களே



காட்சி அளித்தன. அவ்வடுக்கள், அவன் உடல் வனப்பைக் கெடுத்துவிட்டன. காண நாணும் கொடுமை யுடையதாகி விட்டது அவன் வடிவம். ஆனுல், அவன் வெற்றிப் புகழோ பாரெல்லாம் சென்று பரவிற்று. பைந்தமிழ் நாட்டு மக்கள் அனைவரும் அவனைப் புகழ்ந்து பாராட்டினுர்கள். அவன் புகழைக் காதுகுளிரக் கேட்டு மகிழ்ந்தார்கள்.

வாள்வடுப் பெறும் விழுமிய சிறப்பினும் சிறந்த பிறி தொரு போர்ப் பண்பு திருக்கிள்ளிபால் பொருந்தி யிருந் தது. "பேராண்மை என்பதறுகண்; ஒன்று உற்றக்கால் ஊராண்மை மற்று அதன் எஃகு" என்ருர் வள்ளுவர். படைக்கலம் இழந்து நிற்பவர், புறமுதுகு காட்டி ஓடுவோர் ஆகிய இவர்கள்மீது படைக்கலம் ஏவுவது போர் அறம் ஆகாது என்ற உணர்வுடையான் திருக்கிள்ளி. பகைவரை வெல்லவேண்டும் என்ற ஆர்வத்தில், அவன் அவ்வுணர்வை மறந்துவிட மாட்டான். தோற்ருேடும் பகைவரைத் துரத்திச் சென்று தொலைக்கத் துணியாது அவன் உள்ளம். திருக்கிள்ளியின் இந்நல் உள்ளத்தை அவன் பகைவர்கள் நன்கு அறிந்திருந்தார்கள். அதனுல் கிள்ளி, வாள் எடுத் துக் களம் புகுந்தான் என்பதனைக் கண்டுகொண்டதும் புறமுதுகு காட்டிவிடுவர். 'வீரர்கள், தம் மார்பில் புண் பெறுவதைக் காட்டிலும், பகைவர் முதுகில் புண் உண் டாக்காதிருப்பதிலேயே விழிப்பாயிருத்தல் வேண்டும். அதுவே அவர்க்குப் பெரும் புகழாம்' என்பதை உணர்ந் திருந்தான் திருக்கிள்ளி. அதனுல் பகைவர் புறமுதுகிட்ட தும், அவன் கைவாள் உறையுள் புகுந்துகொள்ளும். அத ஞல், அவன் பகைவர் படையைச் சேர்ந்த எவரும் சிறு புண்ணும் பெறுவதில்லை. அவர் மேனியில் எவ்வடுவும் இடம் பெறுவதில்லை. அதனுல் அவர் மேனி அழகால் மின்னிற்று. அவர் மேனி அழகு அவர்க்கு அளித்த சிறப் பின் அளவைக் காட்டிலும், அந்நிகழ்ச்சி திருக்கிள்ளிக்கு

அளித்த புகழின் அளவு பெரிதாம். அப்புகழ், அவன் பெற்ற வாள்வடுக்கள் வழங்கிய புகழினும் பெருமை யுடைத்தாம். அதனால், அவன் தோற்றம் காண வெறுக்கத் தக்கதாய்த் தோன்றினும், அவன் புகழ் கேட்க இனித்தது. அவனைக் காண வெறுப்பவர் ஒவ்வொருவரும் அவன் புகழைக் கேட்கத் துடித்தனர்.

ஆனால், அவன் பகைவர் நிலையோ இதற்கு முற்றிலும் முரணும். புண் எதுவும் பெருமையால் அவர் மேனி பொன் என மின்னிற்று என்றாலும், போர்க்களம் விட்டுப் புறங் காட்டி ஓடி மறையும் அவர் செயல் பலராலும் இழித்தும் பழித்தும் பேசப்பட்டது. அவர் பெயரைக் கேட்கவும் நாணினார்கள் நாட்டு மக்கள். அவர்தம் வடிவழகைக் காண விரும்பிய ஒருசிலரும், அவர் செயல் கேட்கப்பொறாது காதுகளைப் பொத்திக்கொண்டனர்.

திருக்கிள்ளியின் இப்பெருமையையும், அவன் பகை வரின் சிறுமையையும் கண்டார் ஒரு புலவர்; கிள்ளியைப் பாராட்டிப் பாடவேண்டும் என்ற பெருவேட்கை கொண் டார்; உடனே சென்று கிள்ளியைக் கண்டார்.

"கிள்ளி! உன் புகழ் என் காதுக்கு இனிக்கிறது என்றா லும், வடு நிறைந்த உன் தோற்றத்தைக் காண என் கண் கூசுகிறது. உன் பகைவர் பெறும் தோல்வியைக் கேட்க என் காது வலிக்கிறது என்றாலும், வடுவிலா அவர் மேனி வனப்பைக் காண என் கண் விரும்புகிறது. அதனால் நீயும் ஒருவகையில் இனிமை உடையாய்; உன் பகைவரும் ஒரு வகையில் இனிமை உடையவரே. அதைப் போலவே வெறுக்கத்தக்க பண்பும் ஒவ்வொரு வகையால் இருவரிடத் திலும் பொருந்தியுளது. ஆகவே, உங்களுக்கிடையே வேற் றுமை எதுவும் இல்லை. உனக்கு எவ்வகையிலும் குறை யுடையவரல்லர் உன் பகைவர். அங்ஙனமாகவும், கிள்ளி!



ஏ நம் உலகமும் உன்னைமட்டும் புகழ்வானேன்? புலவர் கள் உன் புகழை மட்டும் பாராட்டிப் பாக்கள் புனைவா னேன்? அது ஏனோ? அது எனக்கு விளங்கவில்லை. நான் அறிய, அதை நீ அறிவிப்பாயாக!" என்று கேட்டு, அவனைப் பழித்து, அவன் பகைவரைப் பாராட்டுவார்போல் அவனைப் புகழ்ந்து, அவன் பகைவரைப் பழிக்கும் அழகிய பாட் டொன்றைப் பாடியருளினார் :

"நீயே, அமர்காணின் அமர் கடந்து, அவர்
படைவிலக்கி எதிர் நிற்றலின்
வாஅள் வாய்ந்த வடுவாழ் யாக்கையொடு
கேள்விக்கு இனியை; கட்கு இன்னாயே;
அவரே, நிற்காணின் புறம் கொடுத்தலின்
ஊறு அறியா மெய்யாக்கையொடு
கண்ணுக்கு இனியர்; செவிக்கு இன்னாரே.
அதனால், நீயும் ஒன்றுஇனியை; அவரும்ஒன்று இனியர்;
ஒவ்வா யாவுள? மற்றே. வெல்போர்க்
கழல்புனை திருந்தடிக் கடிமான் கிள்ளி!
நின்னைவியக்கும் இவ்வுலகம்! அஃது
என்னோ? பெரும! உரைத்திசின் எமக்கே."

# 7. திருக்குட்டுவன்

மூவேந்தர்களில், சேரர் குலத்தால் ஒருவரே எனினும், குடியால் பலராவர். குட்டுவர், குடவர், சேரலர், பொறையர் என அவர்கள், பிறந்த அக்குடிகளால் பெயரிட்டு அழைக்கப் பெறுவர். சேரர் பேரரசு நிலவியநாடும், குட்ட நாடு, குடநாடு, கற்காநாடு, பூழிநாடு, மலாடுநாடு என்ற பல உட்பிரிவுகளை உடையதாகும். செந்தமிழ் மொழிவழங்கும் பன்னிரண்டு நாடுகளுள் இவையும் அடங்கும். இவற்றுள், மேலைக் கடற்கரையை ஒட்டி விளங்கிய நாடே குட்டநாடு. குட்டநாட்டில், பண்டு, பைந்தமிழ் மொழியே பேசப்பட்டது என்றாலும், அந்நாட்டு மக்கள், அம்மொழியை அன்றே சிதைத்து வழங்கத் தலைப்பட்டுவிட்டார்கள். தமிழ் இலக்கண நூல்களுக்கு உரைவகுத்த ஆசிரியர்கள், "குட்ட நாட்டார் தாயைத் தள்ளை என அழைப்பர்" என்று கூறி அவர் மொழி வேறுபடுவதைக் காட்டிச் செல்வர்.

சேர இனத்தின் உட்பிரிவுகள் பலவற்றுள்ளும், அவ்வினத்துச் சிறந்த பேரரசர் பலரை ஈன்ற பெருமையுடையது குட்டுவர் குடியே. பல்யானைச் செல்கெழு குட்டுவன், கடல்பிறக் கோட்டிய சேரன் செங்குட்டுவன், குட்டுவஞ் சேரல், நம்பி குட்டுவன் போன்ற பேரரசர்கள் அக்குடியில் பிறந்தவரே. ஆற்றல்மிக்க அரசர் பலரைப் பெற்றெடுத்த அக்குடி, அருந்தமிழ்ப் புலவர் சிலரையும் அளித்துளது. குட்டுவன் கண்ணனார், குட்டுவன் கீரனார் என்ற சங்கத்



தமிழ்ப் புலவர் இருவரும் குட்டுவர் குடிப் பிறப்புடையவராவர். நெஞ்சை அள்ளும் சிலப்பதிகாரம் என்ற தெள்ளு தமிழ்க் காப்பியத்தை அருளிய இளங்கோ அடிகளார் பிறந்த பெருமையுடையதும் அக்குடியே.

இத்துணைப் பெருமைவாய்ந்த அக்குட்டுவர் குடியில் அறிவு, ஆண்மை, உரு, திரு, கல்வி, கேள்விகளாகிய இவை அனைத்திலும் சிறந்த ஓர் ஆண்மகன் விளங்கினான். அவன் பால் பார்த்தவர் அனைவரும் பாராட்டத்தக்க பண்புகள் பலவும் பொருந்தி யிருந்தமையாலும், அவனால் அவன் பிறந்த குட்டுவர்குடி பெருமையுற்றமையாலும், அவனைத் திருக்குட்டுவன் எனப் பெயரிட்டு அழைத்தார்கள் அக்கால மக்கள்.

திருக்குட்டுவன் தந்தை சேரநாட்டுப் பேரரசர் வரிசையில் வைத்துப் பாராட்டத்தக்க பெருமையுடையவனாவான். குட்டுவர் குலத்தில் வந்த சேர அரசர்களின் தலைநகராய் விளங்கிய வஞ்சிமா நகரில் இருந்து ஆண்டோருள் அவனும் ஒருவன். அவன் போர்முரசு, ஓயாது ஒலித்துக்கொண்டேயிருக்கும். புலவர்களும் அவன் வெற்றிப் புகழைப் பாராட்டிப் பரணிபாடி மகிழ்வர். வெற்றிமேல் வெற்றி பெறுதற்குத் துணைபுரியவல்ல பெரிய தேர்ப்படையும் அவன்பால் இருந்தது. ஆனால், அத்துணைப் பேரரசு செலுத்திய அவன் பெருவாழ்வு முடிந்துவிட்டது. அவன் இயற்பெயரும் புலப்படாதபடி அவன் நிலை ஏனோ தாழ்ந்துவிட்டது. அதனால் திருக்குட்டுவன், பிறந்த நாட்டில் இருந்து வாழ்வதற்கும் வாய்ப்பு இல்லாது போயிற்று. சோணாடு சென்று வாழ வேண்டியதாயிற்று அவன் நிலை.

திருக்குட்டுவன் வருகையை, அப்போது சோணாட்டு அரியணையில் அமர்ந்திருந்தோன் அறிந்தான். உடனே அவனை அரசவைக்கு அழைத்துக் கண்டான். வில்நாணைக்

காதுவரை இழுத்து இழுத்து அகன்ற அவன் மார்பையும், வாளைப் பிடித்துப் பிடித்து வலுப்பெற்ற அவன் வலக்கையையும், அக்கையில் பிடித்திருக்கும் வாளின் கூர்மையையும் கண்ணுற்றான். அவனுக்கு, அப்போது சிறந்த படைத் தலைவன் ஒருவன் வேண்டியிருந்தான். திருக்குட்டுவன் பிறந்த குடியாலும் பிறவற்றாலும் சிறந்து விளங்கவே, அவனைத் தன் படைத் தலைவனாக்கிக் கொண்டான். படைத் தலைவர்க்கு ஏனாதி என்ற பட்டம் அளித்து, அதற்கு அறிகுறியாக ஏனாதி என அழைக்கப்பெறும் மோதிரத்தை அணிவித்து, நாடும் ஊரும் நல்கிப் பெருமை செய்வதைப் பேரரசர்கள் பண்டே மேற்கொண்டிருந்தனர். இம்முறைக்கு "மாராயம் பெற்ற நெடுமொழி" எனப் பெயர் சூட்டுவர் ஆசிரியர் தொல்காப்பியனார். சோழவேந்தனும் அவ்வழக்கத்தையொட்டித் திருக்குட்டுவனுக்குச் "சோழிய ஏனாதி" என்ற பட்டத்தைச் சூட்டி, ஏனாதி மோதிரத்தை அவன் விரலில் அணிவித்து, ஏனாதிப் பட்டம் பெறும் படைத்தலைவர்க்குச் செய்யும் பற்பல சிறப்புக்களையும் செய்தான். அன்றுமுதல், திருக்குட்டுவன், "சோழிய ஏனாதி திருக்குட்டுவன்" என்றே நாட்டு மக்களால் அழைக்கப் பெற்றான்.

சோழர் படைத் தலைமையேற்றுக் கொண்ட திருக்குட்டுவன், சோழர் பேரரசின் பெருவாழ்வுக்குத் துணைபுரியும் பெரிய வெற்றிகள் பலவற்றைப் பெற்று அளித்தான். அப்பணியில் பல்லாண்டு வாழ்ந்த அவன் ஆண்டு முதிர்ந்துவிடவே அமைதி வாழ்வை விரும்பினான். கடமையுணர்ச்சியிலேயே கருத்தைச் செலுத்தியிருந்தமையால் பிறந்த நாட்டு மண்ணை மறந்திருந்த அவன், அக்கடனாற்றி ஓய்வு பெற விரும்பிய அந்நிலையில், தாய் நாடு சென்று வாழத் துணிந்தான். அவன் பணியால் பெருவாழ்வு பெற்ற சோணாட்டு வேந்தனும், அவன் விரும்பிய அனைத்தும்



அளித்து, அவன் விழைந்தவாறே அவன் நாட்டிற்கு அனுப்பி வைத்தான்.

தாய்நாடு அடைந்த திருக்குட்டுவன், ஆங்குப் பாலைக்காடு எனும் ஊருக்கு அணித்தாக இருந்த வெண்குடை என்ற சிற்றூர், சிந்தைக்கு அமைதி அளிக்கும் சிறப்புற்று விளங்குவது கண்டு, அவ்வூரையே தன் வாழ்நாளின் இறுதி வாழ்விடமாகக் கொண்டான். இன்று வெங்குடி என வழங்கப்பெறும் அவ்வெண்குடை வயல் வளம் சிறந்து விளங்கிற்று.

வெண்குடை வாழ்வை மேற்கொண்ட திருக்குட்டுவன் பண்பிலும் ஒரு பெரிய திருப்பம் உண்டாயிற்று. அதுவரை, போர் வெறியே அவன் உள்ளத்தில் குடிகொண்டிருந்தமையால், அன்பையும் அருளையும் மறந்து உயிர்களைக் கொன்று குவிப்பதையே தொழிலாகக் கொண்டு திரிந்த குட்டுவன், வெண்குடையில் கால் வைத்ததும், அக்கொடிய வாழ்க்கையை அறவே கைவிட்டு, வள்ளியோனாய் வாழத் தொடங்கினான். தன்னைப் பாடிப் பாராட்டும் பாணர்க்கும், புலவர்க்கும் அவர் விரும்பும் பொருளெலாம் அளித்துப் பெருமை செய்தான். தன்னைப் பாடக் கேட்பதிலும், தன்னைப் பெற்ற தந்தையின் புகழைப் பாடக் கேட்பதிலும், தான் பிறந்த பொன்னாட்டைத் தன் முன்னோர் இருந்து ஆட்சி புரிந்த தலைநகரைப் பாடக் கேட்பதிலும் அவன் பெருமகிழ்ச்சி கொண்டான். அவ்வாறு பாடிய புலவர்க்கு அள்ளி அள்ளிக் கொடுத்தான் திருக்குட்டுவன்.

சோணாட்டுப் படைத்தலைவனாய்ப் பணி புரிந்திருந்த காலத்திலேயே அவனை அறிந்திருந்த மாடலன் மதுரைக் குமரனார் என்ற புலவர், அவன், இப்போது புலவர் பலர் போற்றும் பெரு வள்ளலாய் வாழ்கிறான் என்ற செய்தி கேட்டு, அவனைக் காணவிரும்பினார். உடனே, சோணாட்

டின் ஒரு பகுதியாகிய கோனாட்டைச் சேர்ந்த எறிச்சலூர் என்ற தம் ஊரிலிருந்து புறப்பட்டுக் காடுகளும் மலைகளும் நிறைந்த காவதம் பல கடந்து வெண்குடை சென்று சேர்ந்தார். வெண்குடை வந்தடைந்த புலவர், ஒருநாள் விடியற் போதில், குட்டுவன் கோமனையின் தலைவாயிலை அடைந்து தம் கிணைப்பறையைத் தட்டி ஒலி எழுப்பித் தம் வருகையைத் தெரிவித்தார். அதுகேட்டு விழித்தெழுந்த குட்டுவன் விரைந்து வந்து அவர்முன் நின்றான். உடனே புலவர், அவன் தந்தையின் பேராற்றல், பெரிய தேர்ப்படை, போர்ப்பறை, அவன் இருந்து ஆண்ட வஞ்சிமா நகரின் வளம், வனப்பு ஆகியவற்றைப் பாடல் பொருளாக்கி, அழகிய பா ஒன்றைப் பாடி அவனைப் பாராட்டினார்.

புலவர் பாராட்டிய் குடிப் புகழைக் காது குளிரக் கேட்டான் குட்டுவன். அவன் மகிழ்ச்சி அளவுகடந்து பெருகிற்று. உடனே, களம்பல கண்டு பகையரசர் பலரைக் கொன்றும் கொண்ட சினம் தணியாப் போர் வெறிமிக்கதும், பகைவரின் குருதிக் கறை படிந்து புலால் நாறும் பெருமை மிக்க நெடிய பெரிய கோடுகளைக் கொண்டதும், தான் பெற்ற வெற்றிக் கெல்லாம் பெருந்துணை புரிந்ததும் ஆகிய தன் பட்டத்து யானையைக் கட்டவிழ்த்துவந்து, அவர்க்குப் பரிசிலாக அளித்து, அவர்பால் ஓட்டினான். அதன் தோற்றத்தைக் கண்டே அஞ்சிய புலவர், அது தன்னை அணுகக் கண்டதும், அவ்விடம் விட்டு அகன்று நின்றார். தான் அளித்த யானையை அன்போடு ஏற்று, அதன்மீது அமர்ந்து செல்லக் கருதாது அகன்று நிற்கும் புலவர்செயல் திருக்குட்டுவனுக்குத் திகைப்பைத் தந்தது. புலவர் பாட்டின் பெருமைக்குத் தான் அளித்த பரிசில் சிறிது போலும்! அதனால் புலவர் சினந்து கொண்டார் போலும்! என்று எண்ணினான். உடனே, அப்பட்டத்து யானையைக் காட்டிலும் பெரிய யானை ஒன்றையும் கொண்டுவந்து கொடுத்தான்.



குட்டுவன் கொடுத்த இருகளிறுகளாலும் தன் வறுமை வாழ்வு அறவே மறைந்துவிடும். அதனால் பொருள் வேண்டி, மீண்டும் ஒருமுறை வந்து குட்டுவனை அணுகி இரந்து நிற்கவேண்டிய ஒருநிலை இல்லாமல் போய்விட்டது என உணர்ந்த புலவர் உள்ளம் மகிழ்ச்சியால் துள்ளிற்று. உடனே அவர் வாயிலிருந்து வெளிப்பட்டது ஒரு பாட்டு. மகிழ்ச்சியால் துள்ளும் அவ்வுள்ளத்தில் புலமையுணர்வும் பெருக்கெடுத்தோடிற்று. ஆதலின், அப்பாட்டு பழிப்பது போல் பாராட்டும் பெருமை வாய்ந்த புகழாப் புகழ்ச்சி எனும் அணிநலம் அமையப்பெற்ற அழகுடையதாயிற்று.

"சிறந்த பாக்கள் புனையும் உயர்ந்த புலவர்காள்! ஒரு நாள் திருக்குட்டுவன்பால் சென்று பாடிப் பரிசில் வேண்டி நின்றேன். அதுகேட்டு அவன் அளிக்கும் பரிசில் பொருளைப் பெறும் ஆர்வத்தோடு நின்றிருந்த என்பால் அவன் ஒரு கொலை யானையைப் போக்கினான். அது கண்டு அஞ்சி, நான், அகன்று அப்பாற் செல்ல, அவன் அதைக் காட்டிலும் பெரிய மற்றொரு யானையைக் கட்டவிழ்த்து என்பால் ஏவினான். அவன் அத்தகைய கொடியோனாதல் அறிந்தமையால், என் பெரிய சுற்றம் வறுமையால் வாடினும், அவனை அணுகுதல் அறவே கூடாது என்பதை அறிந்துகொண்டேன். ஆகவே புலவர்காள்! திருக்குட்டுவன் ஒரு பெரிய கொடையாளி என்று உலகம் எல்லாம் ஒன்றுகூடி ஒரே குரலால் கூறினாலும், அவன்பால் செல்லாதீர்கள். அது மட்டுமன்று; அவன்பால் பரிசில் பெறலாம் என நெஞ்சால் நினைப்பதும் செய்யாதீர்கள்!"—இது அவர் பாடிய பாட்டின் பொருள். என்னே குட்டுவன் கொடைவளம்!

**"சிலைஉலாய் நிமிர்ந்து சாந்துபடு மார்பின்,**
**ஒலிபுனல் கழனி வெண்குடைக் கிழவோன்,**
**வலிதுஞ்சு தடக்கை வாய்வாள் குட்டுவன்**
**வள்ளியன் ஆதல் வையகம் புகழினும்,**

உள்ளல் ஓம்புமின்; உயர்மொழிப் புலவிர்!
யானும், இருள்நிலாக் கழிந்த பகல்செய் வைகறை
ஒருகண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றிப்
பாடிமிழ் முரசின் இயல்தேர்த் தந்தை
வாடா வஞ்சி பாடினேனாக,
அகமலி உவகையொடு அணுகல் வேண்டிக்
கொன்று சினம்தணியாப் புலவுநாறு மருப்பின்
வெஞ்சின வேழம் நல்கினன் அஞ்சி
யான் அது பெயர்த்தனெனாகத், தான் அது
சிறிது என உணர்ந்தமை நாணிப் பிறிதும்ஓர்
பெருங்களிறு நல்கியோனே; அதற்கொண்டு
இரும் பேரொக்கல் பெரும்புலப்பு உறினும்
துன்னரும் பரிசில் தரும் என
என்றும் செல்லேன்; அவன் குன்றுகெழு நாட்டே."

# 8. நாஞ்சில் வள்ளுவன்

**த**மிழகத்தின் தென்கோடியில், குமரி முனைக்கும் நாகர் கோயிலுக்கும் இடையில் ஒரு மலை உளது. பாண்டியர்க்கு உரிமை உடையதும், பாண்டி நாட்டுப் பெருவளங்களுள் சிறந்ததாகிய சந்தன மரங்கள் வளர்வதும், அகத்தியர் இருந்து தமிழ் ஆராய்ந்த அருமையுடையதுமாகிய பொதிகைமலைத் தொடர்களுள் அதுவும் ஒன்று. இக்கால மக்களால் மருத்துவமலை என வழங்கப் பெறும் அம்மலை, பண்டு பெற்றிருந்த பெயர் நாஞ்சில்மலை என்பதாகும். நஞ்சிலாமலை எனவும் ஒரு காலத்தில் பெயர் பெற்றிருந்தது என்று, அம்மலை நாட்டில் இன்று வாழும் பெரியோர் சிலர் கூறுகின்றனர். அம்மலையை நடுவே கொண்டு விளங்கிய நாட்டிற்கும் நாஞ்சில் நாடு என அம்மலையின் பெயரே இடப்பட்டிருந்தது. அந்நாடு, அப்பெயரினாலேயே இன்றும் அழைக்கப் பெறுகிறது. நாஞ்சில் நாடு, நெல்லும் கரும்பும் விளையும் நல்ல வளம் மிக்க நன்செய் நிலங்களால் நிறைந்தது. அதனால் நன்செய் நாடு எனும் பெயரினாலும் அது அழைக்கப் பெற்றது. நன்செய் நாடு என்ற பெயரே, காலம் செல்லச் செல்ல நாஞ்சில் நாடு எனத் திரிந்து வழங்கலாயிற்று எனக் கூறுவாரும் உளர். நிற்க.

நாஞ்சில் நாடு நில நீர்வளங்களால் நிறைந்திருந்தது. நாஞ்சில் மலை, நீருண்ட மேகங்கள் வந்து படியுமளவு நனி மிக உயர்ந்த உச்சியைக் கொண்டது ஆதலின், அந்நாட்டில் காலம் மாறாமல் மழை பெய்யும். அதனால், ஆண்டுமுழுதும் ஓவெனும் ஒலி எழ விழுந்தோடும் அருவிகள், அளவிறந்து

காட்சியளித்தன அம்மலையில். அதனால் காயும் கோடைக் காலத்திலும், அம்மலை, நீரற்றுப் போவதில்லை. அக்காலத்திலும், மகளிரின் கண்கள் போன்ற கருங்குவளை மலர்கள் இடையிடையே மலர்ந்து காட்சிதர, கரைகளில் நிற்கும் கரியநிற அடியினைக் கொண்ட வேங்கை மரங்களின் பொன்னிறப் பூக்கள் உதிர்ந்து பொலிவு செய்ய, மெல்ல உருண்டோடி, நீலமணியின் நிறம்போலும் தெளிந்த நீரால் நிறைந்திருக்கும் கடலோடு கலக்கும் சிற்றாறுகளின் காட்சி கண்கொள்ளாக் காட்சியாகும். நாடு, இவ்வாறு நீர்வளம் வாய்ந்திருந்தமையால், அந்நாட்டு நிலங்களும் நல்ல வளம் உடையவாய் விளங்கின. நிலங்களில் இட்ட நெல் விதைகள், நீரின்மையால் சாவி ஆகிப் பயன் இழப்பது இல்லை. நிலங்கள் வெப்பத்தால் கொதிப்பேறி, இட்ட பயிர்களை இளமையிலேயே எரித்து விடுவதும் இல்லை. நெல் விளைந்திருக்கும் நிலங்கள், கரும்பு விளைந்திருக்கும் கழனிகளோ எனக் கண்டு மருளுமளவு ஓங்கி வளர்ந்திருக்கும். அத்தகைய வளங்கொழிக்கும் வனப்புடையது அந்நாஞ்சில் நாடு.

நெல்வளம் கொழிக்கும் அந்நாஞ்சில் நாட்டைப், பலா முதலாம் பழவளம் மிக்க நாஞ்சில் மலையை அரசிருக்கையாகக் கொண்டு ஆண்டிருந்தான் ஆற்றல்மிக்க ஒரு வீரன், நாட்டு மக்களால் நாஞ்சிற் பொருநன் என அழைக்கப் பெறும் அவன், வள்ளுவக் குடியில் வந்தவனாவன். அரசர்களின் மணநாள், பிறந்தநாள் போலும் மங்கல விழாக்களுக்கான காலங்களை அறிந்து கூறுவதும், அம்மங்கல நிகழ்ச்சிகளை நாட்டவர்க்கு முரசறைந்து அறிவிப்பதும் ஆகிய உரிமையும், அரசவையில் அரசரோடு ஒப்ப அமரும் ஐம்பெருங் குழுவில் இடம்பெறும் பெருமையும் வாய்ந்த வள்ளுவக் குடியில் வந்தவனாதலின், அவனை நாஞ்சில் வள்ளுவன் என அழைக்கும் வழக்கமும் இருந்தது. நாஞ்சில் மலைக்கு வடகிழக்கில் வள்ளியூர் என்ற பெயருடையதொரு



சிற்றூர் உளது. அவ்வூரில், ஒரு பெரிய கோட்டை பண்டு இருந்தது என அவ்வூருக்கு அணித்தாகக் காணப்படும் கல்வெட்டுகள் கூறுகின்றன. அதனால், அவ்வள்ளியூர், நாஞ்சில் வள்ளுவன் நினைவுச் சின்னமாய் எழுந்த நகரமாகும். அதுவே அவன் அரசிருக்கையுமாம் என ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

நாஞ்சில் வள்ளுவன், வழிவழியாக வீரம் செறிந்த குடியில் வந்தவனாவன். அவன் முன்னோர்கள் போர்க்களம் புகுந்து விட்டால், வெற்றிப் புகழோடு வீடு திரும்புவரே யல்லது, பகைவர்க்குத் தோற்றுப் புறமுதுகு காட்டி ஓடி ஒளியும் இழிசெயலை ஒருகாலும் செய்தறியார். போரில் வெற்றி வாய்க்காது எனக் கண்டால், உயிர் உள்ளவரையும் போராடி வீரத் திருமணம் பெற விரும்புவதல்லது, உயிர் பிழைத்து ஓட எண்ணா உயர்ந்த கொள்கையுடையவராவர். அத்தகைய வீரர் வழியில் வந்தவனாதலின், வள்ளுவன் மாட்டும் அவ்வீரம் வழிந்தோடிற்று. அவன்மீது கொண்ட அன்பால், அவனோடு நட்புக்கொண்டு வாழக் கருதுவார்க்கு, உள்ளங்கை நெல்லிக்கனிபோல், அடைதற்கு எளிமையும், பழகுதற்கு இனிமையும் உடையவனாய்க் காணப்படும் அவன், அவனோடு பகைகொண்டு, தம் ஆற்றல் துணையால் அவனை எதிர்த்து வருவார்க்கு, அவர்களால் வென்று கைப்பற்றலாகா அருமை யுடையனாதலோடு, அவர்களை வென்று துரத்தும் தோள்வன்மையும் உடையவனாவன். அத்தகைய ஆற்றல் உடைமையால் அவன் பெற்ற வெற்றிகளும் பலவாம். அவ்வெற்றி கண்டு உலகோர் உரைத்த வாழ்த்துரைகளும் பலவாம்.

தன் பகை நாடுகளுள் ஒன்றாகிய சேரநாட்டு எல்லையில் உள்ள நாஞ்சில் நாட்டில், ஆற்றல் மிக்க வீரனாய் வள்ளுவன் விளங்குவது கண்ட அன்று பாண்டி நாட்டு அரியணையில் அமர்ந்திருந்தோன், அவனைத் தன் படைத் தலைவனாக

ஆக்கிக்கொள்ள விரும்பினான். அதனால் நாஞ்சில் மலைக்குச் சென்று வள்ளுவனைக் கண்டு அவன் விரும்புவன எல்லாம் வழங்கினான். மேலும், வேண்டும் போதெல்லாம், வேண்டுவ அனைத்தும் வழங்கவும் வாக்களித்தான். தான் வழங்கியதைப் பெற்று, தன் வாக்குறுதியை ஏற்று நின்ற வள்ளுவனைத் தன் படைத்தலைவன் ஆகுமாறு வேண்டிக் கொண்டான். அவனும் அதற்கு இசைந்தான். அன்று முதல் நாஞ்சில் வள்ளுவன் பாண்டியர் படைத்தலைவனாகப் பணி மேற்கொண்டான்.

நெல்வளமும் நீர்வளமும் எந்நில அரசர்க்கும் உரிய. ஆகவே, அவற்றால் பெருமை பெறுவது உண்மைப் பெருமையாகாது என உணர்ந்த பாண்டியர், பிற நாட்டுப் பேரரசரால் பெறலாகாப் பெருமை வாய்ந்த பொருள்களைப் பெற விரும்பினார்கள். தங்கள் கொற்கைத்துறை முத்தும் பொதியமலைச் சந்தனமும் தமக்கே உரிய தனிச்சிறப்பு உடையவாதல் கண்டு, அம்முத்தாரம் பூணுவதிலும், அச் சந்தனச்சேறு பூசுவதிலும் பெருமகிழ்ச்சி கொண்டார்கள். அவ்வாறு தன் குடிப்பிறந்தார் மட்டுமே அணியத்தக்க உரிமை வாய்ந்த அவற்றைப் பாண்டி நாட்டுப் பேரரசன், தன் படைத்தலைவனாகிய நாஞ்சில் வள்ளுவனுக்கும் அளித்துச் சிறப்பித்தான்.

முடியுடை மூவேந்தரில் ஒருவனாகிய பாண்டியன், அவன் கீழ்ப் பணிபுரியும் ஒரு குறுநிலத் தலைவனாகிய தனக்கு இவ்வளவு பெரிய சிறப்புகள் செய்வதைக் காணவே, நாஞ்சிற் பொருநன், அப்பாண்டியன்பால் பேரன்பு கொண்டுவிட்டான். தன் உயிரைக் கொடுத்தேனும் அவன் உயிரைக் காத்தல் வேண்டும். அதுவே தன் தலையாய கடமை என்ற கருத்துடையனாகி, அவன் பொருட்டுத் தன் உயிரிழக்கத் துணிந்திருந்தான். நாஞ்சிற் பொருநனின் நன்றிமறவா இந்நற்பண்பைப், புலவர் மருதன்



இளநாகனார் நன்கு அறிந்திருந்தார். "நாஞ்சில் வள்ளுவன் நல்ல கொடையாளன்; வருவார்க்கு வாரி வாரி வழங்கும் வள்ளற் பெருந்தகை. புலவர்களின் வறுமை நிலை காணும் அவன் வாளா இரான். அத்தகைய கொடைக்குணம் வாய்க்கப்பெற்ற அவன், பாண்டி நாட்டின்மீது பகைவர் போர் தொடுத்துவிட்டனர் என்ற செய்தியைக் கேட்டால், உடனே, வறுமையால் வாடும் இரவலர் எண்ணற்றோர், தன் வாயிற்கண் வந்து குவிந்து கிடப்பதையும் கருத்தில் கொள்ளாது, விரைந்து களம்புகுந்து விடுவன். அந்நிலையில் அவன்பால் செல்லும் வறியோர், வருந்தி, வறிதே வீடு திரும்பவேண்டியவராவர்" என்று கூறுமுகத்தான், பாண்டியர்க்குப் படைத்துணை போகும் அவன் பெருமையைப் பாராட்டியுள்ளார். வறியோர்க்கு வழங்கத்துடிக்கும் அவன் கருணை உள்ளத்தையும் அழிக்கும் அவன் கடமை உணர்ச்சியின் பெருமைதான் என்னே!

**" ஈதல் ஆனான் வேந்தே; வேந்தற்குச்**
**சாதல் அஞ்சாய் நீயே; ஆயிடை**
**இருநிலம் மிளிர்ந்திசினாஅங்கு, ஒருநாள்**
**அருஞ்சமம் வருகுவதாயின்**
**வருந்தலும் உண்டு என்னபதலம் கடும்பே."**

வளம் மிக்க நாடும், விழுமிய குடிப் பிறப்பும், வென்றியல்லது தோல்வி காணா வீரமும், நன்றி மறவா நல்உள்ளமும் வாய்ந்த நஞ்சிற் பொருநன்பால் நிறைந்த அருளும், அதன் பயனாகச் சிறந்த கொடை வளமும் குறைவறப் பொருந்தியிருந்தன. கொற்றத்தால் வரும் புகழினும் கொடையால் வரும் புகழே பெரிது என அவன் கருதினான். இரந்து வருவார்க்கு ஒன்று ஈவாரையே உலகம் புகழும். அதுவே உண்மைப் புகழாம். ஈதலும், அதனால் வரும் புகழ் பெருக வாழ்தலுமே வாழ்வின் பயனும் என்ற

உண்மைகளை உணர்ந்திருந்தான் நாஞ்சில்மலை நல்லான். அதனால் அவன்பால் பரிசில்பெற விரும்பி, எவ்வளவு பேர் சென்றாலும், எத்தனை முறை சென்றாலும், எந்நேரத்தில் சென்றாலும், 'இப்போது இல்லை; இன்னொரு முறை வாருங்கள்' என மறுத்துக் கூறான். மாறாகக், கிளிகள் பெருங் கூட்டமாய் வாழும் ஒரு தினைப்புனத்தில், அக்கிளிகள் ஒருசிறிதும் வருந்தாமல், வேண்டும்போதெல்லாம் தின்னவும், வேண்டுமளவு தின்னவும் வழிசெய்யும் வகையில், அக்கிளிகள் இருந்து இளைப்பாறும்படி, அப்புனத்தின் இடையே நிற்கும் அம்மரத்திற்கு அணித்தாகவே விளைந்து, முற்றிக்கிடக்கும் தினைக்கதிர்களைப்போல், இரவலர் விரும்பும் பொருள்களைத் தான் தர அவர்கள் பெறவேண்டிய நிலைக்கு உள்ளாக்காது, அவர்கள் விரும்பும்போது வந்து, விரும்பிய அளவு கொண்டு செல்லும் வகையில் குவித்து வைத்துக் கொடுத்து மகிழ்ந்தான்.

நாஞ்சில் வள்ளுவன் இத்துணை நல்ல வள்ளலாய் விளங்கினமையால், அவன்பால் பரிசில்பெற விரும்புவார் தொகை பெருகிவிட்டது. நால்வேறு திசைகளிலிருந்தும், நாஞ்சில் மலைக்கு, இரவலர்கள் நாள்தோறும் வந்து கொண்டேயிருந்தனர். கடந்து செல்ல வேண்டிய வழிக் கொடுமைகளையோ, சேய்மையினையோ அவர்கள் கருத்தில் கொண்டாரல்லர். ஆனிரைகள் மேயும் காட்டு வழிகளைக் கடந்தும், மான் கூட்டம் மலிந்த மலைகளைத் தாண்டியும், மீன்கள் மேயும் நீர்நிலைகளை நீந்தியும், இரவலர் கூட்டம் நாஞ்சில் நாடு வந்தடையும். நாஞ்சில் வள்ளுவன் கொடைப் பொருளை எதிர்நோக்கிக் கூட்டங் கூட்டமாய் வரும் பாணர் குழாத்தைப் பார்த்த புலவர் ஒருவர், "பாண! காட்டையும், மலையையும், கழியையும் கடந்து நடை மெலிந்து வருகின்றாய். தெள்ளிய இனிய ஒலி எழுப்பும் நல்ல யாழே உன் கையில் உளது என்றாலும், உன் இடையில் கிழிந்த கந்தல்



ஆடையே காட்சி அளிக்கிறது. ஆயினும், இந்நிலையில் வேறு எவரையும் நாடிச் செல்லாமல், நாஞ்சில் வள்ளுவனையே நாடிச் செல்கின்றாய் ஆதலின், உன் வாழ்வு வளம் பெறும். நீ விரும்பும் அனைத்தையும் அவன் வழங்குவன். அவனைக் கண்டதும் உன் வறுமை அகன்றுவிடும். அவன் தரும் வளத்தால், உன் வாழ்வில் புதுமை புகுந்துவிடும். சுருங்கச் சொன்னால், உன் தோற்றமே மாறிவிடும். இன்று இந்நிலையில் உன்னைக் காண்பவர், நீ அவன்பால் வளம் பெற்றுவரும் வளமார் நிலையைக் காண நேர்ந்தால், உன்னை இன்னான் எனக் கண்டு கொள்ளார். அன்று உன்னைக் காணும் எவரும், உன்னை அடையாளம் கண்டுகொள்வது இயலாது. அந்த அளவிற்கு உன் வாழ்வு மாறிவிடும்; மாண்புகளால் மலர்ந்துவிடும்" என்று கூறி, நாஞ்சில் வள்ளுவன் கொடைவளத்தை நாவார வாழ்த்தியுள்ளார்.

**" ஆன்இனம் கலித்த அதர்பல கடந்து,**
**மான் இனம் கலித்த மலை பின்ஒழிய,**
**மீன் இனம் கலித்த துறைபல நீந்தி**
**உள்ளிவந்த, வள்உயிர்ச் சீறியாழ்,**
**சிதாஅர் உடுக்கை முதாஅரிப் பாண!**
**நீயே பேரெண்ணலையே; நின்இறை**
**மாறிவா என மொழியலன் மாதோ!**
**ஒலி இரும் கதுப்பின் ஆய்இழை கணவன்**
**கிளி மரீஇய வியன் புனத்து**
**மரன் அணி பெருங்குரல் அனையன்; ஆதலின்**
**நின்னை வருதல் அறிந்தனர் யாரே?"**

அருந்தமிழ் மூதாட்டியாம் ஔவையார், நாஞ்சில்மலை அடைந்து, நாஞ்சில் வள்ளுவனைக் கண்டு வாழ்த்தினார். ஔவையாரின் அறிவாற்றல்களை அவன் நன்கு அறிந்திருந்தான். முடியுடை மூவேந்தரும், அவர் அடி, தம் முடியுறப் பணியும் அவர் பெருமையை அவன் அறிந்திருந்தான்

அதனால், அவர் பெருமைக்கேற்ப வழங்கவேண்டும் என விரும்பிய அவன், பரந்த பாலைவனத்தின் இடையே உயர்ந்து நிற்கும் பெரிய மலைபோலும் பருத்த யானை ஒன்றைப் பரிசாக அளித்துப் பெருமை செய்தான். அதை அன்போடு ஏற்றுக்கொண்ட ஔவையார், "புலவர்காள்! எங்கள் நாக்கு, உயர்ந்தோரை யல்லது, இழிந்தோரைப் பாடி அறியாப் பெருமை உடைய என்று உங்களை நீங்களாகவே பாராட்டிக் கொள்கின்றீர்கள். அப்பாட்டில் சிறிதும் உண்மை இல்லை. அது, இந்நாஞ்சிற் பொருநனை நீங்கள் பாராட்டியதனால் நன்கு புலனாகிவிட்டது. பாராட்டத்தக்க பண்பு எதுவும், அவன்பால் இல்லை. மேலும் அவன் அறிவுடையவனும் அல்லன். அவன் அறிவின்மையை நிலைநாட்டவல்ல ஒரு நல்ல நிகழ்ச்சி நடைபெற்றுளது. அதைக் கூறுகிறேன். சற்றே நின்று கேளுங்கள். ஒரு நாள் வீட்டில் அரிசி இல்லை. வீட்டுப் பெண்கள், கொல்லையில் முளைத்திருந்த கீரையைக் கொய்துவந்து வேகவைத்து, உப்பிட்டு உணவாக்கி வைத்தனர். அது அறிந்த யான், சிறிது அரிசி பெற்றுச் செல்வோம் என்று இவன்பால் சென்றேன். அப்பொழுது எனக்குத் தேவை, என் பசி போக்கும் ஒரு படி அரிசி. ஆனால், அதை அவனால் கொடுக்க முடியவில்லை. படி அரிசி கொடுத்து என் பசிபோக்கும் வகையில்லாத அவன், என்னை வாளாப் போகவாவது விட்டானோ என்றால், அதுவும் இல்லை. ஒரு பெரிய யானையைப் பிடித்து, என் பின்னே அனுப்பினான். என் ஒருத்தி வயிற்றை வளர்க்கத் தெரியாமல் வருந்தும் யான், அந்த யானையின் பெரிய வயிற்றை எவ்வாறு நிரப்புவேன் என்ற அச்சம் என்னை அலைக்கழிக்கவே, மானத்தை மறந்து, மறுவலும் அவன் மனை புகுந்து, 'பொருந! நான் வேண்டி வந்தது, இலை உணவிற்குத் துணையாகும் சிறிது அரிசி. அதைத் தரும் அருள் உள்ளம் உன்பால் இல்லை. நன்று.



அதைத் தராத நீ, இந்த யானையைத் தந்தது ஏனோ? இதை வைத்துக் காப்பது என்னால் இயலாது. இது எனக்கு வேண்டாம். இதை நீயே அழைத்துக்கொள்' என்று வேண்டினேன். அதற்கு அவன், 'அம்மையே! கொடுத்தது கொடுத்ததே. கொடுத்த ஒன்றை மீட்டுப் பெற்றுக்கொள்ளும் வழக்கம் உடையவனல்லன் யான். தாயே! தாங்கள், தங்கள் தகுதிக்கு ஏற்ற ஒன்றை வேண்டினீர்கள். தங்கள் தகுதியைத் தாங்கள் எண்ணும்போது என் தகுதியை யான் எண்ணிப் பார்க்க வேண்டாமோ? அதனால், என் தகுதிக்கேற்ப இதைத் தந்தேன்; ஏற்றுச் செல்லுங்கள்' என்று கூறி மறுத்துவிட்டான். என்னே அவன் அறிவின்மை! அத்தகையானை நீங்கள் பாராட்டுகின்றீர்கள். 'இவர் தகுதி இது. இவர்க்கு இதைக் கொடுத்தால் தகும்' என அறிந்து கொடுக்கமாட்டா ஒருவனைப் போற்றிப் புகழும் உங்கள் நாக்கும் ஒரு நாக்கா? அந்நாக்குகள் நன்மை உடைய ஆமோ?" எனப் பழிப்பதுபோல் பாராட்டிய பாராட்டு, அவன் பெருமைக்கோர் எடுத்துக் காட்டு.

**"தடவுநிலைப் பலவின் நாஞ்சில் பொருநன்,**
**மடவன் மன்ற; செந்நாப் புலவீர்!**
**வளைக்கை விறலியர் படப்பைக் கொய்த**
**அடகின் கண்ணுறையாக, யாம்சில**
**அரிசி வேண்டினமாகத், தான் பிற**
**வரிசை அறிதலின் தன்னும் தூக்கி,**
**இருங்கடறு வளைஇய குன்றத்து அன்னதோர்**
**பெருங்களிறு நல்கியோனே! அன்னதோர்**
**தேற்றா ஈகையும் உளதுகொல்?**
**போற்றார் அம்ம! பெரியோர் தம்கடனே!"**

நாஞ்சிற் பொருநன், சேர, சோழ, பாண்டியர்களாகிய பேரரசர் மூவரினும் சிறந்த பெருமையுடையான். ஓயாது ஒலிக்கும் போர் முரசும், உயர்ந்த இனத்தைச் சேர்ந்த

யானைகளும், கடல் நீரையே எல்லைகளாகக் கொண்ட பரந்த நாடும், வெல்லற்கரிய வீரமும் மூவேந்தர்கள்பால் ஒருங்கே பொருந்தியிருப்பினும், அவர்கள் இவனுக்கு நிகராகார். ஆண்மையாலும் அருளாலும், இவன் அவர்களைக் காட்டிலும் நனிமிகச் சிறந்து விளங்கினான். அதனால், அம்மூவேந்தரைப் பாடிப் பாராட்ட விரும்பாத புலவர்களும், இவனைப் பாடிப் பாராட்டுவதில் பேரார்வம் காட்டினார்கள்; பெருமை கொண்டார்கள்.

ஒரு சிறைப் பெரியனார் என்ற புலவர், இவனைப் பார்த்து, "நாஞ்சிற் பொருந! புலவர்கள் பாராட்டத்தக்க பெருவாழ்வும், பேரும் புகழும் படைத்தவர், இந்நாடாளும் பேரரசர் மூவரும். புலவர் அனைவரும், அவர்களைப் பாராட்டி விட்டார்கள். அத்தகைய பெருமைவாய்ந்த அவர்களைப் பாடாதவன் நான் ஒருவனே. அவர்களைப் பாடவேண்டும் என்ற வேட்கை என் உள்ளத்தில் இன்றுவரை எழவில்லை. ஆனால், அவர்களைப் பாடவிரும்பாத என் உள்ளம் உன்னைப் பாடிப் பாராட்டத் துடிக்கிறது. என்னால் பாராட்டப் பெற்ற முதல் மன்னன் நீயே. இவ்வாறு பேரரசர்களையும் பாராட்ட விரும்பாத என்னால், பாராட்டத்தக்க பெருமை உன்பால் பொருந்தியுளது. அப்பெருமையுடைய நீ பல்லாண்டு வாழ்ந்து பிறரையும் அப்பெருமையுடையோராக்குவாயாக! நீ வாழ்வதோடு, பெறுதற்கரிய பிள்ளையாய் உன்னைப் பேணி வளர்த்துவிட்ட உன் பெற்றோர்களும் பல்லாண்டு வாழ்வார்களாக!" என்று பாராட்டி வழங்கிய வாழ்த்துப்பா மடல், இவ்வள்ளுவனின் வளமார் புகழை நிலைநாட்டுவதறிக.



"இரங்கு முரசின், இனம் சால்யானை,
முந்நீர் ஏணி, விறல்கெழு மூவரை
இன்னும் ஓர்யான் அவாவறியேனே.
நீயே முன்யான் அறியு மோனே!"

"செவ்வரைப் படப்பை நாஞ்சிற் பொருந!
சிறுவெள் அருவிப் பெருங்கல் நாடனை!
நீ வாழியர்! நின் தந்தை
தாய்வாழியர்! நிற் பயந்திசினோரே."

# 9. நாலை கிழவன் நாகன்

அரசர்க்கு உடன் இருந்து உறுதுணைபுரியும் ஐம் பெருங் குழு, எண்பேராயம் என்ற அரசியல் அமைப்பு களில் இடம் பெறுவாருள் தலைசிறந்தவர் அமைச்சரும் படைத் தலைவருமாவர். "மந்திரிக்கு அழகு வரும் பொருள் உரைத்தல்;" "தந்திரிக்கு அழகு தறுகண் ஆண்மை" என அவ்விருவர்க்கும் உரிய பணிகளை வேறுபிரித்து வகைசெய்து கூறுகிறது அறநூல். அரசன் ஆற்ற வேண்டிய அருஞ் செயல், அதைச் செய்து முடிக்க வேண்டிய துணைக்கருவி, அதைச் செய்தற்கு ஏற்றகாலம், அதைச் செய்யவேண் டியமுறை ஆகியவற்றை முன் அறிந்து கூறலும், அவற்றை அவ்வகையால் முன்னின்று முடித்தலும் அமைச்சர்களின் தலையாய கடமையாம். "கருவியும் காலமும் செய்கையும் செய்யும் அருவினையும் மாண்டது அமைச்சு;" "தெரிதலும் தேர்ந்து செயலும், ஒரு தலையாச் சொல்லலும் வல்லது அமைச்சு" என வள்ளுவர் வகுக்கும் அமைச்சர்க்குரிய விதிமுறைகளையும் காண்க.

பேராண்மையும், மானம் நிறைந்த பேருள்ளமும், மாண்புமிக்க குடிப்பிறப்பும், நம்பி ஏற்றுக் கொள்ளத்தக்க நற்பண்பும் ஆகிய இந்நான்கும், படைத்தலைவன் ஒருவனை அழியாது காக்கும் நான்கு அரண்களாகும். கூற்றுவனே கோபம் கொண்டு படையெடுத்து வரினும் அஞ்சாது எதிர்க்கவல்ல ஆற்றல் உடையவனே உண்மை வீரனவன்.



வீரனுக்கு வெற்றிப் புகழ்மீது கருத்து இருக்க வேண்டுமே யல்லது, தன் உயிர்மீது கருத்து இருத்தல் கூடாது என வீரனுக்குரிய பண்புகளையும் வகுத்துக் கூறியுள்ளார் வள் ளுவப் பெருந்தகையார்.

கூறிய விதிமுறைகளை நோக்கின், அமைச்சன் கடமை அரசவையோடு நின்று விடுகிறது; படைத்தலைவன் கடமை போர்க்களத்திலேயே பொருந்தியுளது என்பது புலனும். அமைச்சனுக்குப் புத்தியிருந்தால் போதும்; படைத்தலைவ னுக்குக் கத்தியிருந்தால் போதும் என, அக்கால அறநூற் பேராசிரியர்கள் எண்ணியுள்ளார்கள். அறிவு இருப்பவன் பால் ஆற்றல் இராது. ஆற்றல் உடையவன்பால் அறிவு இராது. அவ்விரண்டையும் ஒருசேரப் பெற்றவர் உலகத் தில் அரியர் என்ற உணர்வு இருந்ததினாலேயே, அறநூல் களை வகுத்தவர்கள், அவ்விருவர்க்கும் உரிய கடமைகளைத் தனித்தனியே பிரித்துக் கூறினர்கள். ஆனல், அவ்விருவர்க் குரிய பண்புகளும் ஒருவரிடத்தே இடம்பெறுவதை—அதா வது, உள்ளறிவும் உடலாற்றலும் ஒருவனிடத்தே விளக்கம் பெறுவதை அவ்வறநூற் பேராசிரியர்கள் வெறுப்பவ ரல்லர். அத்தகைய பெரியோனைக் காணும் பேற்றினை அவர்கள் மகிழ்ச்சியோடு வரவேற்றிருப்பர் என்பதில் சிறிதும் ஐயம் இல்லை.

அமைச்சர்பால் இருக்கவேண்டிய ஆழ்ந்த அரசியல் அறிவையும், படைத்தலைவர்பால் இருக்கவேண்டிய பேராற் றலையும் ஒரு சேரப் பெற்றிருந்தான், பாண்டியர் படைத் தலைவருள் ஒருவன். நாகன் என்பது அவன் இயற்பெயர்.

பாண்டி நாட்டில் அருப்புக் கோட்டைக்கு அண்மை யில் உள்ள நாலை என்ற ஊரே நாகனுக்கு உரிய ஊராம். வேலை என்ற ஊர்ப் பெயர் வேலூர் எனத் திரிந்து வழங்கு வதுபோல், பண்டு, நாலை எனும் பெயர் பெற்றிருந்த அவ்

ஊர், இக்காலை நாலூர் எனத் திரிந்து வழங்குகிறது. நாலூர், வீரம் மிக்க வழியினரின் வாழ்விடமாக விளங்கிய விழுச் சிறப்பும் வாய்ந்தது. கோசர் என்ற கொற்றம் மிக்க வீரர் கூட்டம் அவ்வூரில் வாழ்ந்து, "நாலூர்க் கோசர்" என நாட்டு மக்களால் அழைக்கப் பெற்றுள்ளது. வீரம் செறிந்த அப்பேரூரில் பிறந்து, அவ்வூராட்சிக்கு உரிமை பெற்றவனாய் வாழ்ந்திருந்தான் நாகன்.

நாகன் ஒரு சிறந்த வீரன். வேல்கொண்டு போரிடுவதில் சிறந்த பயிற்சி பெற்றிருந்தான். களத்தில், தன் படையணிகளை எவ்வெவ்வாறு பிரித்து எங்கெங்கே நிறுத்தி வைக்கவேண்டும், பாய்ந்துவரும் பகைவர் படையை எவ்வாறு தடுத்து நிறுத்தவேண்டும், பகைவர் படைவரிசையுள், எந்த அணியை எந்த நேரத்தில் தாக்கினால் வெற்றி எளிதில் வாய்க்கும் என அறிந்து, அதற்கேற்ப ஆற்றல் மிகுந்து ஆண்மையோடு போரிடுவான். பருந்துக் கூட்டங்களின் பசிதீருமளவு பிணங்கள் விழக்கண்ட பிறகும் அவன் போர் வேட்டை தணியாது. அத்தகைய ஆண்மையும் அஞ்சாமையும் அவன்பால் குடிகொண்டிருந்தமையால், தோல்வி என்பதையே அவன் கண்டதில்லை.

நல்ல போர்ப்பயிற்சி பெற்றிருந்த நாகனிடத்தில் நாடாளவேண்டிய நல்ல அரசியல் அறிவும் பொருந்தியிருந்தது. அவனிடம் ஆண்மை அதிகமா, அரசியல் அறிவு அதிகமா என அளவிட்டுக் கூறுவது ஆகாது. எவ்வளவு ஆண்மை இருந்ததோ, அந்த அளவு அறிவும் இருந்தது. அறிவு, ஆண்மை இரண்டையும் ஒருசேர மதித்துக் காத்து வந்தான் நாகன்.

நாகன் நாலையில் வாழ்ந்திருந்த நாட்களில், பாண்டி நாட்டு அரியணையில் அமர்ந்திருந்தவனுக்கு ஒரு பெரிய அரசை அமைக்கவேண்டும் என்ற பேராசை பிறந்தது. அப்பேராசை கொண்ட அவன், அவ்வாசை நிறைவேற



வேண்டுமாயின், அதற்குப் பரந்த அரசியல் அறிவும், சிறந்த போர்ப் பயிற்சியும் உடைய ஒருவன் துணைவேண்டும் என்பதை உணர்ந்தான். அவனுக்கு நாகனை அறிமுகம் செய்து, "நாகன், போரில் வெற்றிகாண விரும்புவார்க்கு வேண்டிய படைத்துணை அளிக்கவும் வல்லன். நாட்டில் நல்லாட்சி நடைபெற நினைவார்க்கு, அறநெறி அரசியலுக்கு வேண்டிய அறிவுத்துணை அளிக்கவும் வல்லன்" என்று அறிவித்தார்கள்.

நாலை கிழவன் நாகனின் தகுதிப் பாடுகளைக் கேட்டு அறிந்த பாண்டியன், அவனை அழைத்துத் தன் படைத்தலைவனாக ஆக்கிக் கொண்டான். பாண்டியன் படையில் பணிபுரியத் தொடங்கிய நாகன், வேந்தன் வேட்கை தீரும்வகையில் நால்வேறு திசைகளிலும் புகுந்து போரிட்டுப் பலநாடுகளைக் கைப்பற்றி மீண்டான். அதன் பயனாய்ப் பாண்டியர் மீன்கொடி பலநாட்டுத் தலைநகர்களில் பறக்கத் தொடங்கிற்று. மக்கள், "மண்பல தந்த பாண்டியன்" எனப் பாண்டிநாட்டு மன்னனைப் பாராட்டத் தலைப்பட்டார்கள். வெற்றி பலகண்டு வேற்றுநாட்டு வேந்தர்களின் வெற்றி முரசுகளைக் கைப்பற்றிக் கொண்டுவந்த நாகன், நாட்டில், பகைவர் பயம் அற்ற நிலையான ஆட்சி அமைந்துவிட்டபின்னர், நல்லாட்சி நிலவப் பணிபுரிந்தான். அதன் பயனாய் நாட்டில் செல்வம் குவிந்தது. திருமகளும் விரும்பி வந்தடையும் விழுமிய செல்வங்களுக்கு உரியவனானான் வேந்தன். பாண்டி நாட்டின் பெருவளம் கண்டு, அதற்குக் காரணமாய நாலைகிழான் நாகனை நாட்டவர் நாவார வாழ்த்தினார்கள்.

அந்நிலையில் பாண்டி நாட்டிற்கு வந்து சேர்ந்தார் புலவர் ஒருவர். வறியவர்க்கும், வந்து பாடும் புலவர்க்கும் வாரி வாரி வழங்கும் வள்ளல்கள் ஒருவர்பின் ஒருவராய் மாண்டு மறைந்து விட்டமையால், அவர்க்குப் பொருள்

கொடுத்துப் புரப்பவர் ஒருவரும் இலராயினர். அவர் பிச்சைப் பாத்திரம் கவிழ்ந்து கிடந்தது. அதை நிமிர்த்தி, அது நிறைய உணவிடுவாரைத் தேடி, ஊர் ஊராக அலைந்து, இறுதியில் பாண்டிநாடு புகுந்தார். அவர் வறுமைநிலை கண்ட சிலர், அவரை நாகன்வாழ் நாலூர்க்குச் செல்லுமாறு பணித்தனர். தன் ஆற்றலால் பருந்துகளின் பசியையும், தன் அறிவால் அரசன் ஆசைப் பசியையும் போக்கவல்ல நாகனே, வறியோரின் வயிற்றுப் பசியையும் போக்குவான் என வழியில்வருவார் பலரும் கூற, அவன் பெருமையறிந்து, அவன் ஊர் சென்று அவனைக் கண்டு பாராட்டினார். புலவர் பாடிய பாட்டின் பொருள்வளம் அறிந்து மகிழ்ந்து, அவர் பசிபோக்கி, அவரை மகிழ்வித்தான் நாகன். அறிவும், ஆண்மையும், அருளும் ஒருங்கே பெற்று, மக்களிற் சிறந்தான் ஒருவனுக்கு மாண்புமிகு எடுத்துக் காட்டாய்க் காட்டும் வகையில் வாழ்ந்தாங்கு வாழ்ந்துகாட்டிய நாகன் நெடிது வாழ்க! அவனை வாழ்த்தி வாழ்வித்த புலவர் வடநெடும்தத்தனாரும் வாழ்க!

“ஞாலம் மீமிசை வள்ளியோர் மாய்ந்தென,
ஏலாது கவிழ்ந்த என் இரவல் மண்டை
மலர்ப்போர் யார் என வினவலின், மலைந்தோர்
விசிபிணி முரசமொடு மண்பல தந்த
திருவீழ் நுண்பூண் பாண்டியன் மறவன்,
படை வேண்டுவழி வாள் உதவியும்,
வினை வேண்டுவழி அறிவு உதவியும்,
வேண்டுப வேண்டுப வேந்தன் தேஎத்து
அசைநுகம் படாஅ ஆண்தகை உள்ளத்துத்,
தோலா நல்இசை நாலை கிழவன்,
பருந்துபசி தீர்க்கும் நற்போர்த்
திருந்துவேல் நாகன் கூறினர் பலரே.”

U ARCH...
No. 109077

# 10. போரூர்ப் பழையன்

காவிரியாற்றுப் பாய்ச்சலால் வளம் பெற்ற பேரூர்களுள் போரூரும் ஒன்று. போரூர் மக்கள், ஆற்றுநீரைப் பயன் கொள்ளவல்ல அறிவுவளம் வாய்க்கப் பெற்றிருந்தனராதலின், அவர்கள் தம் ஊர் அருகே ஓடிய காவிரியாற்றுநீர் கொன்னே ஓடிக் கடலில் வீழ்ந்து வீணாவதை விரும்பினாரல்லர். காவிரியாற்றிலிருந்து பெரிய பெரிய கால்வாய்கள் பல வெட்டியும், அக் கால்வாய்கள் வழியே பெருகி ஓடிவரும் நீரை, வேண்டிய காலத்தில் வேண்டுமளவு பெறத் துணை புரியவல்ல மதகுகள் பல அமைத்தும் பயன்கொண்டு வளம் கண்டனர். அதனால் அம்மதகுகளின் ஊடே நுழைந்து நிறைந்து ஓடும் நீர் எழுப்பும் பேரொலி, இரவு பகல் எப்பொழுதும் ஓவென ஒலித்துக்கொண்டே யிருக்கும். ஓவெனும் ஒலி எழ ஓயாது நீர் பாய்ந்து வளம் கொழித்தமையால், வாணிக நிலையங்களும், விழாக்களங்களும் மலிந்து, அவை குறித்து வந்து குழுமும் மக்கள் கூட்டம் எழுப்பும் ஆரவாரப் பேரொலியும் அலையொலிபோல் ஆங்கு ஒலித்துக்கொண்டே யிருக்கும். அதனால், அம்மாநகர், கைவளைகள் கலீர் கலீர் என ஒலிக்க உலாவும், அழகும் இளமையும் கொழிக்கும் ஆரணங்குகளின் அழகுத் தோற்றம் காட்டிற்று எனப் புலவர்கள் போற்றுவாராயினர்.

பெருமைமிக்க அப்போரூர்க்கு மேலும் பெருமையளிக்கப் பிறந்திருந்தான் ஒரு வீரன். பழையன் எனும் பெயர் பூண்டிருந்த அவன் இளமைப் பருவத்திலேயே பல்வகைப்

V R11,1277x
N60

படைக்கலங்களிலும் பெரும்பயிற்சி பெற்றிருந்தான். விற்போரில் சிறந்து விளங்கினான். வில்லில் நாண் ஏற்றி அம்பேவத் தொடங்கினால், அம்புகள் மழைத்தாரையென மளமளவென விரைந்து வெளிப்படும். வாட்போரிலும் வல்லன் அவன். வாட்போர் புரியுங்கால், இடக்கையில் ஏந்திநிற்கும் கேடகம், கார்மேகம் போல் அவனை மறைத்துக் காவல் புரியும். விற்போரிலும் வாட்போரிலும் பெற்றிருந்த பயிற்சியைக் காட்டிலும் சிறந்த பயிற்சியை, வேலேந்திப் போரிடுவதில் பெற்றிருந்தான். குறி பிழையாது வேல் எறியப் பழகியிருந்தான் பழையன். வேலெறிவதில் பழையன் பெற்றிருந்த பயிற்சியைக் கண்டு வியந்த அக்காலப் புலவர்கள், "உண்மைக் காதலன் தன் அன்புக் காதலிக்கு அளித்த வாக்குறுதி தப்பாததுபோல், பழையன் எறிந்தவேலும் தப்பாது சென்று பாயும்" என அவன் போர்ப் பயிற்சியைப் பாராட்டியுள்ளார்கள்.

பழையன் பெருவீரனாய்ப் போரூரில் வாழ்ந்திருந்த போது, சோணாட்டு அரியணையில் செங்கணான் என்ற செல்வப் பெயருடையான் அமர்ந்திருந்தான். அக்காலை, கொங்கர் எனும் கொள்ளைக் கூட்டத்தவர், அவன் நாட்டுள் புகுந்து, அவன் நாட்டு ஆனிரைகளைக் கொள்ளைகொண்டு அழிவுபல விளைத்து வந்தனர். பேரரசர் பலர் முயன்றும் வென்று அழிக்க முடியாத அக்கொங்கரை அடக்கி ஒடுக்க விரும்பினான் செங்கணான். ஆனால், அம்முயற்சியில் வெற்றி காண்பது, தன்னிடம் அப்போதுள்ள படையாலும் படைத் தலைவராலும் ஆகாது என்பதை உணர்ந்திருந்தானாதலின், சிறந்த வீரன் ஒருவனைப் படைத் தலைவனாகப் பெறக்கூடிய காலத்தை எதிர்நோக்கிக் காத்திருந்தான். மன்னன் மனவேட்கையை அறிந்த சிலர், பழையன் பேராண்மையை அவனுக்கு அறிவித்தனர். அஃதறிந்த செங்கணான் பழையனை அரசவைக்கு அழைத்துக் கண்டான். உண்மையி



லேயே அவன் சிறந்த வீரன் என்பதை உணர்ந்தான். உடனே பழையன் பிறந்த போரூரை அவன் உடைமையாக்கி, அவனைத் தன் படைத் தலைவனாக்கிக் கொண்டான்.

பழையன் படைத் தலைமை ஏற்ற மறுகணமே கொங்கரை அடக்கும் முயற்சியில் அரசன் கருத்துச் சென்றது. உடனே ஒரு பெரிய யானைப் படையைப் பழையன்பால் ஒப்படைத்துக் கொங்கரை வென்றுவரப் பணித்தான். பழையன் தலைமையில் சோணாட்டுப் பெரும்படை புறப்பட்டு விட்டது என்பதை அறிந்துகொண்ட கொங்கர், அச்சோழனின் பகைவனாகிய சேரன் துணை நாடினர். கொங்கர் ஒருவகையில் தன்னோடு இனத்தொடர்பும் உடையராதல் அறிந்த சேரன், அவர்க்குத் துணை புரிய முன்வந்தான். சேரமான் கணைக்கால் இரும்பொறை என்ற அம்மன்னன், தன் படைத் தலைவர்களாகிய நன்னன், ஏற்றை, அத்தி, கங்கன், கட்டி, புன்றுறை என்பவர்களோடும், தன் பெரிய யானைப் படையோடும் கொங்கர்க்குத் துணைதரப் புறப்பட்டான்.

ஆறு படைத் தலைவர்களைக்கொண்ட பெரிய படையைப் பேரரசன் ஒருவன் தானே முன்னின்று நடத்திக்கொண்டு கொங்கர்க்குத் துணைபுரியப் புறப்பட்டுவிட்டான் என்பதை அறிந்தும், பழையன் பேராண்மையில்கொண்ட நம்பிக்கையால், செங்கணான் அவன் ஒருவனை மட்டுமே செருமுகம் நோக்கிச் செல்லவிட்டான். பழையன் தனி ஒருவனாக வருகிறான் என்பதை அறிந்தும், அவன் பேராண்மையில் கொண்ட அச்சத்தின் மிகுதியால், அவனை எதிர்த்துச் சென்று, இடைவழியிலேயே மடக்கிப் போரிட்டு அழித்தொழிக்கக் கருதாது, தம் நாட்டகத்தே உள்ள, அரண் மிக்க கழுமலக் கோட்டைக்குள் புகுந்து ஒளிந்துகொண்டனர் கொங்கரும், அவர்க்குத் துணைபுரிய வந்த கணையனும்.

அவன் படைத் தலைவரும். தன் போர்ப் பயிற்சியில் கொண்ட தளரா நம்பிக்கையால், சேணெடும் வழிகளைக் கடந்து செல்ல வேண்டுமே, பகைவன் நாட்டில் சென்று போரிட வேண்டுமே, பகைவர் படைத் தலைவர் பலரைத், தான் ஒருவனுகவே நின்று போரிடவேண்டுமே என எண்ணிச் சிறிதும் கலங்காது வந்து, பழையன், கழுமலக் கோட்டையை வளைத்துக் கொண்டான்.

கழுமலக் கோட்டை கணப்பொழுதில் தகர்ந்தது பழையன் கொண்டுசென்ற களிற்றுப்படை, காவல்மிக்க அக்கோட்டையைத் தூக்கித் தூளாக்கிற்று. அரண் பாழ் பட்டுப் போகவே, அடங்கியிருந்த கொங்குப் படையும், அச்கொங்கர் படைக்குத் தலைமை தாங்கி நின்ற ஆறு படைத் தலைவர்களும் புறம்வந்து போரிடத் தொடங்கினர். பழையன் ஆண்மைக்கும் ஆற்றலுக்கும் அரிய வாய்ப்புக் கிட்டிற்று. வில்லாண்மை காட்டிப் போரிட்டான் சிறிது நேரம். வாளும் கேடகமும் கொண்டு களம் புகுந்து கணக் கற்றோரை வெட்டி வீழ்த்தினான். இறுதியில் வேல்கொண்டு வெஞ்சமர் புரிந்தான். அவ்வளவே, ஆறுபடைத் தலைவர் களும் ஒருவர்பின் ஒருவராக மாண்டு மறைந்தனர். கழுமலப் போர்க்களம் எங்கும் பிணமலைகளே காட்சி அளித்தன. உடைந்த தேர் உருளைகளும், முறிந்த வெண்கொற்றக் குடைகளும், கிழிந்த முரசுகளும் களம் எங்கும் சிதறிக் கிடந்தன.

கழுமலப் போர்க்களம் காணக் கண்கூசும் கொடு மையதாயிற்று. கார்காலத்துப் பெருமழை பெய்ய, குளத் தின் பெரிய கரையின் கீழே உள்ள மதகின் வழியாகச் செவ்வெள்ளம் பாய்ந்தோடுவதுபோல், இறந்து வீழ்ந்த யானை ஒன்றின் கீழே அகப்பட்டுக்கொண்டே, தோல் கிழிந்துபோன முரசின் ஊடே, இரத்தவெள்ளம் பாய்ந் தோடிக்கொண்டிருந்தது ஒரு பக்கத்தில்.



மலைநாட்டில் அடுத்தடுத்து இருக்கும் எண்ணற்ற குன்றுகளில் குருவிக்கூட்டம் எள்விழ இடம் இன்றி அமர்ந்திருப்பதுபோல், அடுக்கடுக்காக இறந்து வீழ்ந்து கிடக்கும் யானைகளின் உடலெங்கும், பழையன் ஏவிய அம்புகள் ஆழத் தைத்துக் காட்சி அளித்தன ஒருபால்.

போரூர்க் கடைவீதிகளில் நவமணி வணிகர், மாணிக்க மணிகளை இட்டு வைக்கும் பைகளை அவிழ்த்து மாணிக்க மணிகளைக் கொட்டுவதுபோல், வாளால் வெட்டுண்ட யானைகளின் துதிக்கைகளிலிருந்து செந்நிறக் குருதிசொரிந்து கொண்டிருந்தது களத்தின் ஒரு கோடியில்.

பழையன் எறிந்தவேல், தன் நெற்றியில், தன்னுடைய இரண்டு வெண்கோடுகளுக்கும் இடையில் தைத்து, ஒரு பாதி ஆழ்ந்துபோக, மறுபாதி மட்டும் வெளியில் விளங்க உலாவரும் யானை, முக்கோட்ட களிறுபோல் காட்சி அளித்தது களத்தின் நடுவண்.

வானத்து வெண்மதியை விழுங்கிக் கிடக்கும் கரும் பாம்புபோல், ஒடிந்து வீழ்ந்து கிடக்கும் வெண்கொற்றக் குடையை யொட்டி, வெட்டுண்டு வீழ்ந்த யானையின் நீண்ட துதிக்கை காட்சிதரும் கொடுமையைக் களம் ஒருபால் காட்டிற்று.

செவ்வானத்தின் இடை இடையே, கருமேகம் குவியல் குவியல்களாகக் காட்சி அளிப்பதுபோல், வீரர்களின் உடல் களிலிருந்து பெருகி ஓடும் குருதி வெள்ளத்தின் இடை இடையே, இறந்துவீழ்ந்த யானைகளின் கரிய உடல்கள் மிதந்து சென்றன.

வெண்வேல மரங்கொண்டு செய்த கலப்பையால், செம் மண் நிலத்தை உழும் உழவன்போல், தன் வெண்கோடுகள் இரண்டும், குருதி பாய்ந்து செந்நிறம் பெற்ற களத்து

மண்ணில் ஆழப் புதைந்துகொள்ளத், தலைகவிழ்ந்து நின்றது ஒரு களிறு.

பிணவாடை கண்டு பறந்துவந்து சேர்ந்தன பருந்துக் கூட்டம். ஐந்தலை நாகத்தை வாயில் கவ்வி விண்ணில் எழும் கருடனைப்போல், ஐந்து விரல்களும் விரிந்து கிடக்க, அறுபட்டு வீழ்ந்த வீரர்களின் கைகளில் ஒன்றை வாயில் கவ்விப் பறந்தது ஒரு பருந்து. போர்ப் பறைக்குத் தோல் போர்த்து வார்கொண்டு வலித்துக் கட்டும் முரசறைவான் போல், குருதிசொட்ட வீழ்ந்துகிடக்கும் பிணத்தின் குடல்களைப் பற்றி ஈர்த்துக்கொண்டிருந்தது ஒரு பருந்து.

பருந்தோடு விருந்துண்ண வந்து சேர்ந்தன நரிகள். பெருங்குடிச் செல்வர், தம் முக அழகைக் காண்டற் பொருட்டு, அவர் கீழ்ப் பணிபுரியும் குற்றேவலர் கண்ணாடி ஏந்தி விரைவதுபோல், கைப்பற்றிய கேடகத்தோடு வீழ்ந்த கையைக் கவ்விக்கொண்டு, காடு நோக்கி விரைந்தோடிற்று ஒரு குறு நரி. வேட்டைக்காரர் வீட்டுக் கம்பத்தில் சங்கிலியால் கட்டப்பட்டுக் கிடக்கும் கோனாய்போல், வேல்தைத்த புண்ணிலிருந்து வெளிப்பட்டுத் தொங்கும் குடரை வலித்து ஈர்த்துக்கொண்டிருந்தது மற்றொரு குறு நரி.

புயற்காற்றுப் புகுந்து வீசிய பனந்தோப்பில் பனங்காய்கள் பார்க்குமிடமெங்கும் சிதறிக் கிடப்பதுபோல், போர்க்களம் எங்கும் வெட்டுண்டு வீழ்ந்த வீரர்களின் தலைகள் சிதறிக் கிடந்தன. மக்கள் மனம் மகிழ மாலையில் உலாவரும் இளமரக்காவில், சூறாவளிக் காற்று சுழன்றடிக்கக் கண்டு அச்சோலைவாழ் மயிலினங்கள் மருண்டு ஓடுவது போல், கணவரை இழந்த காரிகையர் அக்களத்தில் கண்ணீர் சொரிந்து கதறிப் புலம்பினர்.

கழுமலக்களத்தை இவ்வாறு பிணக்களமாக்கிக் கடும் போர் புரிந்துகொண்டிருந்தான் பழையன். தன் படைத்



தலைவர் அறுவநும் இறந்துபோயினர் என்ற செய்தி கணையனைக் கலங்க வைத்துவிட்டது. தன் பகைவனின் படைத்தலைவன் ஒருவன், தனித்து வந்து, தன்னாட்டுள் புகுந்து, தன் கோட்டையை அழித்து, படைத் தலைவர் அத்தனை பேரையும் கொன்று வெற்றி கொள்வதா? அவனை இனியும் உயிரோடு உலாவ விட்டுவைப்பதா? விட்டு வைத்தால் தன் பேரரசின் பெருமைக்குக் கேடல்லவோ என்று எண்ணிப், பழையனை எவ்வாறேனும் கொன்று உயிர்போக்குதல் வேண்டும் எனத் துணிந்து களம்புகுந்தான் கணையன்.

பேரரசனே களம் புகுந்துவிட்டான் என்ற நினைப்பால், கொங்கரும் சேரரும் ஊக்கம்மிகுந்து உரங்கொண்டு போரிட்டனர். போர் தொடங்கியது முதல் தனியொருவனாகவே நின்று போர் புரிந்து தளர்ந்திருக்கும் நிலையில், பகைவர் புதிய ஊக்கத்தோடு மேல் வந்து தாக்கியதைப் பழையனால் தாங்குதல் இயலாதாயிற்று. கணையன் கணைபட்டுக் களத்தில் வீழ்ந்து மாண்டுபோனான் அம்மாவீரன்.

செய்தி கேட்டான் செங்கணான். கழுமலக்கோட்டை தகர்ந்து போயிற்று, கொங்கர் படை அழிவுற்றது, அவர்க்குத் துணை வந்த சேரன் படைத் தலைவர் அறுவரும் உயிர் இழந்தனர், கழுமலக்களத்தில் வெற்றி கண்டுவிட்டது கொற்றம்மிக்க சோழர்படை, சோழர் படைப் பெருமையை உலகறியக் காட்டிவிட்டான் பழையன் என அடுத்தடுத்து வந்த செய்திகளால் மகிழ்ச்சி வெள்ளத்தில் மூழ்கியிருந்த செங்கணான், பழையன் இறந்துபோனான் என இறுதியில் வந்த செய்தி கேட்டுச் சிறிதுபொழுது செயல் இழந்து போனான். இயல்பாகவே சிவந்திருக்கும் அவன் கண்கள், சினத்தால் மேலும் சிவந்து விட்டன. "என் படைத் தலைவன் உயிரைப் பறித்த அக்கணையனைக் கட்டிப் பிடித்து வந்தாலல்லது என் சினம் தணியாது" என வஞ்

சினம் உரைத்து விரைந்து புறப்பட்டான்; கழுமலக்களம் அடைந்தான். கடும்போர் ஆற்றிக் கணையனைக் கட்டிப் பிடித்துவந்து, குடவாயில் கோட்டத்துச் சிறையில் அடைத்துப் பழையனைக் கொன்ற பெரும் பிழைக்குப் பழி தீர்த்துக் கொண்டான்.

கணையன் வில்லால் வீழ்ந்துபோன பழையன், புலவர்களின் சொல்லால் வீயாப் புகழ்பெற்று விளங்கினான். குடவாயில் கீரத்தனாரும், பெரும் புலவர் பரணரும், பழையன் வில்லாண்மையினையும், வெற்றிப் புகழ்களையும் பாடிப் பாராட்டினார்கள். அவர் பாடிய பாக்கள் பலவற்றுள் பழையன், கழுமலப் போரில் காட்டிய பேராண்மையைப் புகழ்வது இப்பாட்டு.

“ நன்னன், ஏற்றை, நறும்பூண் அத்தி,
துன்னரும் கடுந்திறல் கங்கன், கட்டி,
பொன் அணி வல்வில் புன்றுறை என்றாங்கு
அன்று அவர்குழீஇய அளப்பரும் கட்டூர்ப்
பருந்துபடப் பண்ணிப் பழையன் பட்டெனக்
கண்டு அதுநோனானாகித், திண்தேர்க்
கணையன் அகப்படக் கழுமலம் தந்த
பிணையலம் கண்ணிப் பெரும்பூண் சென்னி.”

# 11. மத்தி

கன்னிக் காவிரி கடலோடு கலக்குமிடத்தில், அக்காவிரிக் கரையில் கழார் என்ற ஒரு பேரூர் இருந்தது. சோணாட்டின் தலைநகராகவும், தலைசிறந்த வாணிக நிலையமாகவும் விளங்கிய புகார் நகரத்திற்கு நான்கு அல்லது ஐந்துகல் தொலைவில் இருந்த அவ்வூர், சோணாட்டு மக்களின் சிறந்த புனல் விளையாட்டிடமாய் விளங்கிற்று.

காவிரியாறு தன்போக்கின் பெரும் பகுதியைச் சோணாட்டிலேயே கழிக்கிறது என்றாலும், கழார் நகர் அருகே காணப்படும் அதன் போக்கே கவின்மிகு காட்சியாகும். வஞ்சி மரங்களும், மருத மரங்களும் வரிசை வரிசையாக வளர்ந்து வனப்பு மிகுந்த ஆங்குக், காவிரிக்குப் படித்துறை அமைத்திருந்தார்கள் அவ்வூர் மக்கள். அவ்வூர் வாழ் இளம் மகளிர் இடையில் இலை ஆடையும், கைகளில் குறுவளையும் அணிந்து, ஒன்று திரண்டு வந்து, காவிரிப் புனலில் குதித்து ஆடுவர். அவ்வாட்டத்தில் வெறுப்புச் சிறிது காணின், உடனே கரையேறி, அருகேயுள்ள பொய்கைகளில் வளர்ந்திருக்கும் கோரைகளைப் பறித்துக் கரந்தை வளரும் கழனிகளில் அமர்ந்து, இரைதேடும் பறவைக் கூட்டங்களை ஓட்டி மகிழ்வர். இளங்காதலர்கள் இணை இணையாக வந்து, பெருகிவரும் புது வெள்ளத்தில், விடியற் போதில் விருப்பந்தீர ஆடி அகம் மகிழ்வர்.

காவிரியில் புதுவெள்ளம் வருங்காலத்தில், அக்கழார்த் துறையில் ஆண்டுதோறும் புனல்விழா நடைபெறும். அவ்விழா, சோழ அரசர்களும் வந்து காணும் அவ்வளவு சிறப்பு வாய்ந்தது. காவிரிக்குக் கரையும் அணையும் அமைத்துக் காவிரி நீரைப் பயன்கொண்டு சோணாட்டு மண்ணை வளம் கண்டு, வளவன் எனும் புகழ்மிகு பெயர் பூண்ட கரிகாலன் மகள் ஆதிமந்தியின் ஆருயிர்க் கணவனாகிய ஆட்டனத்தி எனும் சேரநாட்டு இளவரசன், புனலாட்டு விழாவில் தான் பெற்றிருந்த பயிற்சிகளைச் சோணாட்டு மக்களும் மன்னனும் கண்டு களிக்கும்படி ஆடிக் காட்டி, இறுதியில் ஆற்று வெள்ளத்தால் அடித்துச் செல்லப்பட்ட இடம் அக்கழார்த் துறையே.

கழார் நகர், காவிரிக் கரையில் அமைந்திருந்தமையால் நீர்வளம் குறையா நன்செய்களை நிறையப் பெற்றிருந்தது. அந்நகரைச் சூழ உள்ள நீர்நிலைகளில், செந்தழல் நிகர்க்கும் செந்தாமரை மலர்கள் மலர்ந்து மணம் வீசும். தாமரைக் கொடிக்கு இடையிடையே, உள்ளே துணை பொருந்திய வள்ளையின் மெல்லிய கொடிகளும் பின்னிக் கிடக்கும். அக்கொடிகளையும் அறுத்துக்கொண்டு விரைந்தோடும் வாளை மீன்களைப் பிடித்துத் தின்னும் நீர் நாய்கள், கரைக்கண் வளர்ந்திருக்கும் பிரப்பங்கொடிப் புதர்களில் புகுந்து உறங்கும். அத்துணை நிலநீர்வளம் மிக்கது அம்மாநகர்.

வளம்மிக்க ஊரில் வாழப் பெற்றமையால், அவ்வூர் மக்கள் விழுமிய வாழ்க்கை நெறியுடையவராய் விளங்கினர். கடவுளரை வழிபட்டுக் காக்கைக்குப் பலிச் சோறிட்டு, வருவிருந்தோம்பும் விழுமிய வாழ்வினராய் வாழ்ந்தனர். அழகிய இனிய பாக்களை இயற்றி அளிக்கவல்ல பெண்பாற் புலவர்களைப் பெற்றுத் தருமளவு, அவ்வூர் வாழ்மக்கள் நிறையக் கற்று நீள்புகழ் பெற்றுத் திகழ்ந்தனர். கழார்க் கீரன் எயிற்றியார் எனும் பெயர் பூண்ட அப் பெண்பாற்



பெரும் புலவர் பாடிய பாக்கள் பல நற்றிணை, நல்ல குறுந்தொகை, நெடுந்தொகை நூல்களில் இடம் பெற்றுள்ளன. தாம் பிறந்த ஊர்ப் பெயரைத் தம் இயற்பெயர்க்கு முன் வழங்கித் தம் பிறந்தவூர்ப் பற்றினை உலகறியக் காட்டிக் கொண்ட அவ்வம்மையார், தாம் பாடிய பாட்டொன்றில் நாடாளும் சோழரையும், தம் ஊரையும், தம் ஊர்வாழ் மக்களின் மனம் நிறைந்த வாழ்க்கை முறைகளையும் பாராட்டியுள்ளார். என்னே அவர் நாட்டுப் பற்று!

இவ்வாறு வளத்தாலும், விளையாட்டு நலத்தாலும், புலமைச் சிறப்பாலும் பெருமை பெற்ற அக்கழார்ப் பெருநகரில், பரதவர் குடியில் மத்தி எனும் பெயர் பூண்ட மாவீரன் ஒருவன் இருந்தான். கழார், காவிரிக் கரையில் கடலருகே இருந்தமையாலும், கடல் வாணிகம் வளர்க்கும் சோணாட்டுத் தலைநகர்க்கு அண்மையில் இருந்தமையாலும் கட்டுமரம் ஏறிச் சென்று மீன் பிடித்தலும், கலம் ஊர்ந்து சென்று வாணிகம் புரிந்து வாழ்தலுமாகிய தொழில்புரியும் பரதவர்களே, அம்மாநகரின் பெருங்குடி மக்களாய் வாழ்ந்தனர். மத்தி, அப்பரதவர் குடியில் பிறந்து, அக்குடிகளின் கோமகனாய் வாழ்ந்தான் என்றாலும், அவன் குலத்தொழிலை மேற்கொண்டானல்லன். விற்பயிற்சியும், வேற் பயிற்சியும் பெற்றுச் சிறந்த வீரனாய் விளங்கினான். அம்மட்டோ! அவன்பால் மற்றொரு சிறந்த ஆற்றலும் அமைந்து கிடந்தது. காட்டு யானைகளை வேட்டையாடிக் கைப்பற்றுவதிலும் அவன் கைதேர்ந்து விளங்கினான்.

மத்திபால் அமைந்து கிடந்த இவ் அரும்பெரும் பண்புகளை அறிந்தான், அப்போது சோணாடாண்டிருந்த வேந்தன். அவன், தன் படையில் மத்தி பணிபுரியின் தனக்குப் பெருந்துணையாம் என அறிந்தான். உடனே அவனை அழைத்துத்

படைத் தலைமை அளித்துச் சிறப்பித்தான். சோழர் படைத் தலைவனாய்ப் பணிபுரிந்து கொண்டிருந்தான் மத்தி.

ஒருநாள், அரசன் தன் படை வகைகளைப் பெருக்க விரும்பினான். நால்வகைப் படையுள், அக்காலப் போர் முறையில் பெருந்துணை புரிவது வேழப் படையே ஆதலின், அதைப் பெருக்குவதில், அரசன், தன் கருத்தை முதற்கண் செலுத்தினான். வேழ வேட்டத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்து முடித்தான். படைத் தலைவர் அனைவரையும் உடன்வரப் பணித்தான். மத்தி முதலாம் படைத் தலைவர் பலரும் கலந்துகொண்டனர். ஆனால், எழினி என்பான் ஒருவன் மட்டும் கலந்து கொண்டிலன். அதறிந்து சினம் கொண்டான் சோழன். ஆனால், அவன் ஒருவன் வாராமைக்காக வேழ வேட்டையைக் கைவிட்டானல்லன். மத்தி ஒருவன் இருந்தால் போதும், வேட்டையில் வெற்றி காணலாம் என்ற துணிவு இருந்தமையால், வேட்டை மேற்கொண்டு சென்றான். காட்டுள் புகுந்து குழிகளை வெட்டி அக்குழிகளில் வேழங்கள் வந்து விழும்படிச் செய்து, அவ்வாறு வீழ்ந்த வேழங்களை விலங்கிட்டு ஒன்று சேர்த்தான். கன்றுகளும், களிறுகளும், கன்றுகளைப் பிரியாப் பிடிகளுமாக எண்ணிலா வேழங்கள் அகப்பட்டன. நாடு வந்து சேர்ந்தான் மன்னவன்.

நாடு சேர்ந்ததும், மன்னவன் மத்தியை அழைத்து, தம்மை மதியாத எழினியின் ஆணவத்தை அடக்கிவருமாறு பணித்தான். எழினி, எங்கோ தொலை நாட்டில் பெரும் படையோடு வாழ்ந்திருந்தான். மத்தி, அவன் வாழிடத்தின் சேய்மையினையோ, அவன் பெற்றுள்ள படைவன்மையினையோ மதியாது புறப்பட்டுச் சென்றான். மத்தியின் வருகையையும், மன்னவன் ஆணையையும் அறிந்த எழினி, பெரும்படையோடு வந்து மத்தியை எதிர்த்தான். ஆனால், மத்தியின் ஆற்றல்முன் அவன்படை, வலியிழந்து அழிந்தது.



எழினியைக் கைப்பற்ற, மத்தி, நெடும்பொழுது போர்புரிந்தானல்லன். போர் தொடங்கிய சிறிது நாழிகைக்கெல்லாம் அவனைச் சிறைசெய்தான். அவன் பற்களைக் கொட்டி உதிர்த்தான். எழினி ஆணவம் அழிந்து அடங்கினான். எழினியின் வெண்பற்களோடு வீடு திரும்பினான் மத்தி.

மத்தியின் ஆற்றல்கண்டு, அவனைப் பாராட்டிச் சிறப்புச் செய்தான் மன்னவன். மத்தி, தான்பெற்ற வெற்றியை நாட்டு மக்கள் என்றென்றும் மறவாது மனத்திடை வைத்துப் பாராட்ட வேண்டும் என விரும்பினான். அதனால், வெண்மணிவாயில் எனும் ஊரில் உள்ள தன் அரண் கதவில் அப்பற்களை அழுத்தி வைத்தான். அவ்வூர் அருகே ஓடிய காவிரிக் கரையில், தன் வெற்றியின் நினைவுச் சின்னமாய்க் கற்களால் படித்துறை ஒன்று அமைத்தான். அரும்பாடுபட்டுப் பெற்ற வெற்றி மறைந்து அழிந்துபோகாது, நின்று விளங்க நினைவுச்சின்னம் எழுப்பும் நிலையை அன்றே நாட்டிய மத்தியின் அறிவுகண்டு, அக்காலப் பெரும்புலவராகிய மாமூலனார், அவன் அருஞ்செயலைத் தம் பாட்டிடைப் பாராட்டி அழியா நினைவுச் சின்னம் ஒன்றை ஆக்கியுள்ளார். மத்தி நாட்டிய நினைவுச் சின்னம் நிலைகுலைந்துவிட்டது. ஆனால், மத்தி குறித்து மாமூலனார் எழுப்பிய நினைவுச் சின்னம் இன்றும் நின்று அவன் புகழ் பாடுகிறது.

"குழியிடைக் கொண்ட கன்றுடைப் பெருநிரை
பிடிபடு பூசலின் எய்தாது ஒழியக்,
கடுஞ்சின வேந்தன் ஏவலின் எய்தி
நெடுஞ் சேணாட்டின் தலைத்தார்ப் பட்ட
கல்லா எழினி பல்எறிந்து அழுத்திய
வன்கண் கதவின் வெண்மணி வாயில்
மத்தி நாட்டிய கல்கெழு பனித்துறை."

# 12. மோகூர்ப் பழையன்

பழந்தமிழ்ப் பாண்டிய மன்னருள் தலைசிறந்தவன், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். அவன் படையில் பணியாற்றிய படைத்தலைவர் பலருள்ளும் சிறந்தவன் மோகூர்ப் பழையன்.

சேர, சோழ, பாண்டியராகிய பழந்தமிழ்க் குடிகள் அரசோச்சி வாழ்ந்த தமிழகத்தில், அதியர், ஓவியர், கொங்கர், கோசர், திரையர், தொண்டையர், பூழியர், மலையர், மழவர், வடுகர், வேளிர் போலும் வேறுபிற இனத்தவரும் வாழ்ந்து வந்தனர். இவருள் சிலர் மட்டும், ஒருசில நிலப் பகுதிகளை வாழிடமாக வகுத்துக்கொண்டு, நிலையான அரச வாழ்வு மேற்கொண்டிருந்தனராக, எஞ்சியோர் எங்கும் நிலைத்து வாழாமல், ஊர்விட்டு ஊர், நாடுவிட்டு நாடு என அலைந்து, நாடோடி வாழ்வினராய்த் திரிந்துவந்தனர். அத்தகைய இனத்தவருள் கோசரும் ஒருவராவர்.

மேற்குக் கடற்கரை மாநகராகிய மங்களூரை நடுவிடமாகக் கொண்டு, துளுமொழி வழங்கும் துளுநாட்டில் வாழ்க்கையைத் தொடங்கிய கோசர், நாடுபல புகுந்து, அந்நாட்டு அரசுகளை அழித்து அலைந்து திரிந்து, இறுதியில், கிழக்குக் கடற்கரையைச் சேர்ந்த சிறந்த நகரங்களுள் ஒன்றாகிய செல்லூர்க்கு அணித்தாக இருந்த நியமத்தில் நிலைத்தகுடியினராய் வாழத் தொடங்கினர். பாழிக்கு உரியோனாகிய நன்னன் என்பானுக்குரிய மாமரத்தை வெட்டி



யும், அவன் பகைவனாகிய அகுதையை, அவன் கைப்பற்றா வண்ணம் காத்தும் நாட்டிய அக்கோசர்தம் ஆண்மையையும், தம் புனத்தில் விளைந்திருந்த பயிரை, அப்புனத்தருகே மேய்ந்திருந்த பசு மேய்ந்துவிட்ட சிறு குற்றத்திற்காக, அப்பசுவினை மேய்த்திருந்த முதியோன் கண்களைப் போக்கிய அவர்தம் கோபத்தின் கொடுமையையும் அறிந்து, அவர்களுள் பலரைத் தன் படைவீரராகத் தேர்ந்து அவர்கள் அடங்கிய தனிப்படை ஒன்றை அமைத்து வைத்திருந்தான் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன். பிறந்தநாள் தொட்டே படைதொட்டுப் பயிற்சிபெறும் போர்க்குணம் படைத்த கோசர்களைக் கொண்ட படைக்குத் தலைமைதாங்குவோன், அவர்களை அடக்கி ஏவல் கொள்ள வல்ல ஆற்றல் உடையவனாதல் வேண்டும் என உணர்ந்து, அப்பெரும் பணிக்கு ஏற்புடையான் எனத் தேர்ந்து, அவனால் அப்படைத் தலைமை அளிக்கப் பெற்றவனே, இக்கட்டுரைத் தலைவனாகிய மோகூர்ப் பழையன்.

பேராண்மையும் பெரிய படையும் தலைசிறந்த படைத்தலைவர்களும் பெற்றிருந்தானென்றாலும், நெடுஞ்செழியன், ஆண்டால் நனிமிக இளையனாவன். ஆனால், அவன் ஆளப்புகுந்த பாண்டி நாடோ, பரந்து அகன்றது; பல்வளம் மிகுந்தது. இதைப் பார்த்தார்கள் அவன் பகைவர்கள். சேரரும் சோழரும் பாண்டியரின் குலப் பகைவராவர். அக்காலை அவ்விருநாட்டு அரியணைகளிலும் முறையே, யானைக் கண்சேய் மாந்தரஞ்சேரல் இரும்பொறையும், கிள்ளிவளவனும் அமர்ந்திருந்தனர். அவர்கள் இருவரும், பாண்டிநாட்டு அரசியலைக் கைப்பற்ற அதுவே வாய்ப்புடைய காலமாம் என உணர்ந்தனர். பாண்டி நாட்டின் மீது போர் தொடுத்துச் செல்லவும் துணிந்தனர். ஆயினும், பாண்டிநாட்டு அரசியல் உரிமையைப், பழையன்கீழ்ப் பணிபுரியும் கோசர்படை காத்து நிற்பது அவர்க்குக் கலக்கத்தை

அளித்தது. அதனால் தாம் மட்டும் செல்வது தகாது; தக்க துணைபெற்றே போதல் வேண்டும் என உணர்ந்து, திதியன், எழினி, எருமையூரன், இளங்கோவேண்மான், பொருநன் என்ற குறுநில மன்னர் ஐவர் துணையை நாடினர். அவர்களும் அதற்கு இசைந்தனர். அவர்கள் துணைவர, அரசர் இருவரும் பாண்டிநாடு புகுந்து, அப்பேரரசின் தலைநகராம் கூடல் மாநகரை வளைத்துக் கொண்டனர்.

அது கேட்டான் நெடுஞ்செழியன். "தம் படைப் பெருமையால் என் ஆண்டிளமையை எள்ளிப் போருக்கெழுந்த இவரை வென்று, இவர்தம் வெற்றி முரசுகளையும், வெண்கொற்றக் குடைகளையும் கைப்பற்றுவேன். அதில் தவறி விழுவேனாயின், 'கொடியன் எம் இறை' என என் குடிகள் என்னைக் குறைகூறிப் பழிப்பாராக! புலவர்கள், என்னையும் என் நாட்டையும் பாடிப் பாராட்டுவதைக் கைவிடுவாராக! வறுமைகூறி வருவார் தம் வருத்தத்தைக் களையமாட்டா வறுமை என்னை வந்து அடையுமாக!" என வஞ்சினம் கூறி வெகுண்டான்.

வேந்தன் வெகுளியின் வேகத்தைக் கண்டான் பழையன். அக்கணமே, கோசர்படை அவன் தலைமையில் போர்க்களம் புகுந்தது. கோசர் படையைக் கண்டான் கிள்ளிவளவன். கோசர்களின் கொற்றத்தை அவன் முன்னரே அறிந்திருந்தான். அப்படையை வென்று அழித்தால் அல்லது, பாண்டிநாட்டு ஆட்சிபால் தாம் கொண்ட வேட்கை நிறைவேறாது என்பதை நன்கு உணர்ந்தான். அதனால், உடன் வந்தோர், பாண்டி நாட்டுப் படையின் பிற அணிகளை வளைத்துப் போரிடவும், கிள்ளிவளவன் கோசர் படையை வளைத்துக் கொண்டான். வெள்ளம் போல் பாய்ந்து வந்தது கிள்ளிவளவன் படை. அவன் குதிரைப்படை காற்றென விரைந்து கடும் போரிட்டது.



அவன் களிற்றுப்படை விளைத்த கேடுகளும் குறைவில்லை. பார்த்தான் பழையன். வாள் ஏந்திப் களம் புகுந்தான். அவ்வளவே. கிள்ளிவளவன் நல்லமர் கெட்டது. அவன் குதிரைப்படை வென்று கைப்பற்றப் பட்டது. அவன் களிற்றுப் படையில் கணக்கிலாதன கோசர் உடைமை ஆனது. கிள்ளிவளவன் புறமுதுகிட்டான்.

புறங்காட்டி ஓடும் வளவனைப் பழையன் விட்டானல்லன். பெரும்படை தொடர்ந்துவர, அவனைத் துரத்திச் சென்றான். பாண்டி நாட்டு எல்லையையும் தாண்டிவிட்டான் சோழன். படைத் தலைவன் பழையன் அந்நிலையிலும் அவனை விட்டிலன். சோழர் தலைநகர் தஞ்சை மாநகர்க்கு அண்மையில் உள்ள தலையாலங்கானம் வரை விடாது துரத்திச் சென்றான். இறுதியாக, ஆங்கு அவனை வளைத்து அரும்போர் ஆற்றி, சோழர் படையை அறவே அழித்து, தன் வேந்தன் வஞ்சினம் வாய்க்கும் வண்ணம், வளவன் வெற்றி முரசையும், வெண்கொற்றக் குடையையும் கைப்பற்றிக் கொண்டான். வென்று கைக்கொண்ட சோணாட்டில், தன் பாண்டி நாட்டு மீன் கொடியைப் பறக்கவிட்டான். கிள்ளிவளவன் பகைவனாகிய கோக்கோதை மார்பன் என்பான் கண்டு நகைக்கும்படி வென்ற அவ்வெற்றிச் சிறப்போடு பழையன் பாண்டிநாடு திரும்பினான்.

**" இழையணியானைப் பழையன் மாறன்**
**மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்**
**வெள்ளத் தானையொடு வேறுபுலத்து இறுத்த**
**கிள்ளிவளவன் நல்அமர் சாஅய்க்**
**கடும்பரிப் புரவியொடு களிறுபல வவ்வி**
**ஏதில் மன்னர் ஊர்கொளக்**
**கோதை மார்பன் உவகையிற் பெரிதே."**

சோணாட்டுத் தலையாலங்கானத்தில் தன் படைத் தலைவன் பெற்ற வெற்றியின் பெருமை கண்டு பாண்டி நாட்டு மக்கள், "தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ் செழியன்" எனப் பெயரிட்டு அழைத்துத் தன்னைப் பாராட்டினாலும், அவ்வெற்றிப் புகழ் அனைத்தும் படைத் தலைவன் பழையனுக்கே உரித்து என உணர்ந்தான் செழியன். உணர்ந்ததோடு நில்லாமல், அதற்கேற்ற சிறப்பை அவனுக்கு அளிக்கவும் துணிந்தான். மேலும், இன்று தோற்றோடிய பகைவர், இன்னும் சிலகாலம் கழித்து மீண்டும் படையெடுத்து வருவதும் இயலும். அப்போது அவர்களைத் தன் தலைநகர் வாயில்வரை வருமாறு விடுதல் போர்முறையாகாது. அவர்களை எல்லைப்புறத்திலேயே தடுத்துத் துரத்திவிடுதல் வேண்டும். அதைச் செய்துமுடிக்க வேண்டுமாயின், நாட்டு எல்லையில் ஒரு பெரிய படையை நிறுத்தி வைக்கவேண்டும் என்றும் உணர்ந்தான் நெடுஞ்செழியன். உணர்ந்தவன், தன் இருபெரும் வேட்கையும் ஒருங்கே நிறைவேற்றத்தக்க ஓர் அரிய செயலைச் செய்து முடித்தான்.

சோணாட்டில், சோழர் பேரரசிற்குக் கேடு நிகழும்போதெல்லாம் சோழர்க்குப் படைத்துணை அளித்துக் காக்கும் மலையமான்களின் அரசிருக்கையாகிய திருக்கோவலூருக்கு அண்மையில், கள்ளக்குறிச்சி மலையடிவாரத்தில் இருந்த மோகூரைப் பழையனுக்கு உரிமையாக்கி, அம்மாநகர்க்கு அவனை மன்னனாக்கி, "மாறன்" என்ற தன் குடிப் பெயரையும் அவனுக்குச் சூட்டி அவனைச் சிறப்பித்தான். பழையனுக்குத் துணையாக, அவன் கீழ்ப் பணியாற்றிய கோசர் படையை அளித்து, அப்படை வீரர்கள் வாழத்தக்க கோசர் பாடிகள் பலவற்றையும் ஏற்படுத்தி, அப்படைவீரர்களையும் சிறப்பித்தான். மலையிடையூராதலின், தவறாது மழை பெற்று வளம் கொழிக்கும் மோகூர்க்கு உரியனாய், மோகூர் மன்னன் பழையன் மாறன் எனும் சிறப்புப் பெயர்



பூண்டு, தன் அரசவைக்கண் கோசர் படை அமர்ந்து அழகு செய்யச் செம்மாந்து வாழ்ந்திருந்தான் பழையன்.

தமிழ் நாட்டில், தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் நாடாண்டிருந்த காலத்தில், கங்கை பாயும் வடநாட்டில் மௌரியர் என்ற சிறந்த அரச இனத்தவர் அரசோச்சி வந்தனர். தமிழ் நாட்டின் செல்வச் சிறப்பை, அவ்வடவேந்தர்கள் அறிந்திருந்தமையால், அவர்களில் பலர் தமிழ்நாட்டை வென்று அடிமைகொள்ளும் வேட்கையுடையராயினர். அவ்வேட்கை, மௌரிய இனத்தவர் உள்ளத்திலும் இடம்பெற்றது. உடனே நெடிய பெரிய தேர்களைக்கொண்ட மௌரியப் பெரும்படை யொன்று, தென்னாடு நோக்கிப் புறப்பட்டது. விந்தம் கடந்து வேங்கடத்தை அடைந்த மௌரியர், தமிழகத்தின் வடவெல்லையாக விளங்கிய அவ்வேங்கட மலையடிவாரத்தில் வடுகர் என்ற இனத்தவர் வாழ்வதைக் கண்டார்கள். அவ்வடுகர் சிறந்த வில்வீரராகவும், தமிழகத்தின் எல்லைக்கண் வாழ்ந்து, தமிழ்நாட்டின் இயற்கை அமைப்பினையும், அந்நாட்டு அரசியல் நிலையினையும் அறிந்தவராகவும் விளங்குவது கண்ட மௌரியர், அவ்வடுகரைத் தம் நண்பர்களாக ஆக்கிக்கொண்டார்கள். வடவர் முயற்சிக்கு முன்னோடித் துணைபுரிய வடுகரும் முன்வந்தனர். வடுகப்படை வழிகாட்ட, வேங்கடம் கடந்து தமிழகம் புகுந்த மௌரியப் பெரும் படை, தம் தேர்ப்படை செல்ல இயலாதபடி இடைநின்று தடுத்த மலைகளையெல்லாம் வெட்டி வழிசெய்து கொண்டு தென்திசை நோக்கி வந்து கொண்டிருந்தது.

வேங்கடத்தைக் கடந்து விரைந்து வந்த மோரியர்கள், தொண்டை நாட்டையும் தாண்டிவிட்டார்கள். அப்போது தூசிப்படையாய் வழிகாட்டிவந்த வடுகர், மோகூர் மன்னன் பழையன் மாறனின் போராற்றலை விளங்க எடுத்துரைத்து, "இவனை வென்றாலல்லது விரும்பி வந்தது

கிட்டாது'' என்றனர். அது கேட்டதும், மோரியப் படை மோகூர் நோக்கி முன்னேறத் தொடங்கிற்று. வடவர் படை வரவைப் பழையன் அறிந்தான். அஞ்சாத அவனும் சிறிது அஞ்சிவிட்டான். தலையாலங்கானப் போருக்குப் பிறகு, தன்னை எதிர்ப்பவர் தமிழகத்தின் வட பகுதியில் ஒருவரும் இலராகவே, கொற்றம் மிக்க கோசர் படையைக் கொன்னே வைத்திருக்க அவன் விரும்பவில்லை. தலைநகரில் இருந்தால், வளரும் பாண்டிப் பேரரசிற்குப் பெருந்துணையாம் என்று கருதினன். அதனால் கோசர் படையைக் கூடல்மாநகர்க்கு அனுப்பிவிட்டு, ஒரு சிறு படையை மட்டுமே மோகூர்க்கண் வைத்திருந்தான். அதனால், வரும் வடவர் படையால் வாழ்விழக்க நேருமோ என்ற நினைப்பு எழவே, சிறிது நடுக்கம் உற்றான். ஆயினும் வடவர் படைக்கு வழிவிட அவன் விரும்பவில்லை. நெடுஞ்செழியனுக்கு நிலைமையை விளக்கி ஓலை போக்கினால், அவன், கோசர் படையை உடனே இவண் அனுப்பிவைப்பன். அது வரும்வரை, இவ்வடவரைத் தடுத்து நிறுத்துதல் உள்ள இச் சிறு படையால் இயலும் எனத் துணிந்தான். உடனே, செழியனுக்குச் செய்தி அறிவித்துவிட்டு, உள்ள படையோடு மோகூர்க் கோட்டைக்குள் புகுந்துகொண்டான்.

மோரியரும் வடுகரும் மோகூர்க் கோட்டையை வளைத்துக்கொண்டு கடும்போர் புரிந்தனர். ஆயினும் பழையன் பணிந்திலன். உள்ள படையைக் கொண்டே வந்தவர் உரத்தைச் சிறிது சிறிதாகச் சிதைத்துக் கொண்டிருந்தான். கோசர் படை வந்துவிடும்; வெற்றி நமதாகும் என்ற நம்பிக்கை, அவனுக்கும் அவன் படை வீரர்க்கும் ஊக்கம் ஊட்ட, உரம்மிகுந்து போராடிக் கொண்டிருந்தனர்.



மோரியர் படையெடுப்பினையும், மோகூர் முற்றுகையினையும் கேட்டான் நெடுஞ்செழியன். உடனே, மோகூர் நோக்கிச் செல்லுமாறு கோசர் படைக்கு ஆணை பிறந்தது. தன் தலைமையால் தமக்குப் பெருமையளித்த நம் தலைவனுக்குத் துணைபுரியச் செல்கிறோம் என்ற எண்ணம் கோசர் சிந்தையில் எழவே, விரைந்து சென்றனர். போர்ப்பறை ஒலிக்க, வெற்றிச்சங்கு முழங்க வந்து சேர்ந்தது கோசர் படை. கொற்றம் மிகுந்த கோசர்படை வந்து சேரவே, பழையன், கோட்டையைவிட்டு வெளிப்பட்டான். வடவர் படைகளும், தென்னவர் படைகளும் ஆலம்பலம் எனும் இடத்தில் எதிர்ப்பட்டுப் போரிட்டனர். முடிவில் நாடாளும் வேட்கை உந்தவந்த வடவர், தம் நாற்படையும் நலிவிழந்து போகப் புறங்காட்டி ஓடிவிட்டனர்.

**" வெல்கொடித் துனைகால் அன்ன புனைதேர்க் கோசர்,**<br>
**தொன்முது ஆலத்து அரும்பணைப் பொதியில்**<br>
**இன்னிசை முரசம் கடிப்பு இகுத்து இரங்கத்,**<br>
**தெம்முனை சிதைத்த ஞான்றை, மோகூர்**<br>
**பணியாமையின், பகைதலை வந்த**<br>
**மாகெழு தானை வம்ப மோரியர்**<br>
**புனைதேர் நேமி உருளிய குறைத்த**<br>
**இலங்குவெல் அருவிய அறைவாய்''**

தமிழகத்தின் வடவெல்லை நாட்டவராகிய வடுகராலும், அவர்க்கும் வடவராகிய மோரியராலும் தமிழகத்திற்கு வரஇருந்த தாழ்வினைப் போக்கிய புகழ் உடையவனாய் வாழ்ந்திருந்தான் பழையன் மாறன். படைத்தலைவனாய்ப் பணியாற்றிய தன்னை மோகூர்க்கு மன்னனாக்கி, மாறன் எனும் பெயர் சூட்டிப் பெருமை செய்ததோடு நில்லாமல், உற்ற சமயத்தில் படையுதவிக் காத்தகாவலன்பால் பழையனுக்குப் பேரன்பு பெருகிற்று. அதனால், அவ்

வரசனும், அவன் குலத்தவரும் விரும்பி அணியும் குலமலர் அளிக்கும் வேப்பமரத்தைத் தன் காவல் மரமாகக்கொண்டு, பேணி வளர்த்து, அப் பேரரசனைப் பெருமை செய்தான்.

முடிவேந்தரும், அவர்க்கு மகட்கொடுக்கும் மாண்பு மிக்க வேளிர் குலத்தவருமாகிய வேந்தர் பலர் கூடிவந்த கூட்டணியைத் தலையாலங்கானத்துப் போரில் முறியடித்தும், வடுகர் வழிகாட்ட வண்தமிழ் நாட்டைக் கைப்பற்ற வந்த வடநாட்டுப் பேரரசின் பெரும் படையை ஆலம்பலம் போரில் அழித்துத் துரத்தியும் பெற்ற வெற்றிச் சிறப்புகளால் செம்மாந்திருந்தான் பழையன். அம்மகிழ்ச்சி மிகுதியால், அவன் ஒன்றை அறிய மறந்துவிட்டான். சேர நாட்டு அரியணையில், அடலேறு அனைய ஆற்றல்மிக்க அரசன் ஒருவன் அமர்ந்துவிட்டதை அவன் பெரிதாகக் கருதினானல்லன். அதனால், தன்னினும் ஆற்றல்மிக்கவர் தமிழகத்தில் ஒருவரும் இலர் எனத் தருக்கியிருந்தான். அது, அவன் அழிவிற்கு அடிகோலிவிட்டது.

இமயம்வரை படைகொண்டு சென்று, இமயத்தில் தன் விற்கொடியை நாட்டி, இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் என நாட்டவர் போற்ற நாடாண்டிருந்த நல்லோனின் மகனாகிய செங்குட்டுவன், வண்தமிழ் நாட்டவர்பால் வசைமாரி பொழிந்த வடபுல அரசர்களாய கனகவிசயர் மீது, கண்ணகி சிலைக்கு வேண்டிய கல்லை ஏற்றிக் கொணர்ந்த கொற்றம்மிக்க குட்டுவன் சேரநாட்டு அரசியலைக் கைப்பற்றினான். சிதறிச் சீரழிந்து கிடந்த சேரநாடு அவன்கீழ் ஒன்றுபட்டு உரம் பெற்றுத் திகழ்ந்தது. அத்தகையோனின் அரிய நண்பனாய் அறுகை என்பான் ஒருவன் வாழ்ந்திருந்தான். தன் தலைநகர்க்கு மிகமிகச் சேய்மைக்கண் உள்ள பாண்டிநாட்டு எல்லைப்புறத்தே அவன் வாழ்ந்திருப்பினும், செங்குட்டுவன், அவனைத் தன் ஆருயிர் நண்பனாக மதித்திருந்தான். அதனால் அவன் வெற்றியைத் தன்



வெற்றியாகவும், அவன் தோல்வியைத் தன் தோல்வியாகவும், அவன் புகழைத் தன் புகழாகவும், அவனுக்கு உண்டாம் இழிவைத் தனக்கு உண்டாகும் இழிவாகவும் மதித்து வந்தான்.

அறுகை இயல்பாகவே போர்வெறி பிடித்தவன். பேரரசர் கோட்டைகளைக் கைப்பற்றுவதையே கருத்தில் கொண்டவன். அவனுக்குச் செங்குட்டுவனின் சிறந்த நட்பும் கிடைக்கவே, அவன் செருக்கு அளவிறந்துவிட்டது. பழையன் பேராற்றல் வாய்ந்தவன். அவன் கீழ்ப்பணி புரியும் கோசர் படை கொற்றம் மிக்கது என்பதை மதியாமல், மோகூர்க் கோட்டையை முற்றுகையிட்டான். உழிஞைமலர் சூடி மாற்றரசர் கோட்டைகளை மண்மேடாக்கும் அறுகை, தன் மோகூர்க் கோட்டையை முற்றியுள்ளான் என்ற செய்தியறிந்து சினங்கொண்டான் பழையன். முடியுடை மன்னர்களையும் முறியடித்து வென்ற வீரம்மிக்க தன்னைப் பகைத்துக் கொண்ட அறுகையின் அறியாமை கண்டு எள்ளி நகைத்தான். பழையன் வாளெடுத்துக் களம் புகக் கண்டதும், அறுகை ஆற்றல் இழந்து தோற்று விட்டான். பழையன் போராண்மையைப் பாராட்டப் பைந்தமிழ் நாட்டவர்க்கு மற்றுமொரு நல்வாய்ப்புக் கிடைத்தது. நிற்க.

தோல்வி கண்டு துயர் உற்றான் அறுகை. எண்ணிலா அரண்களை அழித்த தன் ஆற்றல் மோகூர் முற்றுகையில் அழிந்தமைக்குப் பெரிதும் நாணினான். பண்டைய தன் பேராற்றல் கண்டு பாராட்டியவர்களைப் பார்க்கவும் நாணிற்று அவன் நல் உள்ளம். அதனால், அவர்கள் கண்ணில்படாது கரந்து வாழக் கருதினான். அதற்குத் தொலை நாடு சென்று வாழ்வதே நலமாம் எனத் துணிந்தான். உடனே, தன்னை இன்னான் என அறிந்து கொள்வார் அற்ற ஊரொன்றிற்குச் சென்றுவிட்டான்.

அறுகைக்கு நேர்ந்த அழிவினை அறிந்தான், அவன் ஆருயிர் நண்பனாகின சேரன் செங்குட்டுவன். இருவர் உள்ளமும் ஒன்றுபடுதலே சிறந்த நண்பர்களின் உயர்ந்த உடைமையாகும். ஆகவே, புணர்ச்சியும் பழகுதலும் ஆகிய அவையிரண்டினுக்கும் அவ்விருவரிடையே வாய்ப்பில்லாது போயினும் கேடில்லை என்ற உயர்ந்த உண்மையை உணர்ந்தவன் செங்குட்டுவன். அதனால், எளிதில் அடையலாகாச் சேணெடுந்தூரத்தில் சென்று வாழினும், என் சிறந்த நண்பர்களுள் அறுகையும் ஒருவனாவன் என உளத்திடை மதித்தான். அதனால் அவனுக்கு நேர்ந்த கேட்டினைத் தனக்கு நேர்ந்த கேடாகக் கருதினான்; அவன் பழி, தன் பழி, அவன் பகைவன், தன் பகைவன் என மதித்தான். அவ்வளவே, பழையனை வெற்றி கொண்டு, நண்பன் பழி துடைக்கப் போர்முரசு கொட்டி விட்டான்.

செங்குட்டுவன் சினங்கொண்டு புறப்பட்டு விட்டான் என்ற செய்தியறிந்தான் பழையன். செங்குட்டுவன் சிறந்த வீரன், பெரிய படையுடையான், அரசுபல அழித்த ஆண்மையுடையான் என்பதை அறிந்திருந்தான். அதனால், அவனைத் தனித்து நின்று எதிர்க்கத் தயங்கினான். அந்நிலையில் அவனுக்குத் துணைபுரியத் தமிழரசர் சிலரும் தாமே முன் வந்தனர். சேரநாட்டு அரசியல் வாழ்வில் செங்குட்டுவன் காலடியிட்டுள்ளதையும், அவன்படை வன்மையால் சேரர் பேரரசு பலதிசைகளிலும் பெருகி வருவதையும் அறிந்து, அது பொறாது, வளர்ந்துவரும் அவ்வரசை அழிக்கும் வழிவகைகளை எண்ணிக் கொண்டிருந்தனர், அக்காலை அரியணையில் அமர்ந்திருந்த சோழனும், பாண்டியனும். அந்நிலையில், செங்குட்டுவன் மோகூர் நோக்கிப் புறப்பட்டு விட்டான் என்ற செய்திவரவே, அவர்கள் இனியும் வாளா இருத்தல் கூடாது எனத் துணிந்தனர். உடனே, தம் ஆட்சிக்குட்பட்ட ஏனைய வேளிர்களையும் ஒன்று திரட்டி-



னர். எல்லோருமாகப் புறப்பட்டு மோகூர் அரண்வந்து அடைந்தார்கள்.

பேரரசர் படைகளோடு பிற வேளிர்களின் படைகளும் துணையாக வந்து சேரவே, பழையன் உள்ளத்தில் துணிவு பிறந்துவிட்டது. இப்பெரிய முன்னணியை முறியடிக்கும் முழுவலிமை கொங்குநாட்டுக் கொற்றவனுக்கு இராது என எண்ணி இறுமாந்தான். குட்டுவன் படைகளை வெட்டி வீழ்த்துவோம் எனக் குருதி தொட்டுச் சூளுரைத்தது கோசர் படை.

அந்நிலையில் சேரர்படை வந்து சேர்ந்து விட்டது. செங்குட்டுவன், பழையன் செருக்குக்குப் பெரிதும் துணை நிற்பது, பகைவர்க்குப் பணியா மோகூர் அரண் அமைப்பே என அறிந்து, எடுத்த எடுப்பிலேயே அரண் அழிவில் கருத்தைப் போக்கினான். அதனால் போர் தொடங்கிய சிறிது பொழுதிற்கெல்லாம் கோட்டை பாழ்பட்டது. வளமார் தமிழகத்துள் வடவர்படை புகாதபடி வென்று துரத்திய விழுச்சிறப்பு வாய்ந்த மோகூர் அரண் வீழ்ந்து விட்டது. அரண் வீழ்ந்துவிடவே, அடங்கியிருந்தவர் புறம் போந்து போரிட்டனர். மன்னர்களின் முன்னணி முறிந்து போகும்படி உரங்கொண்டு போராடினான் செங்குட்டுவன். இருதிறப்படை வீரர்களும், தங்கள் தங்கள் ஆற்றல்களையெல்லாம் காட்டிக் கடும் போரிட்டனர். பழையன் வெற்றிக்குப் பெருந்துணை புரிவது, அவன் கீழ்ப் பணிபுரியும் கோசர் படையே என அறிந்து, அப்படையை வளைத்து அருஞ்சமர் புரிந்தது சேரர் படை. கோச வீரரும் தம் கொற்றத்தை நிலைநாட்ட நெடும்போர் புரிந்தனர். ஆயினும் கொங்குநாட்டு வீரரின் வில்லாற்றல்முன் கோசரின் கொற்றம் நிற்க முடியவில்லை. கோசர்படை அழிவுற்றது. அவ்வீரர் உடலிலிருந்து வெளிப்பட்டு வழிந்தோடிய குருதி, கார்காலத்துப் பெருமழை வெள்ளமெனப் பாய்ந்து

ஓடிற்று. களமெங்கும் பிணமலைகளே காட்சி அளித்தன. இறுதியில் பழையனுக்குப் படைத்துணைவந்த பேரரசர் இருவரும் தோற்றனர். அவ்விருவர் உடன்வந்த வேளிர்களும் புறமுதுகிட்டனர். பழையனும் களத்தில் பட்டான்.

தன் நண்பனை வென்று துரத்திய பழையன் பட்ட பிறகும் செங்குட்டுவன். சினம் மாறவில்லை. அதனால், வெற்றி முரசொலிக்க மேலும் விரைந்து சென்று, பழையன் பேணி வளர்த்த காவல் மாமரம் வேம்பினை வெட்டி வீழ்த்தினான். அந்நிலையில், பழையனை இழந்த அவன் பத்தினிப் பெண்டிர், தம் மங்கல அணிகளைக் களைந்து போக்கிவிட்டுக் களம் புகுந்து கண்ணீர் சொரிந்து புலம்பலாயினர். அவர்களைக் கண்ட செங்குட்டுவன், அவர் நிலைகண்டு இரங்குவதற்கு மாறாக, அவர்களைப் பற்றிக் கொணர்ந்து, அவர்தம் கூந்தலைக் களைந்து, திரித்துக் கயிறுகள் ஆக்கினான். வீழ்த்திய வேம்பினை, வெற்றி முரசு ஆக்குவதற்கேற்ற அளவுடைய சிறு சிறு துண்டுகளாக வெட்டினான். அத்துண்டுகளையெல்லாம் அம்மயிர்க் கற்றால் ஒன்று பிணித்தான். பழையனுக்குரிய பட்டத்து யானைகளைக் கொண்டுவந்தான். மரப் பிணிப்பில், அவற்றை வரிசையாகப் பூட்டி, தன் சேரநாடு நோக்கி ஓட்டிச் சென்றான்.

தன் பேராண்மையால், பாண்டியர் படைத்தலைமை ஏற்றுப் பாண்டிநாட்டுப் பேரரசுவாழப் பெரும்பணியாற்றியும், தமிழகத்திற்குப் புறப்பகைவரால் வர இருந்த பெருங்கேட்டைப் போக்கியும் பெற்ற பெரிய புகழோடு பெருவாழ்வு வாழ்ந்திருந்த பழையன் மாறன், இறுதியில் தமிழகத்தின் அகத்தே எழுந்த பகையால், அந்தோ! அழிவுற்றான்.

# 13. வில்லவன் கோதை

“இமயவரம்பன் நெடுஞ்சேரலாதன் மகனாய், சிலப்பதிகாரம் எனும் செந்தமிழ்க் காப்பியம் இயற்றிய இளங்கோவடிகளாரின் உடன் தோன்றலாய்ப் பிறந்து, பீடும் பெருமையும் பெற்றுப் பேரரசு செலுத்திய சேரர்குலச் செம்மல் செங்குட்டுவன் பெற்ற வெற்றிகள், அம்மம்மா! அளவிறந்தனவாம்!” என வியந்து பாராட்டுவர் புலவர் பல்லோர்.

“சேர நாட்டுக் கடல் வாணிகம் செழிக்கப் பொன்னையும் மணியையும் கொணரும், மேலைநாட்டு வங்கங்கள் வரும் வழியிடைத் தீவுகளை, வாழிடமாக் கொண்டு, அக்கலங்களைக் கொள்ளையிட்டுக் கொடுமை புரிந்து வந்த கடம்பர்களைக், கடற்படைத் துணையால் வென்று அடக்கி, அவர்தம் காவல்மரமாம் கடம்பை வெட்டி வீழ்த்தி வீறுபெற்றான் அவ் வேந்தன்” எனவும்,

“கொடுகூரைத் தலைநகராக் கொண்ட, தன் அண்டை நாட்டு வாழ்வினராம் கொங்கர், தன் குலப் பகைவர்களாம் சோழ பாண்டியர் இருவரும் படைத்துணை அளிக்கின்றனர் என்ற செருக்கால், தன்னைப் பகைப்பது கண்டு, அவர் மீது போர் தொடுத்து, அவர்தம் போர்ப் புண் கொட்டும் குருதி வெள்ளத்தால் போர்க்களம் செங்களமாகி, அந்திக் காலத்துச் செவ்வான் என அழகு காட்டுமாறு, பெரும் போர் புரிந்து வென்று பரணி கொண்டான் அப் பெரியான்” எனவும்,

"தன் நண்பன் அறுகைக்கு அடாது புரிந்தான் மோகூர்ப் பழையன் என்பதறிந்ததும், அப்பழையன், வட இந்தியப் பெருவேந்தர் மரபினராம் மௌரியரின் பெரும் படைகளை, அவர்க்குத் துணைவந்த வடுகப் பெரும் படையோடு அழித்து வெற்றிகொண்ட ஆற்றல்மிகு கோசர் படைத் தலைவனாகவும், அஞ்சாது எதிர்த்து, அவனையும் கொன்று, அவன் காவல்மரமாம் வேம்பையும் வெட்டி வீழ்த்தி, வீழ்ந்த அம் மரத் துண்டங்களை, அவன் உரிமை மகளிரின் கூந்தல் மயிரால் பிணித்து ஈர்த்துக் கொணர்ந் தான் அக் கோமகன்" எனவும்,

"தன்னைப் பெற்ற பெருமைக்குரியளாய நற்சோணை இறந்த பின்னர், அவள் படிமத்தைக் கங்கையில் நீராட்டக் கொண்டு சென்ற காலை, தன்னை எதிர்த்துப் போரிட்டுத் தாய்க்குத் தான் ஆற்றவேண்டிய கடனுக்குக் கேடு புரியத் துணிந்த ஆரிய அரசர் ஆயிரவரோடும் அக் கங்கை யாற்றங் கரையில் தான் ஒருவனாகவே நின்று போராடி வெற்றி கொண்டான் அவ்விழுமியோன்" எனவும்,

"சோணாட்டில், தன் தாயுடன் தோன்றிய மாமன் இறந்து போகவே, அவன் குலம் தழைக்க வந்த இளை யோனே சோழர் அரியணையில் அமர்வது முறையாகவும் அம் முறையொடு முரணிக் கலாம் விளைத்த அக்குலத்து அரசிளங்குமாரர் ஒன்பதின்மரையும் நேரிவாயிற் போரில் நிலைகுலையப் பண்ணி, அம்மான் சேயை அரியணையில் இருத்தி அகமகிழ்ந்தான் அவ்வடலேறு" எனவும்,

"கற்புக் கடம் பூண்ட பொற்புடைத் தெய்வமாம் கண்ணகி தேவியாருக்குச் சிலையாகும் சிறப்பு மிகு கல் கொள்வான் வேண்டி, வடபேரிமயப் பெருவரை யடைந்து, தொன்மை மிகு நன்மொழி பேசும் தென்தமிழர் திறம் அறியாது, ஆணவத்தால் அறிவிழந்து அவரை இழித்துப்



பேசிய ஆரிய அரசர் கனக விசயரைக், கங்கைக் கரைக்கண் போராடி வென்று, இமயத்திற் கொண்ட கல்லை அன்னார் தலைமீதே ஏற்றிக் கொணர்ந்தான் அக்கோமகன்" எனவும் புலவர் பாராட்டும் புகழ் உரை அனைத்தையும் சேரன் செங் குட்டுவனை அடையப் பண்ணியவன் அவன் பெரும் படைத் தலைவன் வில்லவன் கோதையே.

சேரன் செங்குட்டுவன் படைத் தலைவனாய்ப் பணிபுரிந்த வில்லவன் கோதை, செங்குட்டுவன் குலத்தினின்றும் வேறு பட்டவனல்லன். அவனும் அச் சேரர் குடியைச் சேர்ந்த வனே ஆவன். அவன் இயற் பெயராம் அத் தொகை மொழியுள் முன்மொழியாகிய வில்லவன் என்பது சேரரைக் குறிக்கும் காரணப் பெயர்கள் பல்வற்றுள் ஒன்றும் தகுதி யுடைத்து. வில் உருவைத் தம் கொடியில் பொறித்தும், தம் இலாஞ்சனையாக அமைத்தும் ஆள்பவர் என்பதே அது குறிக்கும் பொருளாம். "மேதக்க பொய்கை கவி கொண்டு **வில்லவனைப்** பாதத் தளை விட்ட பார்த்திபனும்" என்ற விக்கிரம சோழன் உலாத் தொடரில் வரும் வில்லவன் என்ற பெயர், சேரர் குடிவந்த கணைக்கால் இரும்பொறையைக் குறிப்பது காண்க. வில்லவன் என்ற முன் மொழியைப் போலவே, கோதை என்ற பின் மொழியும் சேரரைக் குறிப் பதாம். இது, குட்டுவன் கோதை, கோக்கோதை மார்பன், கோட்டம்பலத்துத் துஞ்சிய மாக்கோதை என அக் குலத்து வந்த காவலர்களும் பாவலர்களும் பெயரிட்டு அழைக்கப் பெறுவதால் உண்மையாதல் அறிக.

மலைவளம் காண மனைவியொடு சென்று பேரியாற்றங் கரைக்கண் இருந்த காலை, கோவலற் குற்றதும், அவனுக் குக் கேடுபுரிந்த கோமகற்குற்றதும் கூறக்கேட்ட குட்டு வன், "கோமகன் மாள, தன் உயிர் கொண்டு அவன் உயிர் தேடுவாள் போல் அவனோடு உயிர் நீத்த கோப்பெருந் தேவி யார், கணவன் கொலையுண்ணக் கடுஞ்சினம் கொண்டு,

'கோவலன் குற்றமிலன்; கோமகனே அது புரிந்தான்; ஆகவே அழித்தேன் மன்னனொடு மதுரையையும்; ஆகவே குற்றமிலேன் யான்' எனக் கூறியவாறே நம் நாடடைந்த நங்கை ஆகிய இவ்விருவருள் சிறந்தார் யார்?" எனத் தன் மனைவியாம் இளங்கோ வேண்மாளை வினவ, "கணவனோடு உயிர் துறந்த காரிகை கடவுட் பெருநிலை பெறுக; தனக்குற்ற துயரை நமக்கு உரைப்பாள் போல் நம் நாடடைந்த பத்தினிக் கடவுளுக்குக் கோயில் அமைத்து வழிபடுவோமாக" என்று அவள் விடையிறுக்க, அது கேட்ட அவன், அமைச்சர் கருத்தறியும் குறிப்பினனாய் அவரை நோக்க, "இமயத்தில் கொண்டு கங்கையில் நீராட்டப் பெறும் கல்லும் கடவுள் ஆதற்குப் பொருந்தும்; பொதிகையில் கொண்டு காவிரிப் புனலில் நீராட்டப் பெறும் கல்லும் கடவுள் ஆதற்குப் பொருந்தும்" என்று அவர்கள் கூறினாராக, "வட இமயப் பெருமலையில் கொள்வதை விடுத்துத் தென் தமிழகத்துப் பொதிகையில் கொள்வது, வாள் வீரர் வழி வந்த என்போல்வார்க்குப் பொருந்துவது அன்று; ஆகவே கண்ணகிச் சிலைக்கு ஆம் கல்லை இமயத்திற் கொள்ளவே துணிந்தேன்; இமயப் பேரரசன் இணங்காது மறுப்பானாயின் வஞ்சி சூடி வாள் எடுத்து வடநாடு புகுவோமாக!" என்று வஞ்சினம் வழங்கி வெஞ்சினம் கொண்ட காலை, அவன் அருகே வீற்றிருந்த வில்லவன் கோதை, "வாழ்க வேந்தே! வாழ்க நின் கொற்றம்!" என வாழ்த்துரை வழங்கி, "நின்னைப் பகைத்து நின்னோடு போரிட முன்வந்த சோழனும், பாண்டியனும் ஆகிய பேரரசர் இருவரும் தோற்றுப் புறங்காட்டி ஓடியது கொங்கு நாட்டகத்துப் போர்க்களத்தில் என்றாலும், அச் செய்தி எட்டுத் திசை அரசர்க்கும் அன்றே எட்டியுளது. கொங்கணரும், கலிங்கரும், கருநாடரும், கங்கரும், கட்டியரும், பங்களரும், ஆரியரும் ஆகிய பல்வேறு மொழி வழங்கும்



பன்னாட்டுப் படைகள், ஒரு சில தமிழ்ப் படையின் துணையோடு நின்னைத் தாக்கிய போர் ஒன்றில் உன் களிற்றுப்படை ஆற்றிய கடும் போர்க் காட்சி என் கண்களில் இன்றும் களி நடம் புரிகிறது. நின்னை ஈன்றாளும், இந் நாட்டின் முன்னாள் அரசமா தேவியும் ஆனாள் உடலை நீராட்டச் சென்ற நின்னைக் கங்கைக் கரைக்கண் எதிர்த்த ஆரிய அரசர் நூற்றுவரையும் நீ ஒருவனாகவே நின்று போராடி அழித்த நின் போர்த்திறம் கண்டு, கடுஞ்சினக் கூற்றுவனே அஞ்சி நடுங்கினான்; கடல் சூழ்ந்த இவ் வுலகம் அனைத்தையும் தமிழ் நாடாக்க நீ உளங்கொள்ளுவை ஆயின், அதை ஏற்க மறுப்பவர் இவ்வுலகில் ஒருவரும் இலர்; ஆகவே, நின் வேட்கையை விளக்கும் திருமுக ஓலையை வடநாட்டு வேந்தர் அனைவர்க்கும் இன்றே விடுப்போமாக!" என்று உரைத்த அவ்வுரை வளத்தில், வில்லவன் கோதையின் வீரத்தோடு, அவன் நாட்டுப் பற்றும், நடம் புரிவது அறிந்து நயக்க!

**"பல்யாண்டு வாழ்கநின் கொற்றம் ஈங்கு!" என**
**வில்லவன் கோதை வேந்தற்கு உரைக்கும்:**
**"நும்போல் வேந்தர் நும்மொடு இகலிக்**
**கொங்கர் செங்களத்துக் கொடுவரி கயற்கொடி**
**பகைப் புறத்துத் தந்தனராயினும், ஆங்கவை**
**திசைமுக வேழத்தின் செவியகம் புக்கன;**
**கொங்கணர், கலிங்கர், பல்வேல்கட்டியர்,**
**வடவாரியரொடு வண்தமிழ் மயக்கத்துள்**
**கடமலை வேட்டம் என்கட்புலம் பிரியாது;**
**கங்கைப் பேர்யாற்றுக் கடும்புனல் நீத்தம்**
**எங்கோமகளை ஆட்டிய அந்நாள்,**
**ஆரிய மன்னர் ஈரைஞ் ஞூற்றுவர்க்கு**
**ஒருநீ ஆகிய செருவெங்கோலம்**
**கண்விழித்துக் கண்டது கடுங்கண் கூற்றம்;**
**இமிழ்கடல் வேலையைத் தமிழ்நாடு ஆக்கிய**

இதுநீ கருதினை ஆயின் எதிர்ப்பர்
முதுநீர் உலகில் முழுவதும் இல்லை ;
இமய மால்வரைக்கு எங்கோன் செல்வது
கடவுள் எழுத ஓர் கற்கே ஆதலின்
வடதிசை மருங்கின் மன்னர்க்கு எல்லாம்
தென்தமிழ் நன்னாட்டுச் செழுவில் கயல்புலி
மண்தலை ஏற்ற வரைக ஈங்கு!'' என.

கங்கைப் பேராற்றங்கரையில் கனக விசயரை வெற்றி கொண்ட செங்குட்டுவன் போர் முடிவுற்றதும், வேதம் ஓதுவதும், வேள்வித் தீ ஓம்புவதும் ஆகிய ஆன்றவிந்தடங்கிய பெரியார்களை மட்டும் காக்கும் பெரும்பணி ஏற்ற படையாளர்க்குத் தலைவனும் தகுதியை வில்லவன் கோதைக்கே அளித்தான் என்ற செய்தியால், வில்லவன் கோதையின் போர் நெறி வழுவாப் பேராண்மை புலப்படுவது காண்க.

''மறக்களம் முடித்த வாய்வாள்குட்டுவன்
வடதிசை மருங்கின் மறைகாத்து ஓம்புநர்
தடவுத் தீ அவியாத் தண்பெரு வாழ்க்கை
காற்றா தாளரைப் போற்றிக் காமின் என
வில்லவன் கோதையொடு வென்று வினை முடித்த
பல்வேல் தானைப் படைபல ஏவி''

கனகவிசயரோடு தன் அருஞ்சிறையில் அடைபட்டுக் கிடக்கும் ஆரிய அரசர் அனைவரையும், கண்ணகிக்கு எடுக்கும் விழாக்காரணமாகச் சிறைவிடுக்கச் சிந்தை கொண்ட செங்குட்டுவன், அப்பணியைச் சிறக்க முடிக்க வல்லான் வில்லவன் கோதையே எனத்தேர்ந்து, அவனை அழைத்து, ''வில்லவ! வடநாட்டு வேந்தர்களை வெஞ்சிறையினின்றும் விடுதலை செய்க! விடுதலை செய்து, விழாமுடிந்த பின்னர் உம் நாட்டையும் உரிமை பெறுவீராக என உரைத்து



அவர்க்கு, நம் வஞ்சிமாநகரின் புறநகரத்துப் பூஞ்சோலைக்கிடையே அமைந்து கிடக்கும் வேள் ஆவிக்கோ மாளிகையில் இருக்கை அளித்தும், வேண்டுவ கொடுத்தும் பேணிப்புரப்பாயாக!'' என்று பணித்தான் எனில், வில்லவன் கோதை, பகைவர் உள்ளத்தில் பகைமை யுணர்வு உருவிழந்து போன நிலையில், அவரை உயிர் நண்பராகக் கொள்ளும் உயர்பேருள்ளம் கொண்ட உரவோன் என்பதில் ஐயம் உண்டோ?

''ஆரிய அரசரை அருஞ்சிறை நீக்கிப்
பேரிசை வஞ்சிமூதூர்ப் புறத்துத்
தாழ்நீர் வேலித் தண்மலர்ப் பூம்பொழில்
வேளாவிக்கோ மாளிகை காட்டி
நன்பெரு வேள்வி முடித்தன் பின்னுள்
தம்பெரு நெடுநகர்ச் சார்வதும் சொல்லி அம்
மன்னவர்க்கு ஏற்பன செய்க நீ என
வில்லவன் கோதையை விருப்புடன் ஏவி''

# 14. பரஞ்சோதியார்

சிவநேயச் செல்வர்களாய் அறுபான் மும்மை அடியார்களுள் ஒருவராம் தகுதியோடு தறுகண்மிக்க தளபதியாகவும் விளங்கிய தமிழ்ச்சான்றோர் ஒருவர், அருந் தமிழ் மூதாட்டி ஔவையாரால் 'சோறுடைத்து' எனப் பாராட்டிப் பெருமை செய்யப் பெற்ற சிறப்புமிகு சோணாட்டுச் செங்காட்டாங்குடி எனும் சீர்மிகு சிற்றூரில், ஆமாத்தியர் எனும் அருந் தமிழ்க் குடியில் பிறந்து, பரஞ்சோதி எனும் பிள்ளைத் திருநாமம் பெற்று வாழ்ந்துவந்தார். திருவெண்காட்டு நங்கை எனும் நல்லாளை மணந்து, மனையற வாழ்வு மேற்கொண்டு வாழ்ந்து, மனையாட்சியின் நன்கலமாம், ஒருவனைப் நன் மகன் பெற்று, அவனுக்குச் சீராளன் எனும் சீர்மிகு பெயர் சூட்டிப் பேரின்பம் கண்டும், 'இருந்தோம்பி இல்வாழ்வதெல்லாம் விருந்தோம்பி வேளாண்மை செய்தற் பொருட்டு' எனம் பொருள் மொழியைப் போன்னே போல் போற்றுபவராய், நாள்தோறும் நல்லார் ஒருவருக்கு விருந்தளித்தல்லது உண்ணு விழுமிய அறநெறியில் வழுவாமை மேற்கொண்டும் வாழ்ந்து வருங்கால், ஒரு நாள் வந்த விருந்தினர் பிள்ளைக் கறியல்லது பிறிது உண்ணும் வழக்குடையோம் அல்லம் யாம்; அதிலும், தாய் தந்தையர்க்குத் தனிமகனாய்த் தலைமகனாய்ப் பிறந்தானைத், தாய்பிடிக்கத் தந்தை அறுத்துப் பெற்ற பிள்ளைக் கறியே யாம் உண்பது; ஆகவே அது அளிக்க வேண்டுகிறோம்' என்று உரைத்தாராக, அத்தகுதி முற்றும்



உடையான் தம் மகன் சீராளன் ஒருவனே என உணர்ந்து விருந்தினர் வேண்டியவாறே, தம் ஆருயிர் அனைய அம்மகனை அறுத்து அறுசுவை உணவாக்கி அளித்து விருந்தோம்பிய செயற்கரும் செயல் செய்த சீலம் உடைமையால், "வாளாண் மகவு அரிந்து ஊட்ட வல்லேனல்லன்" எனப் பிறிதொரு பேரடியாரால் பெரிதும் பாராட்டத்தக்க பேராப் பெருநிலை பெற்றார் எனப், பெரிய புராணம் பாடிய சேக்கிழாரால் சிறுத்தொண்டன் எனப் பெயரிட்டு அழைக்கப்பெறும் அப்பரஞ்சோதியார், பல்லவர் படைத் தளபதியாய்ப் பணியேற்று ஆற்றிய போர்த் திறம், அம்மம்ம! அளப்பரும் பெருமைத்து அல்லவோ!

தமிழகத்தின் வடவெல்லையாம் வேங்கடத்தைத் தன்பாற் கொண்டது, உலக நிலைபேற்றினுக்கு ஊன்று கோலாவர் எனப்படும் சான்றோர்களை உடையது என்பனபோலும் எண்ணிலாச் சிறப்புகளைக் கொண்ட தொண்டை நாட்டை, இளந்திரையன் இருந்து ஆண்ட சங்ககாலத்திற்குப் பிறகு உரிமை கொண்டு ஆண்டுவந்தவர், பல்லவர் எனும் அரச மரபினராவர். அப்பல்லவப் பேரரசின் பெயரை உலகம் உள்ளளவும் நின்று நிலைக்கச் செய்யும் கற்கோயில்கள் காட்சி தரும் கடற்கரை நகருக்கு, மாமல்லபுரம் எனத் தன் பட்டப்பெயர்களுள் ஒன்றைச் சூட்டு முகத்தான், தானும் இறவாப் பெருநலை பெற்ற பெரியான், மாமன்னன் மகேந்திரனின் மகனும் நரசிம்மவர்மனுவன். மாமல்லபுரம் கண்டு மங்காப் புகழ் கொண்ட அவன், வாதாபி வென்றவன் என்ற வான்புகழ் கொள்ளப் பெருந்துணை புரிந்தவர் பரஞ்சோதி ஆவர்.

காஞ்சியைத் தலைநகராகக் கொண்ட தொண்டை நாட்டைப் பல்லவர் ஆண்டிருந்த காலத்தில், வேங்கடத்திற்கு அப்பால், துங்கபத்திரை ஆற்றினுக்கு வடக்கில் உள்ள பெருநிலப் பரப்பை, வாதாபியைத் தலைநகராகக் கொண்டு

சாளுக்கியர் என்பார் அரசாண்டிருந்தனர். அவருள் ஆற்றல் மிகுபெருவீரனாய் விளங்கிய இரண்டாம் புலிகேசி என்பான், சாளுக்கியப் பேரரசின் ஆணை, வேங்கடத்தையும் கடந்து, தென் தமிழகத்தும் சென்று உலாவர உளங்கொண்டான். அப்பேராசை பிடர்பிடித்து உந்தப் பெரும்படையோடு தமிழகம் புகுந்து காவிரிக்கரை வரையும் சென்று பாடிகொண்ட தன்னைத் தடுப்பவர் எவரும் தமிழகத்து இலர் எனும் செருக்கால் செம்மாந்து தாயகம் திரும்பும் நிலையில், காலத்தை எதிர்நோக்கிக் காஞ்சிக்கோட்டைக்குள் காத்துக் கிடந்த பல்லவர் குலத்து மன்னர் மன்னன் மகேந்திரனின் மாபெரும் படை திடுமெனத் தாக்கித் தன்னை வெற்றிகொண்டமைக்கு வெட்கி, அவ்வெம்பழியைத் தீர்த்துக் கொள்ளும் வேட்கையோடும், வெஞ்சினத்தோடும் அதற்காம் வாய்ப்புடைக் காலத்தை எதிர் நோக்கி வாதாபியில் புலிகேசி வீற்றிருந்த காலை, காஞ்சி அரியணையில் அமர்ந்தான் நரசிம்மவர்மன்.

மன்னன் மகேந்திரன் மறைவால் மக்கள் மாளாத்துயருற்றிருக்கும் காலமே, தான் கருதியதை முடித்துக் கொள்ளற்காம் காலமாம் எனக்கருதினான் சாளுக்கியப் புலிகேசி. மேலும் அரியணையில் அமர்ந்திருக்கும் நரசிம்மவர்மன் நனிமிக இளையன்; போர்க்களம் புகுந்தறியாதவன்; அவனால் சாளுக்கியப் பெரும்படையொடு சமர்புரிவது இயலாது. ஆகவே வெற்றி எளிதில் வாய்க்கும் என்ற எண்ணம் ஒருபால் உருவெடுக்கும் அதே நிலையில், பல்லவர், தன்பெரும்படை ஆற்றலை அறிந்தவர்; அடிபட்ட புலி அடங்கியிராது, இன்று இல்லையாயினும் என்றேனும் ஒரு நாள் வீறுகொண்டு வெளிப்பட்டு மீண்டும் தாக்கியே தீரும் என்ற மன இயல் உணர்ந்தவர்; அதனால் வடவர் வரவை எதிர்நோக்கி வேண்டும் விழிப்புணர்ச்சியோடே இருப்பர் ஆதலின் வெற்றி எளிதில் வாய்த்து விடாது; வெஞ்சமர்க்



குப் பின்னரே அது தன்னைத் தஞ்சம் அடையும் என்ற உணர்வும் ஒருபால் உருவெடுக்கவே, புலிகேசி முன்னையினும் பெரும்படையைத் திரட்டவும், முன்னைய போர் முறையோடு முற்றிலும் வேறுபட்ட புதிய போர் முறையினை மேற்கொள்ளவும் துணிந்து அதற்கேற்பச் செயல்படத் தொடங்கினான்.

சாளுக்கிய நாட்டவரின் இச் செயல் முறைத் திட்டங்களை ஒற்றர்வந்துஉரைக்கச் செவிமடுத்தான் நரசிம்மவர்மன். "புலிகேசியின் முன்னைய படையெடுப்பால் பல்லவநாட்டு மக்கள் பட்ட தொல்லை இன்னமும் தீர்ந்தபாடில்லை; அதை அடுத்து அரசன் இறந்த அவலம், அவரை மேலும் அலைக்கழித்துக் கொண்டுள்ளது. இந்த நிலையில் புலிகேசி படையொடு புகுந்தால் பல்லவப் பேரரசு இல்லாதுபோவதல்லது நின்று நிலைபெறுவது இறப்பவும் இயலாதே! அந்தோ! பல்லோர் போற்றிக் காத்த இப்பல்லவ அரசு, என்னோடு மாண்டு மறைந்து விடுமே! அம் மாபெரும் பழி வந்து என்னைப் பற்றி விடாவாறு நற்றுணை புரியவல்லார் ஒருவரும் இலரோ" என்று எண்ணி எண்ணி ஏங்கும் அம் மன்னன் மகன்பால், அமைச்சர்கள், பரஞ்சோதியாரின் பெருமை பேராண்மைகளை விளங்க உரைத்து, "அவர் வந்தால் பல்லவ நாடு பகைவரைப் பாழ்செய்யும் பேராற்றல் பெற்று விடும். ஆகவே அவரை அழைக்க ஆவன புரிவாயாக" என்று வேண்டினர்.

அறிவாற்றல் மிக்க அமைச்சர்கள் கூறியன கேட்ட அப்போதே, பல்லவப் பேரரசனின் வேண்டுகோள் ஏற்ற திருவோலை, பரஞ்சோதியாரைத் தேடிச் சென்றடைந்தது; அரசன் வேண்டுகோளை அறிந்தார். போரால் கெட்டழியப் போவது தொண்டை நாடு; சோணாட்டினராகிய தமக்கு அதனால் வரக்கூடிய கேடு எதுவும் இல்லை. ஆகவே வேண்டு

கோலை ஏற்று வீணே போர்த்தொல்லைகளைத் தாங்க
வேண்டுவதில்லை என்று எண்ணினார் அல்லர் பரஞ்சோதி
யார்; தொண்டைநாடு தமிழ் நாட்டின் ஒருபகுதி. ஆகவே
அந்நாட்டின் அழிவு நம் நாட்டின் அழிவே என்று எண்ணி
னார்; மேலும் புலிகேசி மண்ணாசை பிடித்தலையும் பேய
னவன்; இன்று தொண்டைநாட்டைக் கொண்டால் நாளை
காவேரி நாட்டில் கா லூன்றவும் கருதுவன்; ஆகவே, அவனை
வேங்கடத்திற்கு வடக்கிலேயே தடுத்து நிறுத்துதல் வேண்
டும் என்றும் விரும்பினார். இவற்றிற் கெல்லாம் மேலாக
படைத்தலைமையேற்க இன்று நம்மை அழைத்திருப்பவன்
மனத்தெளிவு இன்மையால் தொடக்கத்தில் சமணசமயம்
மேற்கொண்டிருந்தாலும் நாவரசர் நற்றுணையால், யாம்
விரும்பும் சைவ சமயச் சார்புடையனாகி, அது தழைக்க
ஆவன பலவும் ஆர்வத்தோடு அமைத்த அரசர்பெருமானின்
அருமந்த மகனவன்; ஆகவே அவனை அது கருதியாவது
காப்பது தம் கடன் என்ற உணர்வு மிகவே காஞ்சிநோக்கிக்
காற்றென விரைந்தார்.

பல்லவப் படைத்தலைமையினை ஏற்றுக்கொண்ட பரஞ்
சோதியார் தமிழகத்தின் மீது புலிகேசிமேற்கொண்ட முதற்
படையெடுப்பின் போது இருதிறத்தவர்பாலும் இருந்த
படை அளவு ஆற்றல்களையும், அக்கால அரசியல் சூழ்நிலை
களையும், அப்போது மேற்கொண்ட போர்முறைகளையும்
ஒன்றுவிடாது கேட்டறிந்து அவற்றை இன்றைய சூழ்நிலைக
ளோடு ஒருங்கு நிறுத்தி ஒப்புநோக்கித் தம்போர்த் திட்டங்
களை வகுத்துக்கொண்டு புலிகேசியின் வரவை எதிர்நோக்
கிக் காஞ்சிக் கோட்டையில் காத்திருந்தார்.

அந்நிலையில் புலிகேசி தன் சாளுக்கியப் படையோடு
வாதாபியை விடுத்துப் புறப்பட்டு, துங்கபத்திரை ஆற்றைக்
கடந்து வேங்கடமலைக்கு இப்பாலும் வந்துவிட்டான். பரஞ்
சோதியார் அப்போதும் போர்க்கொடி உயர்த்தினாரல்லர்



சாளுக்கியப் படை தொண்டை நாட்டுத் தலைநகரை அணுகி
விட்டது; அப்போதும் அவர் போர் தொடுத்துப் புறப்பட்
டார் அல்லர். பல்லவப் படைத்தளபதி பரஞ்சோதியாரின்
இப்போக்கு பல்லவ நாட்டவர்க்கு மட்டும் அல்லாமல்
பகைவர்க்கும் புதுமையாகப் புலப்பட்டது. பாஞ்சோதியா
ரின் போர் முறைகளைப் புரிந்து கொள்ள மாட்டாத புலி
கேசி பல்லவர், இம்முறையும் பழைய போர்முறைகளையே
நம்பியுள்ளனர்; ஆகவே படையொடு புகும்போது தன்னை
எதிர்த்துப் போரிடார்; வென்று மீளும்போதே பின்வந்து
தாக்குவர் என்று எண்ணி விட்டான். ஆகவே தானும் தன்
படையும் இப்போது அத்துணை விழிப்புணர்ச்சி மேற்
கொள்ள வேண்டுவதில்லை; அதை இப்போது மேற்கொண்
டால் இப்போது தளர்ச்சி நேரும் என்ற கருத்துடை
யனாகிக் காஞ்சிக் கோட்டைக் காவலன் குறித்துச் சிறிதும்
கவலை கொள்ளாது வந்துகொண்டிருந்தான்.

தம் போர்த் திட்டத்தைப் புரிந்து கொள்ளத் தவறி
விட்டான் புலிகேசி என்பதையும், சாளுக்கியப் படைக்கு
இனி துணைப்படை கிடைப்பது இயலாது; வென்று தூரத்
தினால் இருந்து இளைப்பாற இடமும், உண்டு பசியாற
உணவும் கிடையா என்பதையும் உணர்ந்து கொண்டார்
பரஞ்சோதியார். அவ்வளவே, பல்லவப்பெரும்படை,காஞ்சிக்
கோட்டையைத் திறந்து கொண்டு வெளிப்பட்டு, விரைந்து
சென்று, சாளுக்கியரை வளைத்துக் கொண்டது. காஞ்சி
மாநகர்க்குப் பத்து அல்லது பதினைந்து கல் தொலைவில்
உள்ள தானசூரமாரம் எனும் ஊர் வரையும் வந்து விட்ட
நிலையிலும் வெளிப்படாத பல்லவப் படை, இனி வெளிப்
படாது என்ற எண்ணத்தால் ஏமாற்றப் பட்ட நிலையில்,
பல்லவர் எதிர்பாராது வந்து எதிர்க்கவே சாளுக்கியன்
செயல் இழந்துவிட்டான். பரஞ்சோதியாரின் புதிய போர்
முறைத் திட்டத்தால், சாளுக்கியப் பெரும் படை சிதறுண்டு

போயிற்று. காஞ்சி நாட்டு அரியணைமீது ஆசை கொண்டு வந்த புலிகேசி, வாதபி நோக்கி விரையத் தொடங்கினன்; சூரமாரப் போர்க்களத்தில்,வெற்றித் திருமகள், பரஞ்சோதியார்க்கு வாகைமாலைசூட்டி வாழ்த்துக் கூறினள். மகேந்திரன் பகைவன் படை தமிழகத்து மண்ணில் உலா வரவாவது இடங்கொடுத்தான்; ஆனல், பரஞ்சோதியார், பகைவர் தமிழகத்து மண்ணில் கால்வைக்கவும் இடங்கொடுத்தாரல்லர்; என்னே இவர்தம் பேராண்மை! என மக்கள் வியந்து பாராட்டலாயினர்.

சூரமாரப் போர்க்களத்தில் பெற்ற வெற்றியொன்றே பரஞ்சோதியாரின் போர்த்திறனைப் பாராட்டப் போதியதாகும். ஆனல், அவர் ஆற்றலும், ஆண்மையும், அவரை அவ் வெற்றியோடு அமைதிகொள்ளவிட்டில; மேலும், தோற்றேடும் பகைவனை மேலும் துரத்துவது அறப்போர்முறைக்கு முரணும், பேராண்மைக்கு இழுக்காம் என்பது உண்மையே என்றாலும், புலிகேசி பேராசைபிடித்தவன்; முன்னம் ஒரு முறை தோல்வி கண்டும், தமிழகத்து ஆட்சி ஆசையைக் கைவிட்டானல்லன்; அவ்வாசை அவன் உள்ளத்தில்இருக்கும் வரை அவன் படையெடுப்பு ஓயாது. ஆகவே அவ்வாசை அவன் உள்ளத்தைவிட்டு அறவே நீங்க வழி காணுதல் வேண்டும்;பல்லவநாட்டவர் எத்துணைப்பெருவீரர்;அவர்மீது போர் தொடுப்பது எத்துணைப்பேதைமை என்பதை அவன் நாட்டுமக்கள் நேரில் உணர்ந்தால் அல்லது அதற்கு வழி பிறக்காது; ஆகவே அவர்க்கு அவ்வுணர்வு ஊட்டுவான் வேண்டியாவது காஞ்சிப்படை, வாதாபியை வளைத்தழித்தல் வேண்டும் என்று விரும்பினர் பரஞ்சோதியார். படைத்தலைவர் வேட்கை அதுவாயின், அவ்வாறே செல்க என விடைகொடுத்தான் வேந்தன். உடனே வடநாடு நோக்கி விரைந்தது பல்லவப் பெரும்படை.



இடைவழியில், மணிமங்கலம், பரியலம் எனும் இடங்களில் இருந்து இளைப்பாற எண்ணிய வாதாபிப்படையை வளைத்து அழித்துத் துரத்திய காஞ்சிப்படை, சாளுக்கிய எல்லைக்குள் புகுந்ததும், வழியிடை ஊர்களைப் பாழ்செய்து கொண்டே விரைந்து, வாதபி நகருள் புகுந்துவிட்டது. சாளுக்கியத்தலைநகருள் புகுந்த காஞ்சிப்படை தன்னைத் தடுப்பார் அற்றநிலையில், மாடமாளிகைகளையெல்லாம் இடித்தும் எரியூட்டியும் மண்மேடாக்கிற்று; உண்ணுநீர் நிலைகளிலும் உணவுதரு விளைபுலங்களிலும் களிறுகளையும்,குதிரைகளையும், போக்கிப் பாழ் செய்தது. பொன்னையும், நவமணிகளையும் போர்வீரர்கள் கொள்ளைகொண்டனர். பல்லவத் தலைநகரைப் பாழ்செய்து பேரின்பம் காணத்துடித்த சாளுக்கியர், தம்தலைநகர், தம்கண்முன்னரே பாழாவதுகண்டு, கண்ணீர் சொரிந்துகலங்குவது அவர் காலத்தோடு நின்றுவிடக்கூடாது; அது தொடர்ந்து நிகழ்தல் வேண்டும்; அவர்க்குப் பின்வரும் பற்பல தலைமுறையினரும் எண்ணி எண்ணி இரங்குதல் வேண்டும்; ஆகவே அன்றைய அழிவோடு, தம் வெற்றியையும் நினைவூட்டும் நினைவுச்சின்னம் ஒன்றை அவ்வூர் நடுவண் நாட்டவிரும்பினர் பரஞ்சோதியார். அவ்வாறே, அவ்வூர் நடுவண் அமைந்து கிடக்கும் தக்கிணஈரப்பன் கோயிலுக்கு அணித்தாக வெற்றித்தூண் ஒன்றை வானளாவ நாட்டிவிட்டு, அவ்வெற்றிக்களிப்போடு காஞ்சி வந்தடைந்தார், பல்லவத் தளபதியார் பரஞ்சோதியார்.

வாதாபி வெற்றிக்குப் பிறகு நரசிம்மவர்மன், "வாதாபி கொண்டவன்" என வழங்கப்பெற்றான் என்றாலும், அவ் வெற்றிக்குரியார் பரஞ்சோதியாரே என்பதை அறிந்த சேக்கிழார்,

"மன்னவர்க்குத் தண்டுபோய் வடபுலத்து வாதாபித்
தொன்னகரம் துகளாகத் துளைநெடுங்கை வரையுகைத்தும்

**பன்மணியும் நிதிக்குவையும் பகட்டினமும் பரிந்தொகையும்**
**இன்னன எண்ணிலகவர்ந்தே இகலரசன் முன்கொணர்ந்தான்"**

என, வாதாபி வெற்றியைப் பரஞ்சோதியார் மீது ஏற்றிப் பாமாலை சூட்டிப் பாராட்டுவாராயினர். வாதாபி வென்று வான்புகழ் கொண்ட பரஞ்சோதி வாழ்க!

# 15. கருணாகரன்

கரிகாற் பெருவளத்தானின் ஆண்மை ஆற்றல்களால்,
கடல்கடந்த நாட்டவரும் தன்புகழ் பாடிப் பணிந்தொழு
கும் பேரரசு பொருந்தியதாகவும், அவன் அறிவாற்றல்க
ளால் சீர்வளம் மிக்க நெற்களஞ்சியமாகவும், நவமணியும்,
நால்வகைப் பொன்னும் மலிந்த பெருவாணிக நிலையமாக
வும் விளங்கிய சோழநாடு, கடைச்சங்க காலத்திற்குப்
பிறகு, களப்பிரர் எனும் நாடோடிக் கொள்ளைக் கூட்டத்
தவரால் அலைப்புண்டு அரசிழந்து இருண்டுவிட்டது.
இடைக் காலத்தில் இடம்பெற்ற அவ் இடர்ப்பாட்டினைப்
போக்கி அதன் பழம்பெருமையை நிலைநாட்டிய விஜயா
லயன் வழிவந்த சோழர்குலப் பேரரசர்களுள் குலோத்
துங்கனும் ஒருவனாவன்.

சோழர் குலத்துக் குடி முறைக்கு உரியவனாகாது,
கீழைச் சாளுக்கிய கோமனுக்குச் சோழர்குலக் கோமகள்
வயிற்றில் வந்து பிறந்தவனாகவும், நாடாள்வார்க்கு வேண்
டும் நால்வேறு நலங்களையும் நனிமிகவுடைமையால், அர
சிழந்து அல்லல் உற்ற சோணாட்டு மக்களால் சோழர்குலக்
கோமகனாக விரும்பி வரவேற்கப்பட்டான் குலோத்துங்கன்
எனவும், தன் அரசிழந்து தம்மைச் சரண் அடைந்த கடா
ரத்து அரசனுக்குத் துணைபுரிவான் வேண்டிக் கடாரம்
நோக்கிச் சோழர் விடுத்த கடற்படைக்குத் தன் இளங்
கோப்பருவத்திலேயே தலைமை தாங்கிக் கடல்கடந்து

சென்று வென்று, கருதிவந்ததை முடித்துத், தன் புகழைக் கடல்கடந்த நாட்டவரும் கண்டு பாராட்டும் நெடுநிலை பெற்றான் குலோத்துங்கன் எனவும், மக்கள் பாராட்டும் அவன் மங்காப் புகழ் பலவாம் என்றாலும், குலோத்துங்கன் கொற்றத்தைப் பைந்தமிழ் இலக்கியங்கள் உள்ளளவும் நாட்டவர் நினைவில் நிலைத்திருக்கப் பண்ணிய பெரு வெற்றி, அவன் வடகலிங்க நாட்டில் பெற்ற வெற்றியே யாகும். அவ்வெற்றியை அவனுக்குத் தேடித் தந்தவனே நம் கருணாகரன்.

பல்லவப் பேரரசு அழிந்துபோன நிலையில், அம் மரபில் வந்த அரசிளங் குமரர்கள், அக்காலைப் பேரரசாய் விளங்கிய சோழர் பேரரசில், அரசியல் நெறியுணர்த்தும் அமைச்சர்களாகவும், களம்புகுந்து வெற்றிதரும் படைத் தலைவர்களாகவும் பணிபுரிந்து வந்தார்கள். அவ்வாறு பணிபுரிந்து வந்தாருள் கருணாகரனும் ஒருவனாவன். பல்லவர் குலத்தில் வந்தவனாதலின் கருணாகரத் தொண்டைமான் எனவும், சோழநாட்டில் உள்ளதான குலோத்துங்கச் சோழவளநாட்டைச் சேர்ந்த திருநறையூர் நாட்டு வண்டை நகரை வாழிடமாக் கொண்டமையால் வண்டையர்கோ எனவும் வழங்கப்பெறும் கருணாகரன், குலோத்துங்கன் படைத் தலைவனாகப் பணிபுரிந்தகாலை, ஒருநாள், சோணாட்டின் தலைமைசால் தலைநகரம் தஞ்சைமா நகரைவிடுத்து, தன் ஆணையே நிலவும் தொண்டை நாட்டின் தொன்மைசால் தலைநகராம் காஞ்சிமா நகர்புக்குச் சிலநாள் வாழக் கருதினான்; அவ்வாறு ஆங்குச் சென்றிருந்தகாலை, அமைச்சர் ஆன்றோர் உள்ளிட்டாரோடு பேரத்தாணிக்கண் அமர்ந்து, குறை வேண்டியும், முறைவேண்டியும் வருவார் அனைவர்க்கும் காட்சி அளித்துக் களிப்பூட்டிய காவலன் குலோத்துங்கன் முன்னர், சோழர் ஆணைக்கு அடங்கிய பெருநில வேந்தர்களும், குறுநில மன்னர்களும், மண்டலத்துத்



தலைவர்களும் ஒருவர்பின் ஒருவராக, வரிசை வரிசையாக அரசவை புகுந்து, மணி ஆரங்களும், முத்தாரங்களும், நவமணி கோத்த ஏகவடங்களும், பொன் அணிகளும், மணிகள் பொன் முடிகளும், பொற் பெட்டகங்களும், மணிகள் இழைத்த மகரக் குழைகளும், நவமணிக் குவியல்களும், நால்வேறு பொன் வகைகளும், கணக்கிலாக் களிறுகளும், கடல் அலையெனத் தாவிக் காற்றெனப் பாயும் குதிரைகளும், ஒட்டகங்களும், உயர்சாதிப் பிடியானைகளும் ஆகிய பற்பலவகைத் திறைப் பொருள்களைத் தந்து சென்றனர். அது முடிந்த பின்னர், குலோத்துங்கன், அரசவையில் அமர்ந்திருக்கும் திருமந்திர ஓலைநாயகத்தை நோக்கித் "திறைதரா அரசர் எவரேனும் உளரோ?" என்று வினவ, ஓலைநாயகம், அரசனைப் பணிந்து வாழ்த்திய பின்னர், "வேந்தே! வட கலிங்க வேந்தன், அனந்தவர்மன் ஈராண்டுகளாகத் திறை தந்திலன்" என்றார்.

ஓலைநாயகம் உரைத்த விடை கேட்டுக் கடுஞ்சினம் கொண்ட குலோத்துங்கன், அனந்தவர்மனை அடிமை கொள்ளத் துடித்தான் என்றாலும், வடகலிங்கம் வலிய மலையரண்களால் சூழப்பெற்றது; கலிங்க நாட்டுக் களிற்றுப் படை களப் போர் புரிவதில் நிகர் அற்றது என்று அறிந்திருந்தமையால் வடகலிங்கம் புகுந்து வெற்றிபெற்று வாகை சூடிவர வல்லாரைத் தேர்ந்து வினைமுடிக்க வேண்டும் என்பதையும் உணர்ந்து அப்பணி மேற்கொண்டான். தன் படையில் பணிபுரிவார் பலர் என்றாலும், அவர்களுள் பெரும்படையை நெடுந்தொலைவு கொண்டுசென்று, புதிய நாட்டில் பேரரண்களை அழித்து அமர்புரிந்து ஆற்றலை நிலைநாட்ட வல்லவன், கருணாகரத் தொண்டைமான் ஒருவனே என அறிந்து, அவனை அழைத்து, வடகலிங்கப் போர்ப்படைத் தளபதியாம் பெருநிலை அளித்து, "கருணாகரா! கலிங்க நாட்டு மலையரண்கள் பொடிபடும்படி போர்புரிய

வல்ல பெரும் படையோடு சென்று, வெற்றிகண்டு, அந்நாட்டு வெங்களிறுகளை வரிசை வரிசையாகக் கைக்கொண்டு வருக!'' என வாழ்த்தி விடைகொடுத்தான். அவ்வளவே, அடுத்தகணமே, போர் முரசு முழங்கச் சோழர் பெரும் படைக்குத் தலைமைதாங்கி வடநாடு நோக்கிப் புறப்பட்டு விட்டான் கருணாகரத் தொண்டைமான். புதிய நாட்டில், போகும் வழியறிந்து போதற்குத் துணைபுரியும் பகற் போதில் விரைந்து கடந்தும், இராப் போதில் இருந்து களை தீர்ந்தும் சென்ற சோழர் சேனை, பாலாறு, குசைத்தலையாறு, பொன்முகியாறு, கொல்லியாறு, வடபெண்ணையாறு, மண்ணாறு, குன்றியாறு, கிருஷ்ணைப் பேராறு, கோதாவரியாறு, பம்பையாறு, கோதமையாறு, கோடிபலியாறு என்ற சிற்றாறுகளையும் பேராறுகளையும் முறையே கடந்து கலிங்கம் புகுந்தது.

சோழர் படை கலிங்கம் புக்கதும், கலிங்கர்கோன் அனந்தவர்மனை அமரில் வெற்றி கொள்வதற்கு முன்னர், கலிங்க நாட்டு மக்கள் உள்ளத்தில் கலக்கத்தை எழுப்புவது இன்றியமையாதது; அது வெற்றியைப் பெரிதும் எளிதாக்கிவிடும் என்ற போர் நுணுக்கம் உணர்ந்த தளபதி வண்டையர்கோ, வழியிடை ஊர்களைக் கொள்ளையிடவும், கொள்ளி வைக்கவும் பணித்தான்; சோழர் படை வீரர், தளபதியின் கட்டளையைத் தட்டாது செய்து முடித்தனர். அவ்வளவே, கலிங்க நாட்டு மக்கள் நிலைகுலைந்து, உடல்பதற, உடைநெகிழ ஓடி, அனந்தவர்மன் அடிபணிந்து, "அரசே! சோழர் பேரரசிற்குத் தரவேண்டிய திறையைத் தர மறுப்பது தகாது எனக் கூறிய எம் சொற்களை அன்று கேட்டிலை; அதனால் சினங்கொண்ட சோழர் படை இன்று நம் கலிங்கத்தில் காலூன்றிக் கொண்டது. அதன் வரவால் மதில்கள் இடிகின்றன; பதிகள் எரிகின்றன; எங்கும் புகை மண்டுகிறது; மலர்ச் சோலைகள் மடிகின்றன; குடிமக்கள்



காவல் மிக்க இடம் தேடி ஓடி அலைகின்றனர்; கருணாகரன் உடன் வந்திருக்கும் சோழர் படை கடல்போல் மேலும் மேலும் கலிங்கத்துள் புகுகின்றது. கடல் பொங்கி எழுந்தக்கால் புகல் இடம் காணல் இயலுமோ? கடல்போலும், கருணாகரன் பெரும்படை பொங்கி எழுந்தால், கலிங்க நாட்டவர்க்கும் புகலிடம் எங்கே காண்பது? என்னே நம் அறியாமை?'' என உரை குழற முறையிட்டனர்.

குடிமக்கள் முறையீட்டைக் கேட்டும், அவர் தம் அவல நிலையைக் கண்டும் அனந்தவன்மன், பணிந்து திறை தரும் அறிவு வரப் பெற்றானல்லன். "கான் அரணும், மலை அரணும் அமைந்தது கலிங்கநாடு; அதனால் அழிக்கலாகா ஆற்றல் வாய்ந்தது என்பதை அறிந்து கொள்ளமாட்டாமையால் அழிவுதேடிப் புகுந்துளது சோழர் படை; ஆகவே அதன் வரவு கண்டு அஞ்சுவது ஒழிக!''—அவர்க்கு ஆறுதல் உரைத்துவிட்டு, அமைச்சர் குழாத்தை நோக்கி, "சோழர் குலப் பேரரசன் குலோத்துங்கனையே பணிய மறுக்கும் யான், அவன் படைத்தலைவனுக்குப் பணிந்து விடுவனோ? அத்துணை எளியனோ இவ்வனந்தவன்மன்?'' எனச் சோழர் படைத் தளபதியாம் கருணாகரனை இகழ்ந்து கூறி எள்ளி நகையாடினான்.

படையாலும் பரப்பாலும் சிறந்து விளங்கும் சோழர் பேரரசின் பெருமையினையும், உள்ளங்கை அளவு உருவு உடையதான கலிங்கத்தின் சிறுமையையும், சோழர் படைக்குத் தலைமை யேற்று வந்திருக்கும் தமிழர் பெரும் தளபதியாம் வண்டையர்கோ கருணாகரத் தொண்டைமானின் தோள் வன்மையினையும் அறிந்து கொள்ளும் அறிவின்றி அரசன் உரைத்தது கேட்ட அமைச்சர் தலைவர் எங்கராயர், அனந்தவன்மனுக்கு அறிவுரை கூறுவான் எழுந்து, "வேந்தே! கலிங்கம் புகுந்து பாடிகொண்டிருக்கும் குலோத்துங்கன்

பெரும் படைத் தலைவனும் கருணாகரனின் ஆற்றலை நீ அறியாய். பாண்டியர் ஐவர் அழிவுற்றதும், படைத் தலைவன் கருணாகரனால் அல்லது பேரரசன் குலோத்துங்கனால் அன்று; சோழர் படைத் தலைவனால் சேரர் பட்ட பாட்டினை நீ அறியாயோ? நவிலையில் ஆயிரம் ஆயிரம் களிறுகளைக் கைப்பற்றியதும் கருணாகரனே; அளத்தி அழிவு கண்டானும் அவனே; வத்த நாட்டை வென்று அடிமை கொண்டதும் அவன் கை வாளே. சோழர் படைத் தலைவனால் தம் அரசிழந்து அல்லலுறும் அரசர்களை எண்ணிக் கூறல் இயலுமோ? உண்மை இதுவாகவே, வேந்தன் வந்திலன்; படைத் தளபதியே வந்துளான் எனப் பழிப்பது பொருந்தாது. கருணாகரன் கைவன்மையை இன்று பழிக்கும் நீ, நாளை அவன் எத்தகையான் என்பதைக் களப் போர்க்காலத்தில் நீயே அறிந்து கொள்வாய்; ஆகவே, வீணே வெறி பிடித்து அலையாது தவறிய திறைகளைத் தந்து தாள் பணிந்து போவதே நன்று" என அரசியல் முறைகளை அடைவே எடுத்து இயம்பினான்.

அமைச்சர் கூறிய அறிவுரைகளை அனந்தவன்மன் ஏற்றுக் கொண்டானல்லன். மாறாக அவர் அறிவுரை கூறக், கூற அவன் சினம் அளவிறந்து பெருகிற்று; அதனால், "அமைச்சரவர்களே! உம்முடைய பேதைமையினால், எம்முடைய தோள் வலியும், வாள் வலியும் அறியாத பிறர் போல் இவ்வளவும் உரைத்து முடித்தீர்; பழியுரை புகன்று பிழை புரிந்து விட்டீர்; எம் நலன் குறித்துக் கூறுவதாக நீவிர் எண்ணிக் கூறும் உம் அறிவுரை, எம் பெருமைக்கு மாசூட்டுவதாக அமைவது மாண்புடைத்தன்று; ஆகவே வேண்டாம் உம் அறிவுரை" என அவர் வாயடைத்து விட்டு, கலிங்கக் கோட்டையின் காவலனை அழைத்து, "அரணகத்துப் படைகளை இப்போதே போர்க்களம் புகவிடுக! நாடெங்கும் போர்ப்பறை முழங்கட்டும்; நால்வகைப் படைவீரரும்



நண்ணுக போர்க்களம்!" என ஆணையிட்டு அமர் மேற்கொண்டான்.

கலிங்கப் படை களம் நோக்கிப் புறப்பட்டு விட்டது என்பதை அறிந்து கொண்டதும், கருணாகரன், அப்படையை விரைந்து சென்று வீழ்த்துமாறு தன் படைக்கு ஆணை பிறப்பித்தான். அவ்வளவே, இரு பெரும் கடல்கள் எதிர் எதிர் நின்று போரிட்டாற் போல், இரு திறப் படைகளும் ஒன்றையொன்று தாக்கிக் கடும் போர் புரிந்தன. "படைக் கலங்களை எடுங்கள்; பரிகளைப் பாய விடுங்கள்; களிறுகளைக் களம் நோக்கிப் போக விடுங்கள்" என்பன போலும் ஒலிகள், கடல் ஒலி போல் ஓவென ஒலித்தன. வில்நாணை விரைந்து இழுத்து விடுந்தோறும் எழும் ஒலியும், வீரர்களின் ஆரவாரப் பேரொலியும் காதுகளைச் செவிடாக்கின; காலைப் போது கடந்து மாலைப் போது நெருங்க நெருங்க, கலிங்க வீரர்களிடையே சோர்வு தலை தூக்கிற்று. அந்நிலையில் கருணாகரனும் கலம் ஏந்திக் களம் புகவே கலிங்கப் படை அறவே அழிவுற்றுப் போக, எஞ்சிய சிலரும் பிழைத்தோடத் தலைப்பட்டனர்.

உயிர் பிழைத்தால் போதும் எனும் உணர்வுடையராகிப் புதரினிடையே புகுந்து புகுந்து ஓடியபோது, அப்புதரிடைச் சிக்குண்டு அரை ஆடை கிழிந்துபோகத், தலைமயிர் பறிப்புண்டு போக மழுங்கிய தலையினராய் வெளிப்பட்டு, "அமணர் யாம்; அடித்துக் அலைக்காதீர் எம்மை" எனக் கூறிப் பிழைத்தோடிப் போனார்கள் சில கலிங்கர். ஒடிந்து விழுந்து உருக்குலைந்து போன வில்லின் நாணை, மார்பில் முந்நூல் போல் அணிந்து கொண்டு, "அந்தணர் யாம்; கங்கை ஆடப் போந்து இவண் அகப்பட்டுக் கொண்டேம்" என உரைத்து உயிர் பிழைத்தார் ஒரு சிலர். குருதிக் கறையேற்றுக் காவி நிறம் பெற்ற கொடிச் சீலைகளால் தம் உடலை

மறைத்துக் கொண்டு, "சாக்கியச் சந்நியாசிகள் யாம்; எம் உடை அது உணர்த்துவது காண்மின்" எனக் கூறிய வாறே களம் விட்டு வெளியேறினர் சில கலிங்கர். களத்தில் வீழ்ந்து மடிந்த யானைகளின் மணிகளைக் கையிற் கொண்டு, "பாடிப் பிழைக்கும் பாணர் யாம்; களக் கொடுமை கண்டு கலங்கி நிற்கின்றோம்" எனக் கூறிப் பிழைத்த கலிங் கர்க்கோ கணக்கில. கலிங்கப் படையின் கதி இதுவாகவே அவர் காவலன் அனந்தவன்மன், சோணாட்டுப் படைகள் புகமாட்டாப் புகலிடம் சென்று ஒளிந்துகொண்டான்.

கலிங்க நாட்டவர் களத்தில் விட்டுச் சென்ற வேழத் திரளையும், விரைந்து பாயும் குதிரைக் கூட்டத்தையும், நெடிய பெரிய தேர் நிரைகளையும், உயர்ந்த ஒட்டகங்களை யும், நவநிதிக் குவியல்களையும், நங்கையர் கூட்டத்தையும் குலோத்துங்கன் உடைமையாக்கி உளம் நிறை மகிழ் வெய் திய கருணாகரன் அனந்தவன்மன் அகப்பட்டிலன் என அறிந்ததும், ஒற்றர்களைக் கலிங்க மெங்கும் கணப் பொழுதில் போக்கித் தேடப் பணித்தான். மாலை மறைய மயங்கிருள் நிறையும்போது, அனந்தவன்மன் மலைக் குகை யொன்றில் மறைந்துளான் என அறியவே, வில் வீரர்களையும், வாள் வீரர்களையும், அம் மலையைச் சூழ வரிசையாக அணிவகுத்து நிறுத்தி, விடியும் வரை விழித்து இருந்து காக்குமாறு பணித் தான். கருணாகரன் பணித்த வரை காலைப் போதைக் காணும் வரையும், அவ்வரையைக் கண்மூடாது காத்து நின்றது சோழர் படை. காலையில் அம்மலை அடைந்து அனந்தவன்மனைக் கைப்பற்றிக் கைதியாக்கினான் கருணா கரன்.

இவ்வாறு கலிங்கத்தை வெற்றி கொண்டு, கலிங்கக் காவலனைக் கைக்கொண்டு காஞ்சி அடைந்த கருணாகரனுக்கு வளம் மிக்க வண்டைமா நகரை உரிமையாக்கியதோடு



வரிசைகள் பலவும் வழங்கிச் சிறப்பித்தான் குலோத்துங்கன்.
"பரணிக்கோர் சயம் கொண்டார்" என்ற பாராட்டிற்கு
உரியவரான புலவர் சயம்கொண்டார், கருணாகரன் கண்ட
கலிங்க வெற்றியைத் தம் பாடற் பொருளாக்கிக் 'கலிங்கத்
துப் பரணி' எனும் கன்னித் தமிழ்க் காப்பியம் கண்டு
பாராட்டினர் தொண்டைமான் வண்டையர் கோவை.
கலிங்கத்துப் பரணிக்கு வழிவகுத்த கருணாகரன் வாழ்க!

# 16. நரலோக வீரன்

குலோத்துங்கன் காலத்துக் கல்வெட்டுக்களிலும், அவன் மகன் விக்கரம சோழன் காலத்துக் கல்வெட்டுக்களிலும், இம்மாவீரன் பெயர் கூத்தன், மணவிற் கூத்தன், அரும்பாக்கிழான், பொன்னம்பலக் கூத்தன், காலிங்கர் கோன், காலிங்க ராயன், தொண்டைமான், அருளாகரன், மாறுவதாரன், நரலோக வீரன் எனப் பல்வேறு வகையாக வழங்கப் பெறுகிறது. எனினும், சிதம்பரம் கோயிலைச் சுற்றி இவன் சமைத்த மதிலுக்கும், அதுபோலும் வேறு பல மாடங்களுக்கும் மண்டபங்களுக்கும்: இவன் பெருமையாக இட்டு வழங்கிய பெயர் நரலோக வீரன் என்பதே எனத் தெரிவதால் நாமும் அவனை அப்பெயரினாலேயே அழைப்போமாக!

நரலோக வீரன், தொண்டை மண்டலத்து வடார்க்காடு மாவட்டத்து, செய்யாறு வட்டத்தைச் சேர்ந்த மணப்பாக்கம் எனும் சிற்றூரில் பிறந்து, அதற்கு ஐந்தாறு கல் தொலைவில் உள்ளதும், பாலாற்றங்கரைக்கு அணித்தானதும், அம்மாவட்டத்து வாலாசா வட்டத்தைச் சேர்ந்ததுமான அரும்பாக்கம் ஊரை, உரிமை கொண்டு வாழ்ந்த வேளாண்மரபினனாவன். இவ்வரலாற்று உண்மைகள், கல்வெட்டுக்களில் அவன் "மணவிலார் ஏறு" எனவும், "மணவில்வாழ் கூத்தன்" எனவும், "அரும்பாக்கிழான்" எனவும், "வேளாண் குடிமுதலான்" எனவும் வழங்கப்பெறுவதால் புலனாகின்றன.



தொண்டை நாட்டில் பிறந்த இவன், சோணாட்டுப் படையில் பணியேற்றுப் பாண்டி நாட்டுப் போர்க்களத்திலும் அதற்கும் அப்பாற்பட்ட சேரநாட்டுப் போர்க்களத்திலும் பெற்ற வெற்றிகள் பெரிதும் பாராட்டத் தக்கனவாம். இராசராசன், இராசேந்திரன் போலும் பேரரசர்களால் அடிமை ஆகிச், சோழர் பேரரசிற்கு அடங்கி வாழ்ந்துவந்த பாண்டியர்களும், சேரர்களும் தம்உரிமையை மீண்டும் நிலை நாட்டுதற்காம் நல்வாய்ப்பை நாள்தோறும் எதிர்நோக்கி நெடிதுநாள் காத்துக்கிடந்தனர். அவ்வாறு காத்திருந்த அவர்கள், இராசேந்திரன் மகன் வீரராசேந்திரன் ஆட்சிக்குப் பிறகு அரியணையில் அமர்ந்த அவன் மகன் அதிராசேந்திரன், அரியணை அமர்ந்து ஆறு திங்கள் ஆவதற்குள் இறந்து விட்டமையால் நேர்ந்த, சோணாட்டுச் சோழர் ஆட்சியை அகற்றி விட்டு சுயஆட்சி மேற்கொண்டு விட்டனர்.

அதிராசேந்திரன் மறைவால் அரசிழந்து அல்லல் படும் சோணாட்டின் துயர்தீர்ப்பான் வேண்டி, சோழர் அரியணையில் வந்து அமர்ந்த குலோத்துங்கன், சேரரும், பாண்டியரும் செய்த முடிவினைக் கண்டான் என்றாலும், வடவெல்லைக்கண், மேலைச்சாளுக்கிய விக்கிரமாதித்த மாவீரன் பெரும் படையோடு வந்து நிற்கும் போது, சேர, பாண்டிய நாடுகள் மீது சிந்தையைப் போக்குவது பொருந்தாது என எண்ணிச் சிலகாலம் ஏதும் செய்திலன். விக்கிரமாதித்தனையும், வட கலிங்கவேந்தனையும் வென்று வடவெல்லையை வலுப்படுத்திய பின்னர் குலோத்துங்கன் தென்னகத்து ஆட்சிநிலத்தில் சிந்தையைப் போக்கினன். சேரரையும், பாண்டியரையும் ஒருசேர வெற்றி கொள்ளுதல் வேண்டும். அது மட்டும் போதாது; அவர்கள் உள்ளத்தில் உரிமை வேட்கை மீண்டும் உருப்பெற வழிவகுத்தல் கூடாது என்று கருதினன்; அவ்

வாறு கருதியவன், அதை எண்ணிய எண்ணியாங்கு முடிக்க வல்ல திண்ணியான் யாவன் என ஆராய்ந்து நோக்குவான் கருத்தில், வேங்கி எனவழங்கும் கீழைச்சாளுக்கியத் தலைநகரையும், ஓட்டம் என வழங்கும் ஒரிஸாவையும், இராட்டிர கூடரின் அரசிருக்கையாம் மராட்டியத்தையும் வென்று, வடவரசர்களின் வாழ்வழித்த நரலோக வீரனே வந்துதோன்றினான். ஆகவே அவனை அப்படைக்குத் தலைவனாக்கி அனுப்பினான்.

படையோடு தென்னாடு நோக்கிப் புறப்பட்ட நரலோக வீரன் முதற்கண் பாண்டி நாட்டின் மீது பாய்ந்தான்; பாண்டி நாட்டை ஐம்பெரும் பிரிவுகளாக்கி ஆங்காங்கே இருந்து ஆண்டு கொண்டிருந்த அரசிளங்குமரர் ஐவரும் நரலோக வீரனின் முன் நிற்கமாட்டாது காடுபுகுந்து கரந்து கொண்டனர். பாண்டியரை வெற்றி கொண்ட நரலோக வீரன் அந்நாடெங்கும் வெற்றித் தூண்களை நாட்டினான். பாண்டியர்க்குப் பெருமை அளிக்கும் முத்துக் கிடைக்கும் கொற்கை முதலாம் கடற்றுறைப் பட்டினங்களும் சந்தனம் வளரும் பொதிகை மலையும், குமரி முனையும் மீண்டும் சோழர் உடைமையாயின. இவ்வாறு பாண்டி நாட்டைப் பணிகொண்ட பின்னர் நரலோக வீரன் சேரநாடு சென்று சேர்ந்தான். மலைநாட்டவர் மறங்கொண்டு மலைந்தனர் என்றாலும் மாவீரன் நரலோகவீரன் முன், அவர்தம் ஆற்றல் நிலைத்து நிற்க மாட்டாது மங்கி மறைந்தது. விழிஞம், கோட்டாறு, காந்தளூர்ச்சாலை முதலாம் மேலைக் கடற்கரை மாநகர்களில் நிகழ்ந்த போர்கள் அனைத்திலும் நரலோக வீரனே வெற்றி பெற்றான். காந்தளூர்ச் சாலைக்கண் நிறுத்தி வைக்கப் பெற்ற சேரநாட்டுக் கடற்படை அழிக்கப் பட்டது. கோட்டாறு எரிக்கு இரை ஆயிற்று. சேரமன்னன், செரு வொழிந்து வந்து சோழர் அடிமை ஆயினன்.



இவ்வாறு இரு நாடுகளிலும் பெரு வெற்றி கொண்ட நரலோக வீரன் பாண்டியரும் சேரரும், சோணாட்டின் தலைநகர்க்கு நனிமிகச் சேய்மைக்கண் உள்ளமையால், பேரரசு அறியாவகையில் படைதிரட்டுவது இயலுகிறது. இனி அதற்கு இடந்தராதவாறு ஏற்பன செய்தல் வேண்டும் என்று எண்ணித் தமிழகத்தின் தென்கோடி முனையிடை ஊராகிய கோட்டாறு முதலாம் பகைநாட்டுப் பேரூர்கள் ஒவ்வொன்றும் சோணாட்டின் நிலைப்படைகளை நிறுவிக் காக்க வழிவகுத்து வந்து சேர்ந்தான். நரலோக வீரன் கண்ட இப்பல்வேறு வெற்றிகளையும் ஒரு சேரக் கூறிப் பாராட்டுகிறது விக்கிரம சோழன் உலா.

**"வேங்கையினும்**
**கூட்டார் விழிஞத்தும், கொல்லத்தும் கொங்கத்தும்**
**ஒட்டா இரட்டத்தும், ஒட்டத்தும், நாட்டாது**
**அடி எடுத்து வெவ்வேறு அரசுஇரிய, வீரக்**
**கொடி எடுத்த காலிங்கர் கோன்"**

சிறந்த வீரனாகச் செயலாற்றிய நரலோக வீரன், சிவ பரம் பொருளிடத்தில் சிறந்த பேரன்புடையவனும் ஆவன். அவ்வன்புடைமையால், தில்லையிலும், திருவதிகையிலும் அவன் ஆற்றிய அறச்செயல்கள் அளப்பரியனவாம். தன் பெயர்தாங்கும் பெரிய திருச்சுற்று மாளிகை, நூற்றுக்கால் மண்டபம், தேவாரம் ஓதுவதற்குரிய மண்டபம் முதலாயின வற்றைக் கட்டினான். தியாகவல்லி எனும் திருப்பெயர் பூண்ட சிற்றூர்கள் சிலவற்றைத் தேவதானமாக அளித்தான். மூவர் தேவாரத் திருப்பதிகங்கள் பொறித்த செப்பேடுகளைத் தில்லையில் சேமித்து வைத்தான். திருவிழாக் காலத்தில் தெருக்களில் தண்ணீர் தெளிக்கவும், விளக்கேற்றவும், இளம் மகார்க்கு ஆவின்பால் அளிக்கவும் ஆவன புரிந்தான்.

தன் படைத் தலைவனாகப் பணியேற்றுத் தென் தமிழ் நாடுகளில் அமைதி நிலவும் சோழர் ஆணைசெல ஆவன புரிந்த நரலோக வீரனுக்கு நாடு போற்றும் நல்லன செய்ய விரும்பிய வேந்தன் குலோத்துங்கன், நெய்வணை நகரில் நரலோக வீரன் சமைத்த கோயிலுக்குக் சில விளை நிலங்களைச் சுங்கம் தவிர்த்த சோழ நல்லூர் எனத் தன் பெயரால் பெயர்சூட்டித் தேவதானமாக வழங்கிப் பெருமை செய்தான். தில்லையிலும், திருவதிகையிலும் உள்ள கல்வெட்டுக்களில் காணப்படும் அறுபதுக்கும் மேற்பட்ட அழகிய வெண்பாக்கள், நரலோக வீரனின் பெருமைகளை, பேரறச் செயல்களைப் பாடி பரவுகின்றன.

V2:1 12y7x
N60
109077